

ஆசிரியர் உரை

# தீர்க்கதரிசனத்தில் சபை

## The Church Prophecy

Louis Rushmore

இன்று கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் அங்கம் வகிக்க வேண்டிய ஒரே சபை, இரண்டு ஏற்பாடுகளிலும் ஒருவரால் வாசித்துக் தெரிந்து கொள்ளக்கூடிய சபை, கிறிஸ்துவின் சபைதான். குறிப்பாக பழைய ஏற்பாட்டில் ஒரு வேதமாணாக்கரால் தீர்க்கதரிசனத்தில் சபையைப்பற்றி வாசிக்க முடியும். சத்தியத்தைத் தேடுபவர்கள் அந்த பழைய ஏற்பாடு தீர்க்கதரிசனங்களெல்லாம் புதிய ஏற்பாட்டில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் ஜீவனைக் கொடுத்து சபையை ஸ்தாபித்தபோது நிறைவேறியதைக் காணமுடியும். கிறிஸ்து ஸ்தாபித்த சபைக்கு அவர் ஒருவரே தலையாயிருக்கிறார்.

கிறிஸ்தவம் தொடங்கப்படுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே மனித இனத்துக்கான தேவனுடைய மீட்பின் திட்டத்தில் சபையும் உள்ளடங்கியது என்பது ஒரு ரகசியமாகவே இருந்தது (1பேதுரு 1:10-12). இருந்தபோதிலும், மனித மீட்புக்கான தேவனுடைய திட்டத்தில் சபை ஒருபோதும் மறைக்கப்படவில்லை என்பதை வேத வாக்கியங்களை நேசிக்கும் எந்த ஒரு வேதாகம மாணவரும் மறுக்க முடியாது. ஏனென்றால், புதிய ஏற்பாடு தேவனுடைய மனதை மாண்டு போகும் மனித இனத்துக்கு முழுமையாக வெளிப்படுத்தாமலில்லை. முன்பு இரகசியமாக இருந்ததெல்லாம் இப்போது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ''தேவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் கொண்டிருந்த அநாதித்தீர்மானத்தின்படியே உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகால முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (எபேசியர் 3:9-11).

புதிய ஏற்பாட்டு சபை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் முன்னுரைத்தலாயிருந்தால் பழைய ஏற்பாட்டில் சபை சம்மந்தமான அல்லது சபையைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் இருப்பதை நாம் எதிர் பார்க்க வேண்டும். தேவனுடைய திட்டத்தில் தீர்க்கதரிசனங்களில் சபை எப்போதுமே இருந்து வந்திருக்கிறது.

உண்மையில் பழைய ஏற்பாட்டில் சபையைப்பற்றியும், மேசியாவைப் பற்றியும் நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நிச்சயமாகவே அவையெல்லாவற்றையும் நம்மால் இப்போது பார்க்க முடியாது. ஆனால், சில வகைகளை நாம் இக்கட்டுரையின் வாயிலாக பார்த்தே ஆக வேண்டும்.

இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், பெரும்பாலான, தீர்க்கதரிசனங்கள் வேதபுத்தகத்தின் இரண்டாம் அதிகாரங்களில் இடம்பெற்றிருக்கிறது. சங்கீதம் 2:67; ஏசாயா 2:23; தானியேல் 2:3145; யோவேல் 2:28; அப்போஸ்தலர் 2:1621. வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள அதிகாரங்கள் எல்லாம் வாசிக்க வசதியாயிருக்க வேண்டுமென்பதற்காகவும், எளிதாயிருக்க வேண்டுமென்பதற்காகவும் மனிதனால் பிரிக்கப்பட்டவைகள்தான். இருந்தபோதிலும் சபையைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் பல புத்தகங்களின் இரண்டாம் அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளதில் தேவ செயல் இருக்கத்தான் செய்கிறது. இக்கட்டுரையில் வருகின்ற பக்கங்களில் வேத புத்தகங்களின் இரண்டாம் அதிகாரத்தைப் பற்றியும், வேறுசில மேற்கோள்களையும் நாம் காணமுடியும் அவைகளை தீர்க்கதரிசன சபையின் மாதிரிகளாக நாம் காணமுடியும்.

ஒருவர் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனத்தில் சபையைக் காண்பதற்கு முன்பாக அங்கே பயன்படுத்தப்பட்டிருக்கும் பதங்களின் அர்த்தங்களைப் புரிந்து கொள்வது அவசியமாகும். பெரும்பாலும் தீர்க்கதரிசனத்தில் ராஜ்யமும், சபையும் ஒரே தெய்வீக அமைப்பைத்தான் குறிக்கிறது. நம் ஆண்டவர் ராஜ்யம் சபை ஆகிய இரண்டு பதங்களை ஒன்றுக்கொன்று மாற்றாக பயன்படுத்தியதை ஒருவர் உணர்ந்து கொள்ளும்போது இது தெளிவாகிறது. [மத்தேயு 16:18 19]. அதேபோல், அப்போஸ்தலர்களான பவுல் [கொலோ 1:13] மற்றும் யோவான் [வெளி 1:9] போன்றோர் சபை ராஜ்யம் போன்ற பதங்களை ஒன்றுக்கொன்று மாற்றாக பயன்படுத்தியிருக்கிறார்கள். தீர்க்கதரிசனதின் ராஜ்யமும் சபையும் ஒரே தெய்வீக அமைப்பைத்தான் குறிக்கிறது.

தேவ ஆவியினால் ஏவப்பட்ட புதிய ஏற்பாட்டு வியாக்கியான புத்தகம் இல்லாத பட்சத்தில் சில பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள்

அதன் பயன்பாட்டில் இரண்டர்த்தம் கொண்டதாகவும், தெளிவற்றதாகவும் இருக்கும். **நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணி வைத்தேன் என்றார். தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்** [சங்கீதம் 2:67]. அப்போஸ்தலர் 13:33 லிருந்து ஒருவர் சங்கீதம் 2 இயேசு கிறிஸ்து மூலமாக சபை ஸ்தாபிக்கப்பட்டதைக் காணமுடியும். ''இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச் செய்த வாக்குதத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம்'' [அப்போஸ்தலர் 13:33], எபிரெயர் 1:5 மற்றும் 5:5 வசனங்கள் சங்கீதம் 2:67 புதிய ஏற்பாட்டு சபையைத்தான் குறிக்கிறது என்று வலு சேர்க்கின்றன. அப்படியே, சங்கீதம் 2:67 வசனங்கள் பரிசுத்த பர்வதமாகிய சீயோன் என்று குறிப்பிடுவதன் மூலமாக தீர்க்கதரிசன சபையின் தோற்றத்தை அடையாளப்படுத்திவிடுகின்றன. அதேபோல், பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியும் அதன் புதிய ஏற்பாட்டு இணையும் தீர்க்கதரிசனத்தின் சபை யாரைப் பற்றி பேசுகிறது என்பதை அடையாளப்படுத்துகின்றன – இயேசு கிறிஸ்து.

புதிய ஏற்பாட்டு சபை ஸ்தாபிக்கப்படுவது சம்மந்தமாக மிகப் பிரபலமான பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களுள் ஒன்று ஏசாயா 2:2,3. ''**கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்;** எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.

தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட நித்திய ஆவிக்குரிய ராஜ்யம் கடைசி நாட்களில் ஸ்தாபிக்கப்படும் என்று நாம் பார்க்கிறோம். இந்த ராஜ்யம் அல்லது சபையின் சரீரப்பிரகாரமான வெளிப்பாடு சீயோன் அல்லது எருசலேமில் காணப்படும். இங்கே, எபிரெய மொழிநடையை நாம் கவனிக்க வேண்டும். இங்கே சீயோன் என்பதும், எருசலேம் என்பதும் ஒன்றுதான். அதேபோல், வேதம் என்பதும் கர்த்தரின் வசனம் என்பதும் ஒன்றுதான். ஆகவே, ஏசாயா 2:2,3 வசனங்கள் தீர்க்கதரிசனத்தின் சபை எங்கே, எப்போது தொடங்கப்படும் என்பதை தெளிவாக்குகிறது.

தானியேல் 2:31–45 வசனங்கள் பழங்கால பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு உண்டான மோசமான சொப்பனத்தை விளக்குகின்றன. உங்களுக்கும், எனக்கும் சிலவேளைகளில் நாம் உண்ட

உணவின் காரணமாகவோ, நம்மை மூழ்கடித்த ஏதாவது செயல் பாட்டின் மூலமாகவோ தூக்கத்தில் கெட்ட அல்லது மோசமான சொப்பனம் வரும். ஆனால், இங்கே தேவன் நேபுகாத்நேச்சாருக்கு ஒரு மோசமான சொப்பனத்தை வரச்செய்தார். அந்த சொப்பணத்திற்காண அர்த்தத்தை தானியேல் மூலமாக தேவன் நேபுகாத்நேச்சாருக்கு அறி வித்தார். அந்த சொப்பனத்தின் சுருக்கம் என்னவென்றால், ரோம ராஜ் யத்தின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் ராஜ்யம் அல்லது தீர்க்கதரி சனத்தின் சபையை ஸ்தாபிப்பார் என்பதாகும். ரோம அரசர்கள் ஆட்சி செய்த காலக்கட்டத்தில்தான் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார் கடைசியில் நம் ஆண்டவருடைய ஊழியத்திற்குப் பிறகு ராஜ்யம் அல்லது தீர்க்கதரிசனத்தின் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

யோவேல் 2:28:3:2 தீர்க்கதரிசன சபை ஸ்தாபிக்கப்படுவது சம்மந்த மான ஒரு குறிப்பிடத்தக்க வசனப்பகுதியாகும், இவ்வசனப்பகுதியை அப்போஸ்தலனாகிய பேதுரு சபையின் பிறந்தநாள் என்று மேற்கோள் காட்டி, அதை தீர்க்கதரிசனத்தின் சபைக்குப் பொருத்திப் பார்த்தார் [அப் போஸ்தலர் 2:16–21]. இங்கே, நம் கவனத்தை ஈர்க்கும் சொற்றொடர் **கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்** என்பது சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும். சீயோன் பர்வதத்திலே தப்பியிருப்போர் உண்டு. இதிலிருந்து நாம் தீர்க்கதரிசனத்தின் சபையின் நோக்கம் என்ன? அது எங்கே ஸ்தாபிக்கப்படும் என்று கவனித்தோம். அப்போஸ் தலனாகிய பேதுரு தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்ட படியே இது நடந்தேறுகிறது என்று முன்னுரையை தொடங்குகிறார். ராஜ்யம் அல்லது தீர்க்கதரிசனத்தின் சபை கடைசி நாட்களில் ஸ்தாபிக்கப்பட வேண்டியதாயிருந்தது. அது அப்படியே ஸ்தாபிக்கப் பட்டது. மனித இனம் முதல் நூற்றாண்டிலிருந்தே கடைசி நாட்களில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது. யோவேல் 2 அப்போஸ்தலர் 2 ஆகியவைகள் இணைந்து தீர்க்கதரிசனத்தின் சபை எப்போது ஸ்தாபிக்கப்படும் என்பதை அறிவிக்கின்றன.

அப்போஸ்தலனாகிய பேதுரு யோவேல் இரண்டாம் அதிகாரத்தை மேற்கோள்காட்டிய போது ‘‘கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகிறவ னெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்பதை வலியுறுத்தினார். [அப்போஸ்தலர் 2:21]. சுவிசேஷம் அல்லது புதிய ஏற்பாடு இருவகை யான இரட்சிப்பைப் பற்றி பேசுகிறது. கிறிஸ்தவரல்லாதவர் கிறிஸ்தவ ராகும்போது பெற்றுக்கொள்ளும் இரட்சிப்பு மற்றும் ஒரு கிறிஸ்தவனு டைய வாழ்க்கையில் பாவம் பிரவேசித்துவிடுவதால் அதிலிருந்து இரட்சிப்பு. சுருக்கமாக சொல்லப்போனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே இந்த கடைசி காலத்தில் ஒருவருடைய பாவங்கள் மன் னிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளையாக மாறுவதற்கான வழியை

அறிவித்திருக்கிறார். விசுவாசமுள்ளவனாகி **ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** [மாற்கு 16:16]. நாமெல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டியிருக்கிறபடியால் [11கொரி5:10] மனிதனால் உண்டாக்கப்பட்ட திட்டங்களை தெரிந்து கொள்ளாமல் ஒருவன் இரட்சிக்கப்பட கிறிஸ்து என்ன சொல்லியிருக்கிறாரோ அதைத்தெரிந்து கொள்வதுதான் நமக்குப் பொருத்தமாயிருக்கும். ஏனென்றால், மனிதனால் உண்டாக்கப்பட்ட திட்டங்கள் நித்திய தெய்வீக தயவை நமக்கு பெற்றுத்தரத் தவறிவிடுகின்றன [மத்தேயு 7:2123]. மறுமுனையில், பேதுரு சொன்ன வார்த்தைகளைப் பின்பற்றி கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து புதுப்பிக்கப்பட்ட இரட்சிப்பை பெற்றுக்கொள்ள முடியும். [அப்போஸ்தலர் 8:22;1யோவான் 1:9]. இங்கே தீர்க்கதரிசனத்தின் சபையின் நோக்கத்தோடு கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்கான இரட்சிப்பும் இசைவாக இருப்பதை நாம் காணவேண்டும்.

தீர்க்கதரிசனத்தின் சபை ஸ்தாபிக்கப்படுவது சம்மந்தமான மற்றுமொரு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் [தானியேல் 7:13/ 14] வசனங்களில் காணப்படுகிறது. இங்கே விசேஷமாக நாம் கவனிக்க வேண்டிய வார்த்தைகள் ராஜ்ஜியம்...... நீங்காத நித்திய கர்த்தத்துவம் அவருடைய ராஜ்ஜியம் அழியாததாயிருக்கிறது. பூமிக்குரிய ராஜ்யங்களைப் போலில்லாமல் இந்த ஆவிக்குரிய ராஜ்யமாகிய இந்த திர்க்கதரிசனத்தின் சபை என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் [11சாமுவேல் 7:13 14].

முடிவாக, தீர்க்கதரிசனத்தின் சபை தேவனால் திட்டமிடப்பட்டது. தீர்க்கதரிசனத்தின் சபையைப் பற்றி நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் உண்டு. ''ராஜ்யம்'' சபை போன்ற பதங்களெல்லாம் ஒரே தெய்வீக அமைப்பைத்தான் குறிக்கின்றன. ஆகவே, இயேசு கிறிஸ்துவே ராஜ்யத்தின் ராஜாவாக இருக்கிறார். அவரே சபைக்குத் தலையாகவும் இருக்கிறார். தீர்க்கதரிசனத்தின் சபை சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக யூதேயாவின் மலைகளில் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டது. தீர்க்கதரிசனத்தின் சபையின் நோக்கம் மனித ஆத்துமாக்களை இரட்சிப்பதுதான். கடைசியாக தீர்க்கதரிசனத்தின் சபை என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசனத்தின் சபையை பிதாவிடம் ஒப்புக்கொடுக்க மறுபடியும் வருகிறார் [யோவான் 14:1–3; 1 தெசலோனிக்கேயர் 4:16 17]. இவ்வுலகில் ஒரு மனுஷனோ அல்லது மனுஷியோ தன்னைப் பார்த்து கேட்கவேண்டிய முக்கியமான கேள்வி **நான் இயேசு கிறிஸ்துவால் தீர்க்கதரிசனத்தின் சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறேனா என்பதாகும்** [அப்போஸ்தலர் 2:47].

✝



## நிர்வாக ஆசிரியர் உரை

# நாம் என்ன செய்யப் போகிறோம்?

# What Are We Going To Do?

E.Z.S. Rajanayagam

**அ**ருமையானவர்களே! இயேசு ஆண்டவருடைய பல வார்த்தைகள், அவர் ஏமாற்றம் அடைந்திருக்கிறார் என்று நமக்கு ஐயத்திற்கிடமின்றிச் சொல்லுகிறபடியால், யாரெல்லாம் அவரை ஏமாற்றியிருக்கிறார்கள், எப்படியெல்லாம் ஏமாற்றியிருக்கிறார்கள், எப்பொழுதெல்லாம் ஏமாற்றியிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முயற்சிப்போம். இதன் மூலம், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில், நாமும் அவரை ஏமாற்றும் பெருந்தவறைச் செய்து நித்திய அழிவுக்குச் சென்று விடாதபடி நம்மைக் காத்துக் கொள்வோம்.

### 1. ஊழிய நாட்களில் இயேசு ஏமாற்றம் அடைந்திருக்கிறார்.

பரலோகத் தகப்பனுடைய குமாரனாகிய இயேசுவானவர், யாருக்காக இப்பூமிக்கு வந்து, யாருக்கெல்லாம் நன்மை செய்தாரோ, எவர்களையெல்லாம் நேசித்து ஊழியம் செய்தாரோ, எந்த ஜனங்களை இரட்சிக்க வேண்டுமென்று விரும்பினாரோ, அவர்களாலே அவர் ஏமாற்றத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கிறார். யோவான் நற்செய்தியாளர், இக்கருத்தைத்தான் இரத்தினச் சுருக்கமாக்கி, **அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை** (யோவான் 1;11) என்று எழுதிக் கொடுத்துள்ளார்.

ஒரு சமயம் நமதாண்டவர் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில் சமாரியா, கலிலேயா என்னும் நாடுகள் வழியாகப் போனார். அப்பொழுது, இன்றைக்கும் முற்றிலும் குணமாக்கப்பட முடியாத வியாதியாக இருக்கும் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட குஷ்டரோகிகள் பத்துப் பேர், அவர் முன்பாக வந்து பணிந்து எங்களை சுகமாக்கும் என்று கேட்பதற்கு அந்நாட்களில் அனுமதியில்லாதிருந்ததால், அவருக்கு எதிராக தூரத்திலே நின்று, **இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும்** என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர்

பார்த்து நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி, அவர்கள் **போகையில் சுத்தமானார்கள்** (லூக். 17;10-14) அந்தப் பத்துப் பேருக்கும் கனவிலும் நினைத்துப் பார்த்திராத அற்புத சுகம், விலையுமின்றி, பணமுமின்றி இயேசுவின் வல்லமையால் கிடைத்தது. ஆனால், அவர்களில் ஒருவன் மாத்திரம் நன்றி சொல்லத் திரும்பி வந்ததை இயேசுவானவர் கண்டு, சுத்தமானவர்கள் 10 பேர் அல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? என்றார். (லூக்கா 17:17) எங்கே, என்ற அவரின் கேள்வி, அந்த ஒன்பது பேர்களினிமித்தம் அவர் ஏமாற்றம் அடைந்திருக்கிறார் என்பதையே சொல்லுகிறது.

அடுத்து, உன்னத தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, அன்றைய உலகத்திலிருந்த அனைத்து பட்டணங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, **தாவீதின் நகரம்** என்றும், மகா ராஜாவின் நகரம் என்றும், சீயோன் என்றும் சிலாக்கியம் பெற்ற எருசலேம் பட்டணத்தைப் பார்த்து அவர் கண்ணீர் விட்டழுதாரே (லூக்.19:41) அப் பொழுது அவருக்கு ஏமாற்றம் இருந்திருக்காதா? ஆதியிலிருந்து தேவ னால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளைத் தள்ளிப் போட்ட பட்டணம், தன்னையாகிலும் ஏற்றுக்கொள்ளாதா? என்று அவர் எண்ணியிருக்க மாட்டாரா? மோசேயின் பிரமாணம், தன்னைப்பற்றிச் சொல்லியிருப் பதை அறிந்து, உணர்ந்து தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்த்திருக்க மாட்டாரா? அப்படி எண்ணியிருக்காவிட்டால், எதிர் பார்த்திருக்காவிட்டால், எதற்காக அந்தப் பட்டணத்தைப் பார்த்து அவர் கண்ணீர் விட்டழுதிருக்க வேண்டும்? எந்த ஓர் ஏமாற்றமும் இல்லாமல் அவருக்கு கண்ணீர்வந்திருக்குமா? சொல்லுங்கள். எருசலேம் பட்ட ணத்தார் தங்கள் செய்கையால் அவரை ஏமாற்றியே இருக்கிறார்கள்.

இவைகளை நாம் பார்க்கும்போது, அவரை நம்பி அவரிடம் வந்து நன்மை பெற்றவர்களாலேயே அவருக்கு ஏமாற்றம் கிடைத்தி ருக்கிறதென்பதையும், நாங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வர்கள் என்று சொல்லிக் கொண்டவர்களாலேயே அவருக்கு ஏமாற்றம் கிடைத்திருக்கிறதென்பதையும், இயேசுவுக்கு நெருக்கமாக இருந்த வர்களிடத்திலிருந்தும் அவருக்கு ஏமாற்றம் கிடைத்திருக்கிறதென்ப தையும் அறிய முடிகிறது. நாம் இதிலே எந்த ரகத்திலே வருகிறோ மென்பதை அப்படியே நெஞ்சின் மேல் கைவைத்து யோசித்துக் கொண்டே தொடர்ந்து படியுங்கள்.

ஏன் இப்படிச் செய்தார்கள் என்று எனக்கும் விளங்கவில்லை. ஆனால், தன்னால் நேசிக்கப்பட்டு, போஷிக்கப்பட்டு, போதிக்கப்பட்ட சீடர்கள், தான் சொன்னதைக் குறித்துக் கவலைப்படாமல், அதைக் குறித்த எண்ணமற்றவர்களாயிருந்தது எவ்வளவு ஏமாற்றத்தை அந்நா ளில் தந்திருக்கும் என அப்படியே எண்ணிப் பாருங்கள்.

11. **உயிர்த்தெழுந்த நாளிலும் இயேசு ஏமாற்றம் அடைந்திருக்கிறார்.**

நமதாண்டவருக்கு ஏற்பட்ட ஏமாற்றம் ஊழிய நாட்களோடு முடிந்து விட்டது என்று நாம் கருத முடியாதபடி, அதற்கு பின்பும் நடந்திருப்பதற்கான சாத்தியக் கூறுகள் நன்றாகவே தெரிகிறது. ஆம், இயேசுவானவர் உயிர்த்தெழுந்த நாளிலும், அவர் ஏமாற்றம் அடைந்திருக்க வாய்ப்புண்டு. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, அது ஒரு அற்புதமான நாளாயிற்றே, அந்த நாளில் ஏமாற்றம் அடைவதற்கு ஒரு காரணமும் இல்லையே என்று எண்ணத்தோன்றும். நீங்கள் ஒவ்வொருவரும் எண்ணுவது போல் அந்த நாள் ஒரு வெற்றித் திருநாள் தான். மரணத்தின்மீது, கல்லறையின்மீது, பாவத்தின்மீது வெற்றி கொண்ட பொன்னாள்தான். யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால், அவருடைய கல்லறைக் கருகில் நீங்கள் இன்னும் கொஞ்சம் நெருங்கிப் பார்த்தால் அவர் ஏமாற்றமடைந்திருக்க வேண்டும் என்பதை நன்றாக உணரமுடியும்.

ஆம், மரணத்தின் மீது வெற்றி கண்டு ஜெயக் கிறிஸ்துவாக கல்லறையிலிருந்து வந்த போது, ஆஹா என் ஆண்டவர், வாக்களித்தபடி எழுந்து விட்டார் என்று ஓடிச் சென்று கட்டிப் பிடித்து ஆரத் தழுவவும், யூத ராஜசிங்கம் கல்லறையிலிருந்து வெளியே வந்து விட்டார் என்று ஆனந்தமாய் ஆர்ப்பரிக்கவும், தோள்களின் மீது சுமந்து கொண்டு எருசலேமின் வீதிகளில் ஓசன்னா சொல்லி அழைத்துச் செல்லவும் அங்கே ஒருவரும் இல்லை. அவர் எழுந்திருக்கும் போது, கல்லறையினிடத்தில் ஆள் எதற்கு என்ற ஒரு கேள்வியை நீங்கள் இங்கே கேட்கலாம். ஆனால், சீடர்களுக்கு அவர் என்னவெல்லாம் சொன்னார். எப்படியெல்லாம் போதித்தார் என்பதை நீங்கள் அப்படியே படித்துப் பார்ப்பீர்களானால், அவருடைய சீடர்கள் கல்லறையினருகே காத்திருக்க வேண்டும் என்பதை நீங்களே ஒருவாறு ஒத்துக் கொள்வீர்கள்.

மத். 16:21, அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதை தம்முடைய சீடர்களுக்கு சொல்லத் தொடங்கினார் என்றுள்ளது. அதுமுதல் என்பதை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். ஏனெனில், தான் மூன்றாம் நாளில் எழுந்திருப்பேன் என்பதை இவர் சீடர்களுக்குப் பல முறை சொல்லியிருக்கிறார். அடுத்த அதிகாரத்தின் 23ம் வசனத்தைப் பாருங்களேன். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளில் உயிரோடே எழுந்திருப்பேன் என்பதைத் தன்னுடைய சீடர்களிடம் தெளிவாகவும், தீர்க்கமாகவும் தொடர்ந்து சொல்லி வந்தும் கூட, ஒருவர் கூட அங்கே இல்லை.

ஒருவரும் இல்லையென்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்? இரண்டு மரியாள்கள் அங்கே போகவில்லையா என்று ஒருவேளை நீங்கள் கேட்கலாம் (மத்.28;1) உண்மை தான். அவர்கள் போன நோக்கம் என்ன? சுகந்த வர்க்கமிடும்படி கல்லறைக்குப் போனார்கள். போனவர்கள் ''கல்லறையின் வாசலிலிருக்கும் கல்லை, நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள் (மாற்கு. 16:13) இதிலிருந்து என்னத் தெரிகிறது? மரித்த இயேசுவுக்காகத்தான் சென்றார்களே ஒழிய உயிர்த்தெழும் இயேசுவைக் காண அல்ல. போதுமா?

### III. **வருகையின் நாளிலும் ஏமாற்றம் இருக்கப் போகிறதா?**

தன்னுடைய ஊழியத்தின் நாட்களில் ஏமாற்றமடைந்த இயேசுவானவர், உயிர்த்தெழுந்த நாளிலும் ஏமாற்றமடைந்திருக்க வாய்ப்புண்டு என்று பார்த்தோம். இந்த இயேசுவானவர், மீண்டும் நியாயாதிபதியாய் வரும்போது, அவர் இன்னொருமுறை ஏமாற்றத்தைச் சந்திக்காமல் பார்த்துக் கொள்வது அவருக்குப் பிரியமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லுகிறவர்களின் கடமையாயிருக்கிறது. ஒருவேளை அவர் வரும்போது, அவருடைய உபதேசத்தின்படி வாழ்கிறோம் என்பவர்கள் அவரின் வருகைக்காகக் காத்திராமல் இருந்தால், நிலைமை எப்படியிருக்குமென்று தயவாய் எண்ணிப்பாருங்கள்!

கல்லறையிலிருந்து மூன்றாம் நாளில் எழுந்திருப்பேன் என்று சொல்லி அதன்படி உயிர்த்த அதே இயேசுவானவர் மீண்டு வந்ததோடு, மீண்டும் வருகிறேன் என்றும் சொல்லியுள்ளார். .....நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் (யோவான் 14:3) என்று வாக்களித்துள்ளார்.

மேலும், இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மீண்டும் வருவார் என்றார்கள், (அப்.1:11). இன்னும், அப்போஸ்தலன் பவுல் தெசலோனிக்கேயருக்குச் சொல்லும்போது ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்'' (1.தெச.4;16) என்று கூறியுள்ளார்.

மேற்சொன்ன இந்த வசனங்கள் எல்லாம் அவருடைய வருகை நிச்சயம் என்று சொல்லுகிறது. சொன்னபடி எப்படி எழுந்தாரோ, அதேபோல வாக்களித்தபடி திரும்பவும் வரப்போகிறார். எந்த சந்தேகமுமில்லை, அவருடைய வருகையைக் குறித்து 300க்கும்

அதிகமான புதிய ஏற்பாட்டு வசனங்கள் நேரிடையாகவோ, மறைபொருளாகவோ எடுத்துச் சொல்லுகிறது. **இப்படிப்பட்ட மகத்தான நாளுக்காக நாம் விழித்திருக்க வேண்டுமென்று, இயேசுவானவர் திரும்பத் திரும்பச் சொல்லியுள்ளார். உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்** (மத்.24;42) என்று. **மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்** என்றும் கூறியுள்ளார். (25;13). ஆகவே, அவருடைய வருகைக்காக தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் விழிப்புடன் காத்திருக்க வேண்டியது அவசியம். அதுவும், எப்படி? ரோமருக்கும், கொரிந்தியருக்கும் பவுலடியார் எழுதும் போது பொறுமையோடே காத்திருக்க வேண்டுமென்றும் (ரோமர்.8;25). ஆவலோடே காத்திருக்க வேண்டும் என்றும் சொல்லியுள்ளார். (1.கொரி 1;7)

அப்படியானால், அருமையானவர்களே கிறிஸ்துவின் வருகைகாக நாம் ஆவலோடே காத்திருக்கிறோமா? அந்த நாள் எதிர்பார்க்கப்படும் ஒரு நாளாக நமக்கு இருக்கிறதா? அந்த நாள் எப்பொழுது இருக்குமென்று திட்டமாகத் தெரியாதபடியால், வேதம் அந்த நாளையும், நேரத்தையும் குறித்து வெளிப்படுத்தாதபடியால் (மாற்கு 13:32) நாம் ஒவ்வொரு நாளிலும், ஆயத்தமாகவும், எதிர்பார்க்குதலோடும் இருக்க வேண்டுவது அவசியம். ஆனால், கேள்வியென்னவெனில் நாம் அப்படியிருக்கிறோமா என்பதுதான். ஒருவேளை, அவருக்காக நாம் ஆவலோடே காத்திருக்கிறவர்களாக இல்லையெனில், அவருடைய ஊழியத்தின் நாட்களிலும், அவர் உயிர்த்த நாளிலும், அவரைப் பின்பற்றினவர்கள் செய்த அதே தவறை நாமும் செய்கிறவர்களாக இருப்போம். அதாவது இயேசு கிறிஸ்துவை அந்த மகா நாளிலே நாம் ஏமாற்றத்திற்கு உட்படுத்துகிறவர்களாய் இருப்போம்.

இங்கே ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். இயேசுவை அவருடைய ஊழியத்தின் நாட்களிலும், உயிர்த்தெழுந்த நாளிலும் ஏமாற்றத்திற்குள்ளாக்கினவர்களுக்கும், வருகையின் நாளிலே ஏமாற்றத்திற்கு உட்படுத்துகிறவர்களுக்கும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. ஆம், அவர்கள் தங்கள் செய்கையிலிருந்து திருந்துவதற்கும், அவருக்குப் பிரியமானதொரு வாழ்க்கையை நடத்துவதற்கும் வாய்ப்பு கிட்டியது. பெந்தெகொஸ்தே நாளிலும், அதைத் தொடர்ந்தும், கண்ணீர் விடப்பட்ட எருசலேம் நகரிலிருந்து பல ஆயிரம்பேர் இரட்சிப்படைந்து தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை நடத்தியுள்ளனர்.

அவருடைய சீடர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் எப்படி வாழ்ந்தனர் என்பதைச் சொல்லவே தேவையில்லை. நமக்குத் தெரியும் தானே. ஆனால், வருகையின் நாளில் அவரை ஏமாற்றத்திற்குள்ளாக்குகிறவர்களுக்கு மறுவாய்ப்பு என்பதே இல்லை. **அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்பதைத் தவிர, அவர் வேறொன்றும் பேசமாட்டார்.**

ஆகையால், எச்சரிப்பாயிருந்து தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய நம்மை ஒப்புக் கொடுப்போமாக ஆமென்! ✝

---

## தெய்வீக இரட்சிப்பு

தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றிய சுருக்கமான வார்த்தைகள் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாக்கியங்களிலிருந்தே வெளிப்படுத்தப்பட்டன. **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** (மாற்கு 16 : 16 ). இரட்சிப்படைய இதைவிட சுலபமான வழி எதுவும் இருக்க முடியாது. மிக முக்கியமாக மனித மாற்று எதுவும் இதற்கு இணையாகாது ( மத். 7 : 21 – 23 ). மேலும், கிறிஸ்துவின் நியாயாசனத்தை எதிர்கொள்ளாமல், வேறு வழியில், முத்துக்களாலான பரலோக வாசல் வழியாய்ப் பிரவேசித்து, அதன் தங்க வீதிகளில் யாராலும் நடக்க முடியாது ( I கொரி. 5 : 10 ; வெளி. 21 : 21)

இரட்சிப்பு சம்பந்தமாக யாரும், இப்பூமியிலும், நித்தியத்திலும் தேவனோடு சமரசப் பேச்சுவார்த்தை நடத்த முடியாது. மேலும், நியாயத்தீர்ப்பின் நாளில், **கர்த்தாவே நாங்கள் இவைகளையெல்லாம் உமக்கென்றுதான் செய்தோம். நீர்தான் அவைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை, அதனால் சற்றே காத்திடும்** என்று யாரும் சொல்லமுடியாது.அப்படியே சொன்னாலும், அது எதையும் சாதிக்காது. இரட்சிப்பு சம்பந்தமாக, நமது தவறான தெரிந்துகொள்ளுதலினால் ஏற்படும் நித்திய துயரத்தைத் தவிர்க்க, இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கவனித்து, அதற்குக் கீழ்ப்படிந்து, மெய்யான தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தைப் பெற்றிடுங்கள்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| தீர்க்கதரிசனத்தில் சபை | Louis Rushmore | ... 1 |
| நாம் என்ன செய்யப் போகிறோம்? | E.Z.S. Rajanayagam | ... 6 |
| வேலைக்கார மூப்பர் | Jerry Bates | ... 14 |
| ஆரோக்கியமான வார்த்தைகளின் ... | Byron Nichols | ... 17 |
| தீயோனின் தீக்கணைகள் | P.C. Philemon Rajah | ... 21 |
| ஒருவரும் கெட்டுப்போக விரும்பாமல்... | B. Arjunan | ... 26 |
| கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாடு | E.Z.Selvanayagam | ... 31 |

**தேவன் – God**

| | | |
|---|---|---|
| தேவனுக்குப் பிரியமாயிருத்தல் | Mark Phillips | ... 37 |
| தேவன் கட்டுப்பாட்டில் இருக்கிறார் | Ronald D. Bryant | ... 40 |
| கிறிஸ்துவின் நிறைவு | Charles Cash | ... 43 |
| நம் தேவன் | | ... 46 |

**தேவனுடைய வார்த்தை – The Word of God**

| | | |
|---|---|---|
| வேதாகமத்தின் ஊடே ஓர் நடை | Paul Halland | ... 47 |
| இவ்வுலகம் எப்படி முடிவடையும்? | David A. Sargent | ... 53 |
| தேவனுடைய வார்த்தை | Greg Tidwell | ... 55 |
| யோவான் ஸ்நானன் எலியாவா... | Shane Fisher | ... 56 |

**இரட்சிப்பு – Salvation**

| | | |
|---|---|---|
| கல்லறைத் தோட்டத்தில் மிகப்பெரிய ... | Vance Hutton | ... 59 |
| தற்காலிகமான காரியங்கள் நிரந்தர... | Joe W. Nichols | ... 63 |
| கிறிஸ்துவுக்குள் சுதந்திரம் | Vance Hutton | ... 66 |

சபை – The Church

| | | |
|---|---|---|
| உண்மையான சபையினிடத்தில் ... | Ken Tyler | ...70 |
| இயேசு எங்கே ஆராதிப்பார் | Allen Webster | ...71 |
| நான் உம்முடைய ராஜ்யத்தை ... | Jimmy Young | ...74 |
| ஒரு மணவாட்டி தன்னுடைய மண... | Glenn Colley | ...77 |
| அப்போஸ்தலருடைய நடபடிகள் ... | | ...80 |

சாட்சியங்கள் – Evidences

| | | |
|---|---|---|
| நம்மால் மறுக்க முடியாத ... | Betty Burton Choate | ...81 |

ஆராதனை – Worship

| | | |
|---|---|---|
| சபைக்கு போவதற்கான நேரம்... | Steve Higginbotham | ...85 |
| வாழ்க்கையின் சாராம்சம் கொடுத்தலே | Stephen D. Eckstein Jr | ...87 |
| ஆராதனையை விளையாட்டாகவும்... | Patrick Morrison | ...90 |

வாழ்வதற்கான உபதேசம் – Doctrine to Live by


| | | |
|---|---|---|
| இயேசுவைப் பிரசங்கியுங்கள் | Kevin L.Moore | ...94 |

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை – Daliy Christian Living

| | | |
|---|---|---|
| தேவையில்லாமல் குடியிருப்... | Dan Wheeler | ...96 |
| யார் சாந்த குணமுள்ளவர்கள்? | Greely Kirkpatrick | ...98 |
| என்ன விலை கொடுக்க ... | Clarence Deloach. Jr | ...100 |

செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action

| | | |
|---|---|---|
| திறந்த வாசல்கள் | J.C.Choate | ...102 |
| இலக்கை நோக்கித் தொடருதல் | Wayne Barrier | ...105 |
| எத்தியோப்பிய மந்திரி மனமாற்றம் | | ...107 |
| வசன ஆராய்ச்சி | | ...108 |



இணை ஆசிரியர் உரை

# வேலைக்கார மூப்பர்

## The Servant Elder

**Jerry Bates**

சபையின் ஆரம்ப கால முதல் தேவன் சபையானது மூப்பர்களாலும் உதவிக்காரர்களாலும் வழிநடத்தப்பட வேண்டுமென்று ஆணையிட்டிருந்தார். ஆனால், மனிதன் பல நூற்றாண்டுகளாக ஆளுகை அமைப்பின் இத்தெய்வீகத்திட்டத்தை தொடர்ந்து திரித்து அதற்கு பல்வேறுபட்ட மாற்று வழிகளை கண்டுபிடித்திருக்கிறான். இருந்தபோதிலும், தேவனுடைய திட்டத்தை பின்பற்ற விரும்பும் சபைகள் மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்றும் தேவனுடைய எளிய திட்டத்தால் தொடர்ந்து வழிநடத்தப்படுகிறார்கள்.

தலைமைத்துவம் என்பது ஓர் அருமையான பொறுப்பாயிருக்கிறது. வேதாகமத்தில் தலைவர்களாக இருக்கவேண்டியவர்கள் தங்கள் கடமைகளை சரியாகச் செய்ய தவறிய போது கடுமையான வார்த்தைகள் அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மோசமான மேய்ப்பனைப்பற்றி எசேக்கியல் [34:1-6] ல் ஓர் அருமையான சித்திரம் தீட்டப்பட்டுள்ளது. மேலும், ஏசாயா இஸ்ரவேலரின் தலைவர்களை ஒன்றும் அறியாத குருடர் என்றும், குலைக்காத ஊமையான நாய்கள் என்றும் கடுமையாகச்சாடி அவர்களுக்கு அடுத்தடுத்து **ஐயோ**க்களைஅறிவிக்கிறார். இந்த யூதத்தலைவர்கள் நீதிக்கு மாதிரிகளாக இருந்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து மத்தேயு 23-ல் பார்த்து அப்படிப்பட்டவர்களைப் எட்டு முறை மாயக்காரர் என்றழைக்கிறார். தெளிவாகவே யாரும் இவ்விதமான மாதிரியைப் பின்பற்றக் கூடாது.

சிலர் மூப்பர்கள் வியாபர மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்று நினைக்கிறார்கள். சில இடங்களில் மூப்பர்கள் வியாபார ஸ்தாபனங்களில் இயக்குநர்கள் குழுவை கையாள்வதுபோல் சபையை நடத்த முயற்சிக்கிறார்கள். சில வேளைகளில் அவர்கள் தாங்களாகவே முடிவெடுத்து அதைப் பின்பற்றும்படி சபையைக் கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால், இந்த மாதிரி வேதாகமத்தின்படியானதல்ல.

ஆவிக்குரிய தலைமைத்துவத்துக்கு வேதாகமம் பிரதானமாக பயன்படுத்தப்பட்டிருக்கும் உருவகம் மேய்ப்பர் என்பதாகும். மேய்ப்பன் மற்றும் மேய்ப்பனுக்கு மந்தையோடிருக்கும் உறவு பற்றி 500க்கும் மேற்பட்ட முறை வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிரதான மேய்ப்பராயிருக்கிறார் இன்றைய ஆவிக்குரிய தலைவர்கள் அன்பான சேவை மூலமாகவும், உண்மையான உறவின் மூலமாகவும் கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும். வேலைக்காரர்மீது பிரபுத்துவத்தைச் செலுத்துவதாக இருக்கக் கூடாது.

சபைக்கும் மூப்பருக்கும் உள்ள உறவை விவரிப்பதற்கு மேய்ப்பன் ஆடு உருவக நடையை பயன்படுத்தியிருப்பது மூன்று காரியங்களை உள்ளடக்கியிருக்கிறது. முதலில், மூப்பர் எப்போதும் அணுகக் கூடியவராக இருக்க வேண்டும். எப்படி ஒரு மேய்ப்பன் ஆடுகளோடு அதிக நேரத்தை செலவு செய்கிறானோ அதே போல் உறவை மேம்ப டுத்த ஒரு மூப்பன் ஆவிக்குரிய மந்தையோடு அதிக நேரத்தை செல விட வேண்டும்.இரண்டாவது மேய்ப்பன் ஆடுகளுக்கு பொறுப்பாளி யாயிருக்கிறார். ஆடுகளுக்கு என்னத் தேவையோ அதைக் கொடுக்கிறார். இவ்விதமாக ஒரு மூப்பன் ஓர் ஆவிக்குரிய மந்தையின் நலனுக்கு பொறுப்பாளியாயிருக்கிறார். ஒரு மூப்பர் மந்தையின் பலவீனங்களை வைத்து மந்தையை குற்றப்படுத்து கிறவராக இருக்கக்கூடாது. மாறாக மந்தையின் குறைகளை குறித்தும், பெலவீனங்களைக்குறித்தும் பரிதபிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். கடைசியாக நம்பிக்கை சம்பாதிக்கப்பட வேண்டும். இந்த நம்பிக்கை ஒருவர் மூப்பராவதற்கு முன்பாகவே அவர்மீது மற்றவர் களுக்கு உண்டாக வேண்டும். நாம் கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கை வைக்கிறோம். ஏனென்றால், அவர் வாக்குத்தத்தத்தை எப்போதும் நிறைவேற்றுகிறார்; இவ்விதமாக ஒரு மூப்பர் எல்லா நிலைகளிலும் நம்பத்தகுந்தவராக இருக்க வேண்டும்.

**மூப்பர்கள் மந்தைக்கு மாதிரிகளாக இருக்க வேண்டும்.**

சிலர் உண்மையாகவே மூப்பர்களுக்கு அதிகாரமெல்லாம் இல்லை, அவர்கள் தங்கள் முன்னுதாரணத்தால் வழிநடத்துகிறார்கள் அவ்வளவுதான் என்று தவறாக முடிவெடுத்திருக்கிறார்கள். இங்கே நாம் அக்கறைக்காட்டுவது அவர்களுடைய அதிகாரத்தையல்ல. அவர் அவர்கள் எப்படி மாதிரிகளாக இருக்கிறார்கள் என்பதைத்தான். ஒரு மூப்பர் சரியான முன்னுதாரணமாக இருந்தால் மற்றவர்கள் அவர் களுடைய தலைமைத்துவத்தை மகிழ்ச்சியாகப் பின்பற்றுவார்கள்.

வாழ்வது என்பதை மற்றவர்களுக்கு வழிகாட்டுவதாயிருக்கிறது. மூப்பர்கள் பணி வெறுமனே மற்றவர்களை வேலை வாங்குவதல்ல. மாறாக, தேவனுக்காக வேலை செய்வது. எப்படி அவர்களுடைய பிரதானமான வேலை ஆலோசனை வழங்குவதுதான். இவ்விதமாகத் தான் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் தம்மை தொடர்புபடுத்திக் கொண்டார். நம்இரட்சகர் புறஜாதியருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும் பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்'' என்று சொல்கிறார்.

மூப்பர்கள் தேவனுக்கென்று சிறந்த சேவையைச் செய்வதற்காக மற்றவர்களை உருவாக்க வேண்டும் (எபேசியர் 4:12). மற்றவர்களை உருவாக்குவது அல்லது ஆயத்தப்படுத்துவதென்பது அவர்களுக்கு செய்யும்படியாக வேலையைக் கொடுப்பது மட்டுமல்ல. ஜனங்கள் தங்கள் திறமைகளைத் தாங்களே கண்டுபிடித்து அதை வளர்த்துக் கொண்டு அவர்களுக்கு உதவுதாகும். ஒவ்வொரு அங்கத்தினரும் சரியாக உருவாக்கப்பட்டு கர்த்தருக்காக வேலைச்செய்யும்போது சபை ஆவிக்குரிய ரீதியிலும் எண்ணிக்கையிலும் வளர்ச்சி அடையும்.

மூப்பர்களுடைய கடைசி செயல்பாடு அநேகமாக இதுதான். அது, முக்கியமான செயல்பாடாக இருக்க வேண்டும். அதென்னவென்றால், அது மந்தையை பாதுகாப்பதாகும். எப்படி ஒரு மேய்ப்பன் மந்தையை கொடிய விலங்குகளிடமிருந்து பாதுகாக்கிறானோ அதுபோல் மூப்பர்கள் மந்தையை ஆவிக்குரிய பிரகாரமாக பாதுகாக்க வேண்டும். பவுல் எபேசு சபை மூப்பர்களுக்கு இதைத்தான் எச்சரிக்கையாக விடுத்தார் (அப்போஸ்தலர் 20:29-31). மூப்பர்களின் கடமை மந்தையை உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் பாதுகாப்பதாகும். இதற்கு நல்ல உபதேசத்திலிருந்து கள்ள உபதேசத்தை பிரித்துப் பார்க்கும் ஞானமும் தைரியமும் தேவையாகும்.

மேற்சொல்லப்பட்ட செயல்களை செய்வதென்பது ஒரு மிகப்பெரிய வேலையாகும் இது ஓர் அருமையான பொறுப்பும் கூட இருந்தபோதிலும் இதைவிட ஒருவர் கர்த்தருக்காக பெரிய வேலை ஒன்றையும் செய்ய முடியாது. ''கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான் (தீமோத்தேயு 3:1) அவன் கனத்துக்கு உற்சாகத்திற்கும் பாத்திரனாயிருக்கிறான். ✝



## ஆரோக்கியமான வார்த்தைகளின் மாதிரி

## The Pattern of Sound Words

Byron Nichols

**பொ**துவாக வேதாகமத்தில் **ஆரோக்கியம்** எனும் வார்த்தை ஒன்றை விவரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பெயர் உரிச்சொல்லாக பயன்படுகிறது. இவ்வார்த்தைக்கே உரிய பொருள் சரீரப்பிரகார மாகவோ அல்லது ஆவிக்குரிய பிரகாரமாகவோ நல்ல ஆரோக்கியத்துடன் அல்லது நல்ல நிலையில் ஒருவர் இருப்பதாக இருக்கிறது. ஆரோக்கியம் அல்லது நல்ல என்கிற வார்த்தையை பொதுவாக உலகப் பிரகாரமாக நாம் பலவிதங்களில் பயன் படுத்தினாலும் கூட கர்த்தருடைய வார்த்தையில் பெரும்பாலும் கீழ்க்கண்டவாறுதான் பயன்படுத்தப்படுகின்றன.

வேதவாக்கியங்களில் இவ்வார்த்தை எவ்விதமாக பயன் படுத்தப்படுகிறது என்பது பற்றியது நாம் பார்ப்போம்.

Sound என்னும் ஆங்கில வார்த்தை தமிழ் வேதாகமத்தில் எப்படி அழைக்கப்படுகிறது என்பது பற்றி நாம் பார்ப்போம்.

1. நம் அன்றாட வாழ்க்கையில் மற்றவர்களைப் பற்றி விசாரிக்கும் போது சுகமாயிருக்கிறீர்களா, அல்லது யாரோ ஒருவர் சுகமாயிருக் கிறாரா அல்லது நலமாயிருக்கிறாரா என்று கேட்போம். உதாரணமாக, நமக்குத் தெரிந்தவர் ஒருவர் காணாமல் போய்விட்டார் என்று வைத்துக் கொள்வோம். சில நாட்களுக்குப் பிறகு அதிர்ஷ்டவசமாக எவ்வித தீங்குமின்றி நல்ல நிலையில் திருப்திகரமான நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டார் என்றால் அவரை நல்ல அல்லது சுகமான நிலையில் இருப்பதாகச் சொல்வோம்.

இவ்வார்த்தையை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து லூக்கா 15:27 ல் பயன்படுத்துவதை நாம் கவனிக்கமுடியும். இங்கே கெட்ட குமாரன் வீடுதிரும்பும் சம்பவத்தைப் பற்றி பேசும்போது **அவர்**

**மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காக கொழுத்த கன்றை அடிப்பித்தார் எனும் வசனத்தில் சுகத்துடனே** என்னும் வார்த்தையை கவனிக்க வேண்டும். இச்சம்பவத்தில் வழிதப்பிப் போன அந்த கெட்ட குமாரன் மறுபடியும் வீட்டிற்கு சுகமாக அல்லது நல்ல நிலையில் இருக்கிறார் என்றுதான் பொருள்படும்.

2. மெய்ஞ்ஞானம். sound என்னும் ஆங்கில வார்த்தை நீதிமொழிகள் 2:7 ல் <u>**மெய்**</u> என்று மொழியாக்கம் செய்யப் பட்டிருக்கிறது. அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார். அதேபோல், நீதிமொழிகள் 8:14 ல் ஆலோசனையும், மெய்ஞ்ஞானமும் என்னுடையவைகள் என்று பார்க்கிறோம்.

3. நீதிமொழிகள் 14:30 ல் சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன் என்று தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது இங்கே sound எனும் ஆங்கில வார்த்தை சுகம் அல்லது ஆரோக்கியம் எனும் பொருளில் சொல்லப்பட்டுள்ளது. இந்த நீதிமொழியின் இரண்டாவது பகுதி முதல் பகுதியோடு முற்றிலும் வேறுபடுகிறது. அதாவது, பொறாமையோ எலும்புருக்கி என்று ஆரோக்கியத்திற்கு எதிர்ப்பதமாக இங்கே பதிவு செய்யப்படுகிறது. நம் ஆவிக்குரிய இருதயம் நிச்சயமாகவே நம் சரீரப்பிரகாரமான இருதயத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

4. ஆங்கில வேதாகமத்தில் sound என்று பயன்படுத்தப் பட்டிருக்கும் வார்த்தை தமிழ் வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் ''ஆரோக்கியமான'' என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக, தீத்து 2:ல் குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமில்லாத நம்முடைய பேச்சு நம்மை பலவிதமான பிரச்சனைகளில் சிக்க வைத்து விடும். அதிலிருந்து நாம் விடுபடுவது அவசியம் என்று எச்சரிக்கிறது.

5. ஆரோக்கியமான உபதேசம்.

1 தீமோத்தேயு 1:9,10 வசனங்களில் பவுல் பலவிதமான பாவங்களை பட்டியலிடுகிறார். குறிப்பாக 11 ஆம் வசனத்தில் ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் என்று முடிவுக்கு வருகிறார். மறுபடியும் 11தீமோத்தேயு 4:34 ல் பவுல் இளம்பிரசங்கியான தீமோத்தேயுவை எச்சரிக்கும்போது **ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனமில்லாத காலம் வரும்** என்று எச்சரிக்கிறார்.

தேவன் நம்மை உண்டாக்கினார். ஆனால், ஆவிக்குரிய ஆற்றலையும் பெலனையும் கொண்டுவரும் உபதேசத்தைத் தழுவ தவறிவிட்டு முட்டாள்தனமான முடிவுகளை நாம் எடுத்தால் அதற்கு எந்த விதத்திலும் தேவன் பொறுப்பாக மாட்டார். எல்லா உபதேசங்களும் ஒன்றானதல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்வது அவசிமாயி ருக்கிறது. சில உபதேசங்கள் தவறானவைகளாயிருந்து தவறான ஆரோக்கியத்தை ஊக்கப்படுத்துகின்றன. இது மிகப்பெரிய ஆவிக்குரிய பின்னடைவை நமக்கு ஏற்படுத்தும்.

மூப்பர்களுடைய தகுதியம்சங்களையும், கடமைகளையும் நாம் பார்க்கும்போது **ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனாயிருக்கும்படிதான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மை யான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்** என்று பவுல் மூலமாக நாம் அறிவிக்கப்பட்டிருக்கிறோம். [தீத்து 1:9]. நாமெல்லோருமே ஆகாத ஆவிக்குரிய தன்மையையும், உலகத் தன்மையையும், நம்மைவிட்டு அகற்ற உதவும் ஆரோக்கிய மான உபதேசத்தை அறிந்து கொள்ளவும் அப்பியாசப்படுத்தவும் பொறுப்பைப் பெற்றிருக்கிறோம். ஆனால், இக்காரியத்தில் நம் மேய்ப்பர்கள் அதிக விவேகிகளாக இருந்து நமக்கு உதவிசெய்து மந்தையை தவறான உபதேசத்தில் சிக்கவைக்க நினைப்பவர்களை தோற்கடிக்க நமக்கு உதவ வேண்டும்.

6. ஆரோக்கியமான வசனங்களின் சட்டம்

இன்னொரு ஆரோக்கியமான காரியத்தைக் குறித்து நாம் அறிந்திருக்க வேண்டும். **நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தை கைக்கொண்டி**ரு [11தீமோத்தேயு 1:13]. பவுல் தீமோத்தேயவுக்கும் நமக்கும் என்ன சொல்லப்படுகிறது? எப்படி சொல்லப்படுகிறது என்பதைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்.

அப்போஸ்தலர் 7:38; ரோமர் 3:2 மற்றும் எபிரெயர் 5:12 போன்ற வசனங்களில் தேவனுடைய வாக்கியங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி வாசிக்கிறோம். சபையாக நாம் தேவனுடைய வாக்கிய ங்களுக்கு இசைவாக நாம் பேச வேண்டும். இதன் பொருள் நாம் ஆரோக்கியமான வார்த்தைகளைப் பேச வேண்டும். ஏனென்றால், இந்த தேவ வாக்கியங்கள் தான் ஒருவருடைய ஆவிக்குரிய நலனுக்கு வழிவகுக்கும்.

**நாம் எதை சொல்லக்ககூடாது, எதைச் சொல்ல வேண்டும்.**

நம்மெல்லாருக்கும் முதலில் எதையாவது யோசனையின்றி பேசிவிட்டு பின்பு அதைக்குறித்து யோசிப்பது வழக்கமாயிருக்கிறது. சில வேளைகளில் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் தேவனுடைய வாக்கியங்களுக்குப் பொருந்தாத காரியங்களைப் பேசுவதை நாம் கேட்டிருக்கிறோம். நாம் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் **கிறிஸ்துவின் சபை** என்னும் பதத்தையே நாம் மார்க்கப்பிரிவினை வழியில் பயன்படுத்தும்படி தள்ளப்படுவோம். அது தேவனுக்குப் பிரியமாயிருக்காது.

சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள் சில காரியங்களை சொல்கிறார்கள். அதில் திருத்தங்கள் தேவை. கீழ்கண்டவாறு அது கொடுக்கப்பட்டுள்ளது.

| **விருப்பப்படி சொல்ல வேண்டாம்** | **ஆலோசிக்கப்பட்ட மாற்றுகள்** |
|---|---|
| கிறிஸ்துவின் சபை பிரசங்கியார் | சுவிஷேச பிரசங்கியர் அல்லது சுவிசேஷத்தின் பிரசங்கியார் |
| கிறிஸ்துவின் சபை போதிக்கிறதை வந்து கேளுங்கள். | வேதாகமம் என்ன போதிக்கிறதோ அதை வந்து கேளுங்கள். |
| நான் ஒருவரை கிறிஸ்துவின் சபைக்கு மாற்ற முயற்சிக்கிறேன். | நான் ஒருவரை கிறிஸ்துவினி டத்திற்கு மாற்ற முயற்சிக்கிறேன். |
| நான் கிறிஸ்துவின் சபை | நான் ஒரு கிறிஸ்தவன் |
| கிறிஸ்துவின் சபையே சரியானது | சுவிசேஷம் அல்லது புதிய ஏற்பாட்டு போதனை சரியானது. |
| நாங்கள் கிறிஸ்துவின் சபை மக்கள் | தேவனுடைய வார்த்தையே சரியானது நாங்கள் கிறிஸ்தவர்கள் |
| நான் ஒருவருக்கு எங்கள் போதனையை போதிக்க முயற்சிக்கிறேன். | நான் ஒருவனுக்கு தேவனுடைய வார்த்தையை போதிக்க முயற்சிக்கிறேன். |
| கிறிஸ்துவின் சபை போதிக்கிறது. | வேதாகமம் போதிக்கிறது. |

தேவன் பூரணராயிருக்கிறார்.... தேவனுடைய வார்த்தை பூரணமானது.... கிறிஸ்து பூரணராயிருக்கிறார். ஆனால் சபை பூரணமானதல்ல. நாம் வேதாகமம் பேசுவதுபோல பேச ஜாக்கிரதையான முயற்சிகளை எடுக்க உறுதி பூண்டு கொள்வோம். அதேபோல் வேதாகம பெயரால் அழைக்கப்பட தீர்மானிப்போம். இப்படிச் செய்வதன் மூலமாக நாம் ஆரோக்கியமாக பேசி, ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தை கைகொண்டிருப்போம் (II தீமோத்தேயு 1:13). ✝

## தீயோனின் தீக்கணைகள்
## Satan`s Fiery Darts
Philemon Rajah

**அ**ன்பானவர்களே உங்கள் அனைவரையும் வெற்றியின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்தி எனது ஜெபங்களை கூறிக் கொள்வதில் மிகவும் அகமகிழ்கிறேன்.

பரலோக தேவனுக்கும், அவருடைய அடியார்களுக்கும் சாத்தான் எப்பொழுதுமே எதிரியாகத்தான் இருக்கிறான். மற்றும் இருப்பான். ஆகையால் அவனுடைய தந்திரங்களை நாம் அறிந்திருக்க வேண்டும் (2 கொரி 2:11): மற்றும் அவனது தீக்கணைகள் (அக்கினியாஸ்திரங்கள்) எல்லாவற்றையும் அவித்துப்போட (அணைத்துப் போட) வேண்டும். அதாவது அவைகளை ஒன்றுமில்லாது செய்ய வேண்டும் (எபே 6:16). ஆகையால், அவனது தீக்கணைகள் என்னவென்று நாம் அறிய வேண்டியது அவசியம். அவைகளைப் தேவ வசனத்தின் துணை கொண்டு ஆராய்ச்சி செய்வோம்.

**1. மாறுபாடான உபதேசம் [கள்ளப் போதனை]**

தேவனுடைய வார்த்தைக்கு (போதனைக்கு) எதிராக மாறுபட்டு, வசனத்தை திரித்து போதிப்பது மாறுபாடான உபதேசமாகும். தேவன் என்ன நோக்கத்தில், அர்த்தத்தில், சொன்னாரோ, அதை அப்படியே எதிரான திசையில் திரித்து போதிப்பதாகும். இந்த காரியத்தில் நமது சத்துருவாகிய சாத்தான் கைதேர்ந்தவனாக ஆதிகால முதல் இருக்கிறான். அவன் தேவனுடைய சத்தியத்தினை பொய்யாக மாற்ற ஓய்வின்றி உழைப்பவனாக இருக்கிறான். பரிசுத்த ஆவியானவர் இதனை பிசாசின் உபதேசங்கள் என்கிறார் (I தீமோ 4:1).

சத்துருவாகிய சாத்தான், இப்படிப்பட்ட மாறுபாடான போதனைகளை பரப்புவான் என்று நமது ஆண்டவர் இயேசு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே சென்னார் (மத்தேயு 13:25-43).

இன்றைய நாட்களிலும் அநேக மாறுபாடான போதனைகளை நாம் கண்கூடாக காண முடிகிறது. இப்படிப்பட்ட மாறுபாடான போதனைகளின் விளைவே நூற்றுக்கணக்கான பிரிவினை சபைகள். ஆனால், கிறிஸ்து தன்னுடைய சபையை நிறுவுவேன் (ஸ்தாபிப்பேன்) என்பதை ஒருமையில் தான் பேசினார் (மத்தேயு 16:18). அவர் நிறுவியது ஒரே ஒரு சபையாக இருந்தாலும், மாறுபாடான போதனைகளினால், பிரிவினைகளினால், பிரிவினைகள், முதலாம்

நூற்றாண்டிலேயே தலைதூக்க ஆரம்பித்தது (அப் .15). அப்போஸ் தலர்கள் உயிரோடு இருந்ததால், அவைகள் முளையிலேயே கிள்ளி எறியபட்டன. (கொரி1:10-17).

தேவன், நமது கைகளில் , நமது தாய்மொழியில் நாம் புரிந்துக்கொள்ளும் விதமாக வேதாகமத்தை தந்தும், நாம் அதனை முறையாக படிக்காமல், ஆராயாமல் விடுவோமேயானால், மாறுபாடான போதனையினால் ஈர்க்கப்பட்டு நமது நித்தியத்தை தொலைத்து விடும் அபாயம் இருக்கிறது. அநேகர் இன்றைய நாட்களில் அநேக இடங்களில் வேதாகமத்தை எரிப்பதையும் கிழித்து எறிவதையும் மற்றும் குப்பையில் வீசுவதையும் நாம் செய்தியாக அறிகிறோம். அதனால் வேதாகமங்கள் வீணாக்கப்படுகின்றனவே என வேதனையில் துடிக்கிறோம். இவ்வுலகில் எரிக்கப்படுகின்ற வேதாகமங்களை விட, அநேக கிறிஸ்தவ வீடுகளில் வாசிக்கப்படாத வேதாகமங்களினாலே அவை கொடுக்கப்பட்டதின் நோக்கத்தை வீணடிக்கின்றன,

நம்மில் அநேகருக்கு வசனங்கள் நிறைய தெரிந்த அளவு அதன்(அந்த வசனத்தின்) சத்தியங்கள் அழமாக தெரியவில்லை. காரணம், ஜெபகூட்டத்திற்கு செல்கின்ற ஆர்வம், வேதபாட வகுப்புகளுக்கு செல்ல வருவதில்லை. வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும் படி ஆண்டவர் சொல்கிறார் (யோவான் 5:39): வேத வாக்கியங்களை தினந்தோறும் ஆராய்ந்து பார்த்ததினால் பெரோயா பட்டணத்தார் நற்குணசாலிகளாக மாறினார்கள் (அப் 17:11) என வேதாகமத்திலே வாசிக்கிறோம். சங்கீதக்காரன் சொல்வதை கவனியுங்கள்; கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கிவான். (சங் 1:2). ஆகையால், வேதம் பேதையை ஞானியாக்கும் (சங். 19:7). வேதத்தை நேசித்து இரவும், பகலும் அதை தியானித்து, அதினால் வருகின்ற மட்டற்ற மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிக்கப் பழகுவோம்.

மாறுபாடான உபதேசங்களுக்கும், மாறுபாடாய் உபதேசிக்கிறவர்களுக்கும் விலகியிருக்க வேண்டும் (I தீமோ 6:3-5). ஆனால், பரிசுத்த ஆவிக்கு விரோதமான போதனைகள், தேவபக்தி என்ற போர்வையில் நம் வீட்டிற்குள் நுழைகின்றன. கிறிஸ்தவ ஊடகங்கள் என்று சொல்பவைகளும் விகற்பமான (தேவனுக்கு விரோதமான) போதனைகளை ஓய்வின்றி போதிக்கின்றன. சமூக ஊடகங்களும் (Social Media, what`s App, you tube), அதற்கு விதிவிலக்கல்ல.

**2. சோதித்தல் [பாவம் செய்யத் தூண்டல்]**

தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக பிசாசின் மற்றொரு தீக்கணை [அக்கினியாஸ்திரம்] சோதனை. தேவனுடைய பிள்ளைகளை சோதித்து பாவம் செய்ய அவனது பிரதானமான வேலையாக இருக்கிறது.

1நாளா 21:1-2 சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி இஸ்ரவேலைத் தொகையிடுவதற்குத் தாவீதை ஏவிவிட்டது. அப்படியே, தாவீது யோவாபையும், ஜனத்தின் சேர்வைக்காரரையும் நோக்கி: நீங்கள் போய், பெயர்செபா தொடங்கித் தாண் மட்டும் இருக்கிற இஸ்ரவேலை எண்ணி, அவர்கள் இலக்கத்தை நான் அறியும்படிக்கு என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றான்.

தாவீது தூண்டப்பட்ட போது , அவன் தூண்டுதலுக்க இணங்கி பாவம் செய்து, தேவனாலே தண்டிக்கப்பட்டார் [I நாள 21]. அதே போல யூதாஸ்காரியோத்தும் தூண்டப்பட்ட போது [யோவான் 13:2] . அவனும் பாவம் செய்து தன்னைத் தானே தண்டித்து மேலும் பாவத்தை கூட்டிக்கொண்டான்.

அப்போஸ்தலனாகிய யூதாசுக்குள் சாத்தான் புகுந்து அவனை தூண்டிய போது அவனும் அந்த தூண்டுதலுக்கு ஏற்ப செயல்பட்டு ஆண்டவரை காட்டிக்கொடுத்து அவரை கொலை செய்ய விரும்பியவர்களுக்கு உதவி செய்தான். [யோவான். 13:2.மத் 26].

இங்கே கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், சாத்தான் பாவம் செய்ய தூண்டுகிறானே தவிர, அவன் நம்மை பாவம் செய்ய வைக்கவில்லை. மாறாக, நாம் தான் பாவம் செய்கிறோம். ஏவாளை தூண்டினானே தவிர, பழத்தைப் பறித்து ஊட்டிவிடவில்லை. அவரவர் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறோம். யாக் 1:14-15 அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும்; பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும்.

தேவன் அவருடைய வார்த்தையினாலே நம்மை பரிசுத்தமாக வாழ தூண்டுவதைப் போல, சாத்தானும் நம்மை பாவம் செய்ய தூண்டுகிறான். நாம் தான் அந்த தூண்டுதலுக்கு உட்படாமல், அவைகளுக்கு விலகியிருக்க வேண்டும். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை, சாத்தான் பாவம் செய்ய தூண்டிய போது அந்த தூண்டுதலுக்கு உட்படாமல், தேவ வசனங்களால் அவனை எதிர்த்து நின்று அவனை ஜெயித்தார். [மத்தேயு 4:1-10].

நமது ஆண்டவர் இயேசுவை, பாவம் செய்ய வைக்க பிசாசு செய்த தந்திரத்தை நாம் கவனிக்க வேண்டும். **ஆசையை தூண்டுதல்' என்பது தீக்கணை. நான் சொல்வதை நீ செய்தால், உனக்கு வேண்டியது கிடைக்கும் என்பதாக அவனது பேச்சு உள்ளதை நாம் அறிய முடியும்.** ஆசையை காண்பித்து தன் வழிக்கு வரவைத்தல்; அதாவது தான் நினைத்ததை சாதித்தல் என்பது அவனது தீக்கணை. லூக்கா 4:5–8 **பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து, இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன்.** இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்.

**3.பிரிவினைகள்**

பிரிவினை என்பது சாத்தானுடைய மிகப்பெரிய அடுத்த தீக்கணையாகும். தேவனிடத்திலிருந்து நம்மை பிரிப்பதே அவனது மிகப்பெரிய குறிக்கோள். ஏதேனிலிருந்து இன்றுவரை அந்த செயலை அவன் மிகவும் சாதுர்யமாக செய்து வருகிறான். நம் எல்லோரையும் விட அவன் புத்திசாலி என்பதை நாம் ஒத்துக் கொள்ளத் தான் வேண்டும். அவன் மிகவும் தந்திரமாக நம்மை மோசம்போக்குகிறவனாக இருக்கிறான். 2கொரி 2:11 **சாத்தானாலே நாம் மோசம் போகாதபடிக்கு அப்படிச்செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. என் பிரியமான சகோதரரே மோசம் போகாதிருங்கள்.**

வீண் வார்த்தைகளினாலும் (எபே 5:6), ஆகாத சம்பாஷனைகளினாலும் (1கொரி 15:33), பாவத்தின் விளைவுகள் மற்றும் தண்டனைகள் பற்றிய விழிப்பற்ற தன்மையினாலும் (கலா6:7), முந்தின (இரட்சிக்கப்படும் முன்பு) நடக்கைக்குரிய இச்சைகளினாலும் (எபே 4:22), கள்ள போதனையினாலும் (யாக் 5:19), பொய்யான அற்புதங்களினாலும் (வெளி 13:14), சூனியங்களினாலும் (வெளி 18:3), இன்னும் பல வழிகளில் நம்மை மோசம் போக்குகிறவனாக இருக்கிறான். எவ்விதத்தாலும் நாம் மோசம்போகாதபடி இருக்க பைபிள் எச்சரிக்கிறது (2தெச 2:3).

சாத்தானுக்கு நன்றாக தெரியும் தேவனுடைய கரங்களிலிருந்து நம்மை பிடுங்க முடியாது. ஆகையால், நம்மை தான், தேவனுடைய கையை உதறிவிட முயற்சிப்பான். கொரிந்தியர்களுக்கான பவுலின் கவலைகளை

கவனியுங்கள். 2கொரி 11:3 **ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கொடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.**

**4. உபத்திரவங்கள் (துன்பப்படுத்துதல்)**

தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக சாத்தான் எடுக்கும் அடுத்த தீக்கணை உபத்திரவாமாகும். தேவனுடைய பிள்ளைகளை துன்பப்படுத்தி, அந்த துன்பத்தினாலே நம்மை தேவனை விட்டு பிரிக்க முயற்சி செய்வான். யோபுவின் வாழ்க்கையை கவனியுங்கள் யோபு 1:1 **ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்.**

தேவனே! யோபு சும்மா ஒன்றும் நீதிமானாக வாழவில்லை நீங்கள் அவனை ஆசீர்வதித்து அவனை பாதுகாக்கிறீர்கள் அதனால்தான் நீதிமானாக வாழ்கிறான்; அவனிடமிருந்து உங்கள் பாதுகாப்பை தகர்த்தால் அவன் துன்மார்க்கனாகிவிடுவான்' என்பதாக ஒரு சவாலை தேவனுக்கு முன்பாக சாத்தான் வைக்கிறான். யோபு பணத்திற்காகவோ, பந்தத்திற்காகவோ, சொந்தத்திற்காகவோ தன்னை நேசிக்கவில்லை. மாறாக, நான் அவனுடைய சிருஷ்டிகர் என்பதினாலே என்னை நேசிக்கிறான், தேடுகிறான் மற்றும் பயந்து வாழ்கிறான் என்று தேவனுக்கு யோபுவின் விசுவாச வாழ்வின் மீது அதிக நம்பிக்கை. அது உண்மைதான் என்பதை யோபுவும் நிருபித்தார். சொத்து எல்லாம் அழிந்து, பிள்ளையெல்லாம் செத்து உடம்பெல்லாம் நோய் வந்தும் தேவனை இறுக்கமாக பிடித்துக் கொண்டார் (யோபு 1,2). யோபுவின் விசுவாசத்திற்கு முன்பு சாத்தானின் உபத்திரவங்கள் தோற்றுப்போயின.

அன்பானவர்களே! சாத்தான் எய்யும் தீக்கணைகள் (அக்கியாஸ்திரங்கள்)எல்லாவற்றையும் அவிழ்த்துப்போடத் தேவையான பெலத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறார். அதை தான் பவுல் சொல்லும்போது ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு''. (பிலி 4:13) என்று சொல்கிறார். மேலும், சாத்தானை நமது காலுக்கு கீழே நசுக்கிப்போடுவதே நம்மைக் குறித்த தேவசித்தம் 9ரோமர் 16:20). முதலாம் நூற்றாண்டு பரிசுத்தவான்கள், அவனது தீக்கனைகள் ஒவ்வொன்றையும் தீயந்துபோக செய்து அவனை ஜெயித்தவர்கள் (1யோவான் 2:13,14). நாமும் அவர்களைப் போல ஜெயிக்கிறவர்களாயிருப்போம் (வெளி 12:11).

# ஒருவரும் கெட்டுப்போக விரும்பாமல்...

## Not Willing Any One To Perish...

### B. Arjunan

பரிசுத்த வேதம் சொல்லுகிறது ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் [2பேது.3:9]. கர்த்தருடைய வருகை தாமதமாவதற்கு காரணம் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென தாமதிக்கிறார். அவருடைய நீடிய பொறுமையை இரட்சிப்பு என்று நாம் நினைக்க வேண்டும். ஒரு வீட்டில் உள்ள நபர்கள் வேறு இடத்திற்கு குடிபெயர்வார்களானால் ஒரு நபரை மட்டும் விட்டு விட்டு மற்றவர்கள் சென்று விடுவார்களா? அந்த நபரையும் அழைத்துக் கொண்டு போவார்கள் அல்லவா? அதைப்போல இவ்வுலகத்தில் உள்ள ஒருவரையும் பிதாவாகிய தேவன் இழக்க விரும்பவில்லை. எல்லோரும் காப்பாற்றப்பட வேண்டுமென விரும்புகிறார். ஆகையால் கர்த்தருடைய வருகை தாமதிக்கிறது. இதை பயன்படுத்தி மனந்திரும்பாதவர்கள் உடனே கர்த்தருடைய வசனத்தை விசுவாசித்து மனந்திரும்ப வேண்டியது அவசியமாயிருக்கிறது. இன்னும் அநேகர் மனந்திரும்ப வில்லை. அவருடைய வருகை சமீபத்தில் இருக்காது என்று மெத்தனமாக இருந்து விடக்கூடாது. அவருடைய வருகை சடுதியில் இருக்கலாம். ஆகையால் இனியும் காலம் கடத்தாது உங்களுடைய பாவமன்னிப்புக்காக மனந்திரும்புங்கள்.

**பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்** [எபி.1:1,2]. நம்முடைய பிதாக்களோடு தேவன் பேசும்போது தீர்க்க தரிசிகளைக் கொண்டுப் பேசி வந்தார். இக்கடைசி நாட்களில் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்மோடு அவர் சிந்திய இரத்தத்தின் மூலமாகவும் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறோம். இரத்தம் சிந்துதலில்லாமல் மனிதனுக்கு பாவ மன்னிப்பு இல்லை. நம்முடைய பாவத்தைப் போக்கும் பலியாக இயேசு சிலுவையில் தம்முடைய இரத்தத்தை சிந்தினார். ஆகையால், நாம் இரட்சிக்கப்படுகிறோம். நோவா காலத்தில் தேவன் நோவாவைக் கொண்டு அவனுடைய குடும்பத்தை இரட்சித்தார். **பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின் மேல்**

**ஜலப்பிரளயத்தை வரப்பண்ணினார்**' என்று பேதுரு சொல்லுகிறார் [2பேது.2:5]. இக்கடைசி நாட்களில் தேவன் இயேசுவைக் கொண்டு நம்மை இரட்சிக்கும்படியாகத் திட்டம் கொண்டுள்ளார். ஆகையால், மனந்திரும்புங்கள். இவ்வுலகில் ஒருவரும் கெட்டுப்போவது அவருடைய சித்தமல்ல.

மேலும், பேதுரு சொல்லும்போது; "**நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு, கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்** [2பேது.2:8,9]. நாமும் கூட இவ்வுலகத்தில் இருக்கிற அக்கிரமக் கிரியைகளைக் கண்டு நாள்தோறும் வாதிக்கப்படுகிறோம். அதைப்போல லோத்தும். லோத் சோதோம் கோமோரா ஜனங்கள் மத்தியில் வாதிக்கப்பட்டார். அவர்களுடைய அக்கிரமம் தேவசமுகத்தை எட்டினது. ஆகையால் அந்தப் பட்டணங்களில் உள்ள லோத்தையும், அவனுடைய குடும்பத்தாரையும் காப்பாற்றும்படியாக தேவதூதர்களை அனுப்பி அவர்களை இரட்சித்தார். அதைப்போல, தேவபக்தியுள்ளவர்களை இக்காலகட்டத்திலும் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளுங்கள். மனந்திரும்பாமல் இருக்கும் அக்கிரமக்காரரையோ தேவன் அவியாத அக்கினியில் பங்கடையும்படியாக ஒப்புக்கொடுப்பார். ஒருவரும் கெட்டுப்போகக் கூடாது என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. ஆகையால், தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது 1யோவா.4:9]. தேவன் முதலாவது நம்மீது அன்பு செலுத்தி தம்முடைய குமாரனை பலியாக ஒப்புக்கொடுத்து நாம் பிழைக்கும்படி செய்தார். இது எப்பேர்பட்ட அன்பு, தம்முடைய குமாரனுடைய ஜீவனையே கொடுத்தார். இதைக் காட்டிலும் மேலான அன்பு ஒன்றுமில்லை. அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார் [1யோவா.5:20]. தகப்பனை அறியாத பிள்ளைகளாக நாம் இருந்தோம். அப்படிப்பட்ட நிலையில் நமக்கு சத்தியமுள்ள தேவனை வெளிப்படுத்தியவர், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. நாம் இப்பொழுது அவரை அறிந்து அவருடைய குமாரனுக்குள்ளாக இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும், நமது இரட்சகரும், நித்தியஜீவனுமாயிருக்கிறார்.

தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பிலே நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார் [1யோவா.4;16]. இயற்கையாகவே நாம் தேவனை விசுவாசிக்கவில்லை. தேவன் தம்முடைய குமாரனை நமக்காக கொடுத்ததினாலே நாம் விசுவாசிக்கிறோம். அதினாலே நாம் தேவனில் அன்புள்ளவர்களாயிருக்கிறோம். அவருடைய குமாரனிடத்திலும் அன்புள்ளவர்களாயிருக்கிறோம். ஆனால், தேவன் எப்பொழுதும் அன்புள்ளவராகவே இருக்கிறார். அன்புள்ள எவனையும் அவர் நேசிக்கிறார். அப்படிப்பட்டவர்களோடு அவர் வாசம் பண்ணுகிறார். நீங்கள் தேவனிடத்தில் அன்புள்ளவர்களாக இருக்கின்றீர்களா? அப்படி இல்லையென்றால் அவரில் அன்புகூருங்கள். எல்லாம் ஒழிந்து போகும். ஆனால் அன்பு ஒருக்காலும் ஒழியாது. அந்த அன்பை பற்றிக் கொள்ளும்போது நாமும் ஒழியாமலிருப்போம்.

ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்பது தேவனுடைய விருப்பமல்லவா! ஆகையால், தீமையினின்று அவர்களை இரட்சிக்கிறார். **கர்த்தரோ, உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்** என தெசலோனிக்கேயர் புத்தகத்தில் படிக்கிறோம் [2தெச.3:3]. தீமை நமக்கு வந்து விட்டால் உற்ற நண்பனும் ஓடி விடுவான். உறவினர்களும் கண்டு கொள்ளமாட்டார்கள். அவனுக்கு வந்தது நமக்கும் வந்துவிடும் என்று விலகி போய்விடுவார்கள். ஆனால் நம்மை உண்டாக்கின தேவன் நாம் கெட்டுப் போய்விடக்கூடாது என்பதற்காக எல்லா விதமான தீமையினின்றும் நம்மைக் காக்க வல்லவராயிருக்கிறார். ஆகையால் அவருடைய அன்பு மேலானது எனக் காண்கிறோம்.இந்த அன்பை அறிந்து விசுவாசியுங்கள். கடும் நோய்க்கு உட்பட்டுவிட்டால் எந்த மருத்துவமரும் கைவிட்டு விடுவார்கள். ஆனால் பரம வைத்தியர் ஒரு போதும் கைவிடார். அதிலிருந்து அவர் சுகப்படுத்துகிறார். அப்படிப் பட்ட கர்த்தரை நாம் தெய்வமாகக் கொண்டிருக்கிறோம். **மேலும், நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்து வருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர்களென்றும், உங்களைக் குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம் என்று பவுல் எழுதுகிறார் [2தெச.3:4]**. தேவன் எதிர்பார்க்கிற காரியங்களை நாம் செய்ய வேண்டும். அப்பொழுது அவர் அவரால் நம்மை இரட்சிக்க முடியும். பாவத்திலே நிலைத்திருக்கும் ஒருவனை அவர் இரட்சிக்க முடியாது. அவன் மனந்திரும்பி பாவத்தை விட்டுவிடும்போது கர்த்தரால் காப்பாற்றப்படுகிறான்.

**கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக**

[2தெச.3:5]. இன்றைக்கு, அநேகர் தங்களுடைய நாட்களை கெடுத்துக்கொள்ளுகிறார்கள். பொறுமையை இழந்து பலவிதமான உபாய தந்திரங்களாலே மாட்டிக் கொள்ளுகிறார்கள். உங்களுடைய இருதயம் தேவனுடைய அன்புக்கு நேராக வழிநடத்தப்படும்போது நீங்கள் ஏமாற்றப்படுவது தவிர்க்கப்படும். கர்த்தர் ஒருவரையும் வஞ்சிக்கிறவர் அல்ல. மனிதன் பல வழிகளில் வஞ்சிக்கப்படுகிறான். மற்றவர்களையும் வஞ்சிக்கிறான். ஆனால் நம்மை உண்டாக்கின தேவன் நாம் கெட்டுப் போகாமல் அவருடைய அன்பில் ஊன்ற கட்டுப்பட வேண்டுமென விரும்புகிறார். ஆகையால், கர்த்தர் அவருடைய அன்புக்கு நேராக நம்மை வழிநடத்துகிறார். மேலும், கிறிஸ்துவின் பொறுமையைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார். அவர் வையப்படும்போது பயமுறுத்தாமலும், பாடுபடும்போது ஒருவரையும் துன்புறுத்தாமலும் நியாயமாய் தீர்ப்புச் செய்கிறவருக்கு தம்மை ஒப்புவித்தார். வாய் திறவாத ஆட்டைப் போல இருந்தார். அவருடைய சத்தம் வீதிகளில் கேட்கப்படவில்லை. அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போது உன்னை நீயே இரட்சித்துக்கொள் என்று சொல்லி அவரை இழந்தார்கள். அவர் அவர்களுக்கு பிரதியுத்தரமாக ஒருவார்த்தையும் சொல்லவில்லை. மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள திராணியில்லையென்றார்கள். இத்தனை வார்த்தைகளையும் அவர் பொறுமையோடிருந்து சகித்தார். நமக்கு பாடுகள் வரும்போது கிறிஸ்துவையே நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். ஆகையால் பவுல் தேவனைப்பற்றும் அன்புக்கும், கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக என்று எழுதுகிறார். இப்படி தங்களை நடத்தும்படியாக ஒப்புக்கொடுக்காத அநேகர் தங்களுடைய சிந்தையில் வீணராய் போய்விடுகிறார்கள். உலகத்தில் வரும் பாடுகளையும் பிரச்சனைகளையும் தங்களால் மேற்கொள்ள முடியாமற் போய்விடுகிறார்கள்.

இச்செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீ கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல, நீ தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவன். ஆகையால் தேவன் உன்னை அதிகமாக நேசிக்கிறார். மற்றவர்கள் நீ எப்பொழுது கெட்டுப்போவாய் என எதிர்பார்த்து காத்திருப்பார்கள். மனிதனுக்குள்ளாக பொறாமை குடிகொண்டிருக்கும்போது இதை எதிர்பார்த்து காத்திருப்பான். ஆனால், நீ மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். உன் காலத்துக்கு முன்னே நீ ஏன் மரணத்தை சந்திக்க வேண்டும். மமனிதனானவன் தேவனோடு என்றென்றும் வாழும்படியாக படைக்கப்பட்டவன்.

உனக்காக மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவரைப் போல நீயும் அவரோடு வீற்றிருந்து நித்தியத்தில் நித்திய மகிழ்ச்சியை கண்டடைய உன்னை தேவனுக்கு ஒப்புக்கொடு. நீ நம்புகிற அல்லது உயிருக்கு உயிராக நேசிக்கிற நண்பனோ, உறவினர்களோ உன்னை ஒரு நாள் கைவிடுவார்கள் என்பதை நீ மறந்து போகதே! ஆனால், என்றும் உன்னை கைவிடாது நேசிக்கும் கர்த்தர் உன்னுடைய மனந்திரும்புதலை எதிர் நோக்கியிருக்கிறார். இன்றே உன்னை முழுவதுமாக ஒப்புக்கொடு.

சத்தியத்தை நாம் விசுவாசிக்கும்போது தேவனால் தெரிந்து கொள்ளப்படுவோமா?

ஆம், தேவன் சத்தியபரர் சத்தியத்தை விசுவாசிக்கும் ஒவ்வொருவரையும் அவர் நேசிக்கிறார். **சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்றார் ஆண்டவர் இயேசு. சத்தியத்தை ஒருவர் அறியாதிருக்கும்போது விடுதலையடைய முடியாது. உண்மையாய் நடக்கிறவர்கள் தேவனுக்கு பிரியமானவர்கள். அப்படிப்பட்டவர்களை அவர் தெரிந்து கொண்டு அவர்களிடத்திலே அநேக பொறுப்புகளை கொடுக்கிறார். பவுல் தெசலோனிக்கேய சபையாருக்கு எழுதும்போது; **கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு ஆதி முதல் தேவன் உங்களைத் தெரிந்துக் கொண்ட படியினாலே நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் என்கிறார்.** (2தெச 2:13). **நாம் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதனாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும்.இரட்சிக்கப்படுகிறோம். இன்றைக்கு அநேகர் நீங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டீர்களா?** என்று இயேசுவை நோக்கி வந்தவர்களைப் பார்த்து கேட்கிறார்கள். அவர்கள் இன்னும் பரிசுத்தமாக்கப்படவில்லை, சத்தியத்தை அறியவில்லை, அவர்கள் எப்படி ஆவியில் பரிசுத்தமடைய முடியும். கர்த்தருடைய சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படாதவன் ஆவியில் பரிசுத்தமாக்கப்பட முடியாது. அதைப்போல சத்தியத்தை விசுவாசியாமல் இரட்சிக்கப்பட முடியாது. நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட இக்காரியங்களை உங்களுடைய வாழ்க்கையில் செயல்படுத்துங்கள். அப்பொழுது இரட்சிக்கப் படுவீர்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய் போய்விடும். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். ✝

# கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாடு

*Unity In Christ*

*E.Z. Selvanayagam*

**சீ**யோன் மலை மீது கட்டப்பட்டுள்ள எருசலேமில் உள்ள ஒரு எளிய இரண்டு அடுக்கு மாடியின் உள்ளே என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்க்கிறதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அங்கே நீங்கள் காண்பது என்ன? பதிமூன்று மனிதர்கள் அங்கே அமர்ந்திருக் கிறார்கள். அதில் ஒருவர் குரு மற்ற பன்னிரண்டு சீடர்கள் அல்லது தொண்டர்கள். குருவானவர் முகத்தில் என்றுமே இல்லாத ஒரு வித சோகம். ஏனெனில், தனக்கு மிகவும் நெருக்கமான தன்னால் நேசிக் கப்பட்ட ஒரு நண்பனே இந்த இரவிலே தன்னைத் காட்டிக் கொடுக்கப் போகிறான். தான் மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கப்படுவது உறுதி என்று அவருக்குத் தெரிந்திருந்தது. அவர் மரணத்திற்கோ, வேறே ஒரு சிறு தண்டனை அடைவதற்கே எந்த ஒரு குற்றமும் செய்யவில்லை. என்றாலும் அடுத்த நாள் மாலைக்குள் அவர் மரணத்தை ருசி பார்ப்பது உறுதி. சரீரத்தில் ஏற்படும் வேதனையின் உச்சக் கட்டத்தை அனுப விக்கப் போகிறார் என்பது திண்ணம். அதை நினைத்துப் பார்த்து உள்ளத்தில் வேதனைப் பெருமூச்சோடு பிதாவை நோக்கி மன்றாட மண்டியிடுகிறார்.

முதலாவது, அவர் தம்முடைய நிலையைக் குறித்து மன்றாடு கிறார். பிதா தனக்கு ஒப்படைத்த பணியினை வெற்றிகரமாக முடித்து விட்டு தான் வந்த நோக்கத்தை நிறைவு செய்துவிட்டபடியால் ஆரம்பத்தில் அவருக்கு இருந்த மகிமையை திரும்பவும் தரவேண்டு மென்று இறைஞ்சுகிறார். [யோவான் 17:1-5] அதன் பின்னர் அவ ரோடு கூட அமர்ந்திந்த பன்னிரண்டு சீடர்களுக்காக மன்றாடுகிறார். [யோவான் 17:6-9] அவர்கள் உலகத்துக்குள்ளே அனுப்பப்படும் போது அவர்களோடே இருந்து சத்தியத்தை எடுத்துச் செல்ல அவர்களை பலப் படுத்த வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறார்.

தனக்காகவும், தன்னோடு உண்டு உறங்கி தன்னோடு கூடப் பணி யாற்றிய சீடர்களுக்காகவும் மன்றாடினதைப் புரிந்து கொள்ள முடி கிறது. ஆனால், மரணம் அவரைத் துரத்திக் கொண்டு வரும் அந்த பயங்கரமான சூழ்நிலையில் உனக்காகவும், எனக்காகவும் கவலைப் பட்டுமன்றாடுகிறாரே. அது நமக்கு ஆச்சரியமாக இல்லையா? ஏன் அப் படிக் கவலைப்பட்டார்? அவர் நம்மீது கொண்டிருந்த கரிசனையினால்

அல்லவா? சொல்லப்போனால் அந்த அன்பு தானே அவரைப் பூலோகத் திற்கு கொண்டு வந்தது. மரண பயம் ஒருவருடைய நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும் வேளையில் அவர் யாரைப் குறித்துக் கவலைப்படுவார்? தாம் நேசிக்கின்ற மனைவி, பிள்ளைகள், நண்பர் களைத் தானே. ஆனால், நம்முடைய அருமை இரட்சகர், பாவிகளின் நண்பன் நாம் இன்னும் பாவிகளாக தேவனுக்குச் சத்துருக்களாக இருந்த போதே அவர் நமக்காகக் கவலைப்படுகிறார். நண்பனே அந்த மாசற்ற தூய அன்புக்குக் கைமாறாக நாம் என்ன செய்கிறோம்? நேசிப்பதற்கு அருகதையற்ற நிலையில் பாவத்தில் உழன்று கொண்டி ருந்த நம்மை நினைத்து மதிக்கும் தருவாயில் மறவாமல் நமக்காக மன் றாடி தம்முடைய அன்பை, கரிசனையை வெளிகாட்டினாரே அதற்கு நானும் நீங்களும் என்ன செய்ய போகிறோம்?

நம்மை நேசிக்கிற ஒருவர் மரிக்கும் தருவாயில் ஒரு காரியத்தை நம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்ளோம். நன்றி உள்ளவர்களானால் அதை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டா மா? அவர் அவ்வளவு வேதனைக்கு மத்தியில் நம்மீது காட்டின பரிவை அலட்சியம் செய்வது சரியா? தயவு செய்து அவர் நமக்காக மன்றாடின காரியங்களை கவனியுங்கள். அந்த எளிய மேல்மாடியில் உள்ள மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிற அந்த தேவாட்டுக் குட்டியின் வேதனை நிறைந்த மன்றாட்டை உற்றுக் கேளுங்கள்.

நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்வதுமல்லாமல், இவர்க ளுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்கு நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்கள் எல்லா ரும் நம்மில் ஒன்றாயிருகக்கவும் வேண்டிக் கொள்கிறேன் என்கிறார். யோவான் 17:20–22].

மேல் அறையில் ஜெபித்த உருக்கமான ஜெபத்துக்கும், தற் காலத்தில் வாழுகின்ற கிறிஸ்தவ மக்களிடையே காணப்படுகின்ற ஒற்றுமையின்மை மற்றம் முரண்பாடுகளுக்கும் உள்ள வித்தியாசத் தைக் கவனியுங்கள்; தம்மை போலவும், பிதாவைப் போலவும் ஒன்றாக இருக்க விசுவாசிகள் அனைவருக்கும் ஒத்தாசை செய்ய வேண்டும் என்று மரணத்தைச் சந்தித்த வேளையிலும் பிதாவிடம் மன்றாடினார். ஆனால், இங்கே விசுவாசிகள் பல கூறுகளாகப் பிரிந்து

ஒருவருக்கொருவர் இணக்கமில்லாமல் செயல்படுவதோடு மட்டு மில்லாமல் முரண்பாடாகவும் செயல்படுகின்ற கொடுமையை நாம் கண்கூடாக காண்கின்றோம். அவருடைய உருக்கமான ஜெபம் கேட்கப்படாமலும், அவருடைய மரண வாக்குமூலம் மதிக்கப் படாமலும் இருக்கிற நிலையைக் காணும் ஒரு உண்மை கிறிஸ்தவன் துக்கப்படாமல் இருக்க முடியாது.

அந்த ஒருமைப்பாட்டை அவ்வளவு வலியுறுத்தி உருக்கத்தோடு மன்றாடின காரணத்தை அவர் வாய்மொழியாகவே கேளுங்கள். அவரை விசுவாசிக்கிற அனைவரும் ஒன்றாக இருப்பதால் தான் பிதா தான் அவரை அனுப்பினர் என்றும், அவரே தானாக வந்து தனக்கு ஒரு உயர் நிலையைத் தேடவில்லை என்றும், உலக மக்கள் நம்புவர் என்கிறார். ஆம், சகோதரர்களே இது உண்மை. அனைத்து விசுவாசி களும் ஒன்றாக இருந்தால்தான் உலக மக்கள் இயேசு கிறிஸ்துவை உலக இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஏதுவுண்டாகும். இப்பொழுது காண்கிற நிலை முற்றிலும் மாறுபாடாக இருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை இகழ்ந்தும், பழித்துக் கூறியும் விரோதிகளைப் போல் நடந்து கொள்கிறோமே. விசு வாசிகளிடம் காணப்படுகிற இந்தக் கோடான கோடி ஆத்துமாவே உலகத்திலுள்ள அனைத்தையும் காட்டிலும் விலையுயர்ந்தது என்று வேதம் குறிப்பிடுகிறது. நம்முடைய பிரிவினை வாதமோ பலகோடி மக் கள் கிறிஸ்துவை உலக இரட்சகராக ஏற்றுக் கொள்ளத் தடையா யிருக்கிறது. ஏனெனில், நம்முடைய ஒற்றுமையின்மை உலகறிந்த உண்மை. நாங்களும் கிறிஸ்துவைத் தான் பின்பற்றுகிறோம் என்று வாயினால் சொல்லுகிறார்கள். ஆனால், தங்கள் செயல்களால் மறுதலிக்கிறார்கள். உலகம் இதை உற்று கவனித்துவிட்டு சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாத கிறிஸ்துவம் எங்களுக்கு வேண்டாம் என்று ஒதுங்கி ஓடுகிறார்கள்.

ஒரு வேளை இந்த ஐக்கியம் சாத்தியமில்லை என்று நினைக்கி றோமா? அப்படி நினைக்கலாகாது. ஒரு நல்ல கிறிஸ்தவன் ஒரு விஷயத்தை அணுகும்போது அவனுடைய அனுபவத்தையோ, வாதத் திறமையையோ கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் விசுவாசத்தையே அடிப்படையாக எடுத்துக் கொள்ள வேண்டும். மாவீரன் கோலியாத்தை வீழ்த்திய சிறு தாவீதை எண்ணிப் பாருங்கள்

**நாம் மறுபடியாக ஒன்றாயிருப்பது சாத்தியமே**

மனிதனுக்கு ஏற்படுகிற அனைத்துப் பிரச்சனைகளுக்கும் வேதாகமத்தில் தீர்வு உண்டு. அப்படியானால், கிறிஸ்து மன்றாடி

ஜெபித்த ஒருமைப்பாடு சீர்குலைந்து கிடப்பதையும் சரி செய்ய வழி இருக்குமே! பிரிவினை வாதம் இன்று நேற்று முளைத்த பிரச்சனையல்ல. இது ஒரு பழைய நோய். முதல் நூற்றாண்டின் மத்தியில் கிரேக்கப் பேரரசின் ஒரு பகுதியாகிய கொரிந்து பட்டணத்தில் பவுல் அப்போஸ்தலன் சுமார் இரண்டு ஆண்டுகள் தங்கி தூய எளிய சுவிசேஷத்தைப் பிரகடனம் பண்ணினார். அதைக் கேட்டு விசுவாசித்த பல கொரிந்தியர்கள் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டனர் [அப் 18:8]. விதமாய் அங்கே ஓர் கிறிஸ்துவின் சபை ஆரம்பிக்கப்பட்டது. சில காலத்திற்குப் பிறகு பவுல் அப்போஸ்தலன் வேறு இடத்துக்கு சுவிசேஷம் அறிவிக்கச் சென்றுவிட்டார். கொஞ்ச நாட்கள் கழிந்தன. அங்கே, கொஞ்சம் குழப்பம் என்று பவுலடியாருக்குத் தகவல் வந்தது அவர்கள் ஒன்றாயிருந்த சபையைப் பிளந்து கூறுபோட்டு ஒவ்வொரு கூறுக்கும் ஒரு பெரிய புள்ளியின் பெயரைச்சூட்டி நான் அவரைச் சார்ந்தவன், நான் இவரைச் சார்ந்தவன் என்று பிரிந்து செயல்பட்டனர் [I கொரி 1:10]. இதைக் கேட்டு மனமுடைந்த பவுலடியார் அவர்களுக்கு ஒரு அறிவுரைக் கடிதம் எழுதினார். இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், பவுல் அந்தப் பிரிவினையை அங்கீகரிக்கவில்லை. மாறாக கண்டித்தார். கொஞ்சம் மன வேறுபாடு இருந்தால் பிரிந்து செயல்படுவது ஒன்றும் தவறில்லை என்ற மாதிரி பூசி மெழுகவில்லை. தனக்குத் தெரிந்த மொழியில் மனதை உருக்கக்கூடிய வார்த்தைகளை உபயோகித்து எழுதினதாவது நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேச வேண்டும் என்று புத்தி சொல்லுகிறேன் என்கிறார். I கொரி 1:10] ஆனால், இன்றைக்கு சில பேர் எல்லாரும் ஒரே காரியத்தை பேசுவது கூடாத காரியம் என்று வாதிடுகின்றனர். நாம் எல்லாரும் ஒன்றாயிருப்பதும் ஆகக் கூடிய காரியம் அல்ல என்கின்றனர். அன்றைய உலகின் பெரிய நகரங்களில் ஒன்று என கருதப்பட்டதும். அநேகமாயிரம் விசுவாசிகளைக் கொண்டதுமான அந்த சபைக்கு [அந்த சபையில் சுமார் 60.000 அங்கத்தினர்கள் இருந்திருப்பார்கள் என்று நம்பப்படுகிறது] நீங்கள் நேசிக்கிற நீங்கள் பின்பற்றுகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கட்டளையிட்டுச் சொல்லுகிறதாவது நீங்கள் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினையில்லாமல் ஏகமனமனதும், ஏகயோசனையுள்ளவர்களாக சீர் பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன் என்கிறார். இது மனுஷருடைய ஆலோசனையில்லை பரிசுத்த ஆவியானவரின் கட்டளை!

**இந்த பாவத்தை அகற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?**

விசுவாசிகளுக்கிடையே பிரிவினை ஏற்படுவதற்கு மூலகாரணம் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணுவதாகும்! ஆகையால், பிரிவினை நோய் அகற்றப்பட வேண்டுமானால் வேதாகமத்தில் பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுத வைத்திருக்கிற உபதேசச் சட்டங்களுக்கு மிஞ்சி மாந்த அறிவைக் கலப்படம் செய்து விடாமல் விழிப்பாக இருக்க வேண்டும். கொரிந்து சபையில் விசேஷித்த வரம் பெற்ற விசுவாசிகள் கூட இருந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் கூட சபைக்கு ஏதாவது செய்தி சொல்லுவார்களானால் அது எழுதப்பட்டிருக்கிற வார்த்தைக்கு இசைவாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும் என்கிறார். தற்காலத்தில் அநேக பிரசங்கிமார்கள் எழும்பி நான் வரம் பெற்றவன் பரிசுத்த ஆவியானவரோடு எனக்கு நேரடித் தொடர்பு இருக்கிறது, அவர் எனக்கு அவ்வப்பொழுது காரியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார் என்றும், இன்னும் கற்பனை செய்து பார்க்க முடியாத சங்கதிகளையும், உபதேசங்களையும் முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லுகிறார்கள்; அவர்கள் தங்கள் கூற்றை மெய்ப்பிப்பதற்காக சில அற்புத அடையாளங்களையும் செய்வதாக விளம்பரப் படுத்துகிறார்கள். இது ஆவியானவருடைய அங்கீகாரம் பெற்றதா? விசுவாசிகளையெல்லாம் ஒன்றாக இருக்க வேண்டுமென உருக்கமாய் வேண்டிக் கொண்ட ஆவியானவர் இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக காரியங்களை வெளிப்படுத்திக் கொண்டிருப்பாரா? அப்படியானால் [வெளி 22:18,19] என்ன பொருள்? கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது என்கிறாரே. யாக்கோபு பூரணப்பிரமாணம் என்கிறாரே யாக் 1:25.

நாம், எழுதப்பட்டிருக்கிற வார்த்தையின்படி நடந்தால் ஒருவருக்கொருவர் பெருமை பாராட்டமாட்டோம். இது அற்புதமான உண்மை நம் அனைவருக்கும் வேதம் கூறுகிற அறிவுரை. பவுலும், அப்பொல்லோவும் இதற்கு சிறந்த முன் மாதிரிகள். எங்களைப பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் பவுல். [I கொரி 4:6]. நானும், நீங்களும் இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால் நாமும் அதைப் பின்பற்றுவோம். எழுதப்பட்டிருக்கிற சத்தியத்தை தெளிந்த மனதோடு வாசித்து நம்முடைய பாரம்பரியமோ, சுற்றுப்புற சூழல்களோ நம்மை மோசம் போக்கிவிட அனுமதியாமல் ஒரே காரியத்தை நம்புவோம்,

ஒரே காரியத்தைப் பேசுவோம். ஏனெனில், சுவிசேஷமே இரட்சிப்புக்கு தேவ பெலனாயிருக்கிறது. அது முதல் நூற்றாண்டில் அநேக ஆத்துமாக்களை இரட்சித்து அன்றைய நாகரீக உலகம் அனைத்திலும் பரவி கிரியை செய்தது என்றால் இன்றைக்கு மட்டும் ஏன் முடியாது? புதிய வெளிப்பாட்டுக்கும், விதவிதமான கொள்கைக் குழப்பங்களுக்கு அவசியம் ஏன்? சிந்திப்பீர்! இரட்சிப்பு சம்பந்தப்பட்ட விஷயத்தில் நாம் வேதாகமம் ஒன்றையே பின்பற்ற வேண்டும். எழுதப்பட்டிருக்கிற வசனத்தின் வெளிச்சத்தில் நாம் நடந்தால் வேற்றுமைக்கு இடம் ஏது? அதைத் தானே பேதுருவும் வற்புறுத்துகிறார். ஒருவன் போதித்தால் வேத வாக்கியங்களின் படி போதிக்கக்கடவன் [I பேதுரு 4:11] ஆகவே, நண்பர்களே மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிப்பவர்களை நிராகரித்து விட்டு வேதாகமம் பேசுகிற இடத்திலே பேசுவோம். வேதாகமம் மௌனமாக இருக்கிற இடத்திலே நாமும் மௌனமாக இருப்போம். அதுவே ஒற்றுமைக்கு ஒரே வழி. ✝

---

## வேதாகமத்திலுள்ள சில முக்கியமான கேள்விகள்

1. நீ எங்கே இருக்கிறாய்? – ஆதி. 3 : 9
2. மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? – யோபு 25 : 4
3. அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்? – லூக். 3 : 10
4. தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்? –யோவான் 6 : 28
5. சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? – அப். 2 : 37
6. ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? – அப். 9 : 6
7. இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? – அப் 16 : 30
8. ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்? – அப். 22 : 10
9. கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? – மத். 22 : 42
10. காற்றும், கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே இவர் யாரோ? – மாற்கு 4 : 41


## தேவன்

# தேவனுக்குப் பிரியமாயிருத்தல்

# To Be Pleasing To God

Mark Phillips

சில வேளைகளில், வேதாகமத்தில் ஏதாவது ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு அதை ஒத்த வாக்கிய புத்தகத்தை வைத்து அத்தலைப்பு சம்மந்தமான எல்லா வசனங்களையும் எழுதி எடுப்பது சுவாரஸ்யமான ஓர் அனுபவமாயிருக்கும். இது அத்தலைப்பு சம்மந்தமாக வேதாகமத்திலிருந்து அநேக காரியங்களை கற்றுக்கொள்ள உதவும். நான் தேவனுக்கு பிரியமாயிருத்தல் என்னும் தலைப்பைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். எனவே. ஒத்தவாக்கிய புத்தகத்தை எடுத்து அதில் குறிப்பிடப்பட்டிருந்த வசனங்களை ஆராயத்தொடங்கினேன். இப்போது நாம் தேவனுக்குப் பிரியமாயிருப்பது சம்மந்தமான வசனப்பகுதிகளுள் சிலவற்றை கவனிப்போம்.



கலாத்தியர் 1:1 ல் அப்போஸ்தலனாகிய பவுல் இப்பொழுது நான் மனுஷரையா தேவனையா யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷனையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரை பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே என்று எழுதுகிறார். பவுல் இவ்வசனப்பகுதியில் மனுஷரையா அல்லது தேவனையோ யாரைப் பிரியப்படுத்துவது என்னும் சவாலைப் பற்றி எழுதுகிறார். பெரும்பாலான ஜனங்கள் மனுஷரைப் பிரியப்படுத்த முயற்சிப்பார்கள். அப்படி முயற்சிக்கும்போது தேவனைப் பிரியப்படுத்த மாட்டார்கள். கலாத்திய நாட்டு சபைகளில் உண்டான சில பிரச்சனைகளை தீர்த்துவைக்க முயற்சித்தபோது தனக்கு மனுஷரைப் பிரியப்படுத்த விருப்பமில்லையென்றும், தன் விருப்பமெல்லாம் தேவனைப் பிரியப்படுத்துவதுதான் என்றும் கலத்தியா நாட்டு சபைகள் அறிய விரும்பினார். உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். ''என்னுடைய முதன்மைத்துவம், முக்கியத்துவம் என்ன? நான் மனுஷரைப் பிரியப்படுத்த விரும்புகிறேனா அல்லது தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறேனா? பவுல் 1 தெசலோனிக்கேயர் 2:45

வசனங்களில் தெசலோனிக்கேய சபைக்கு எழுதும்போது ''சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய் தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணவுமில்லை தேவனே சாட்சி'' என்று எழுதுகிறார். இவ்வசனப்பகுதியில் பவுல் தன்னிடத்தில் சுவிசேஷம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதென்றும், தான் மனுஷருக்கு அல்ல, தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுவதாகவும் சொல்கிறார். மேலும், பவுல் சொல்லும்போது தான் தேவனுடைய சத்தியத்தைப் பேசுகிற படியால் ஜனங்களை மயக்குவதற்காக இச்சகமான பேச்சுக்களைக் குறித்து தான் கவலைப்படவில்லையென்றும் தன் கவலை அல்லது அக்கறை எல்லாம் தேவனைப் பிரியப்படுத்துகிறதாகவே இருக்கிறதாகவும் சொல்கிறார். இந்த கேள்விகளை உங்களுக்குள்ளேயே கேட்டுக்கொள்ளுங்கள்: என்னுடைய பிரதான நோக்கம் என்ன? நான் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமா? அல்லது மனிதனைப் பிரியப்படுத்த வேண்டுமா?

நாம் தேவனைப் பிரியப்படுத்தும் மற்றொரு விதம் ஒழுக்கமுள்ள பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வதாகும். பவுல் 1 தெசலோனிக்கேயர் 4:18 வசனங்களில் இவ்விதமாக எழுதுகிறார். அன்றியும் சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும் தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக் கொண்டபடியே அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்தி சொல்லுகிறோம். கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல் உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும், தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும்;முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட காரியங்களெல்லாவற்றையுங் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிகட்டுகிறவராயிருக்கிறார். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால், அசட்டை பண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான்!

அவரவர், தங்கள் விருப்பப்படி தங்களுக்கென்று ஒழுக்க நெறிகளை வகுத்துக் கொண்டிருக்கிறோம். பலர் தாங்கள் எந்த ஒழுக்க நெறிகளை ஆதாரமாகக் கொண்டு வாழ்கிறார்களோ அவைகள் தேவனுடைய உறவிலும், அவர்கள் எங்கே நித்தியத்தைக் கழிக்கிறார்களோ அங்கேயும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் நம்புவதில்லை. தேவனுடைய வார்த்தை ஒருபோதும் மாறுவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஒருபோதும் மாறுவதில்லை. இதை நாம் எபிரெயர் 13:8 ல் காணமுடியும் **இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.**

இயேசு கிறிஸ்து எப்படி நேற்றும் இன்றும் என்றும் மாறாத வராயிருக்கிறாரோ, அதேபோல தேவனுடைய வார்த்தையும் தேவனுடைய அளவுகோலும் ஒருபோதும் மாறுவதில்லை. ✝

## கர்த்தருக்குப் பயப்படுதல்

- ✎ கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் [நீதிமொழிகள் 1:7].
- ✎ கர்த்தருக்கு பயப்படுகிற பயம் சுத்தமும் என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது [ சங்கீதம் 19:9].
- ✎ கர்த்தருக்கு பயப்படுகிறவனுக்கு திட நம்பிக்கை உண்டு [ நீதி 14:26 ].
- ✎ தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படுகிற பயம் [நீதி 8:13].
- ✎ சஞ்சலத்தோடு கூடிய அதிகம் பொருளிலும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்ச பொருளே உத்தமம் [நீதி.15:16].

## தேவன்

# தேவன் கட்டுப்பாட்டில் இருக்கிறார்

# God Is In Control

Ronald D. Bryant

**தே**வன் கட்டுப்பாட்டில் இருக்கிறார். அவர் தம்முடைய சித்திற்கும், நோக்கத்திற்கும் இசைவாயிருப்பவைகளை வாய்க்கச் செய்கிறார்.

விதைத்தல், அறுத்தல் விதி தவிர்க்கமுடியாத ஒரு விதியாக இருக்கிறது. இவ்விதி அல்லது சட்டம் கலாத்தியர் 6:7 ல் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. இவ்விதி வேதவாக்கியங்களில் திரும்பத் திரும்ப உதாரணமாக சொல்லப்பட்டிருக்கிறது. இதை நாம் நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடியும். இச்சட்டங்களுக்குப் பின்னால் இந்த உலகில் ஒரு விதையானது முளைக்கும்போது பரலோகத்தின் தேவன் அவ் விதை எப்படியாக வேண்டுமென்று வடிவமைத்திருந்தாரோ அந்நோக்கத்தை அது நிறைவேற்றுகிறது. இந்தப் பௌதீக உலகில் விதைப்பின் காலத்திலும், அறுவடைகாலத்திலும் பரலோகத்தின் தேவன் என்ன உத்தேசித்திருக்கிறாரோ அதன்படி தான் நடந்து வருகிறது.

இது ஆவிக்குரிய உலகில் பல்வேறுபட்ட நிலைகளில் உண்மையாயிருக்கிறது. ஆவிக்குரிய உலகில் ஒருவர் சர்வவல்லமையுள்ள தேவனை மாத்திரம் எதிர்கொள்வதில்லை. மனிதனையும் எதிர்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. மனித இனம் தேவசாயலைப் பெற்றிருப்பது மட்டுமல்லாமல் தேவனுடைய சுவாசத்தையும் பெற்றிருக்கிறது. கூடுதலாக மனிதன் தான் என்ன செய்யவேண்டுமோ அதை அவனால் தெரிந்து கொள்ள முடியும். ஆனால், அவன் சர்வவல்லவனல்ல மனிதனால் செயல்பட முடியும், ஆனால், அவனுடைய செயல்களின் விளைவுகளை அவனால் தடுக்கமுடியாது. மனிதர்கள் தங்கள் கிரியைகளின் விளைவுகளை அறுவடைச் செய்யும் போது, நீதி அதன் நன்மைகளை உண்டாக்கும்போது இவைகளெல்லாம் தேவன் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பதற்கு உதாரணங்களாக திகழ்கின்றன. நாம் அதை ஏற்றுக்கொள்வதற்கு அசௌகரியமாக இருந்தாலும் இது நமக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தினாலும் கூட இது உண்மையாகத்தான் இருக்கிறது. அதாவது, பாவம் அதன் விளைவுகளை உண்டாக்கும்போது அந்த விளைவுகள் தேவனால் முன் தீர்மானிக்கப்பட்டு ஆணையிடப்படுகின்றன. மேலும், இந்த விளைவுகள் தேவன் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்னும் உண்மையை உரக்கச்சொல்கின்றன.

**தேவன் தம்மை பரியாசம் பண்ணிவொட்டார்** இவ்வசனத்தின் சொல் அர்த்த ரீதியாக, பார்த்தால் மனிதனால் தேவனை தன்னுடைய சாமர்த்தியத்தால் மேற்கொள்ள முடியாது, மனிதனால் தேவனை அவமதிக்க முடியாது. சில வேளைகளில் மனிதன் தேவனை அவமதித்தது போலும், தன் புத்திக்கூர்மையால் தேவனை மேற் கொண்டது. போலத் தோன்றும். மனிதன் இப்படி நினைத்துக் கொள்வதால் சாத்தியமில்லாத செயல்திட்டத்தைப் பின்தொடர் கிறான். தேவன் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்தி ருக்கிறார். மனிதன் தன் சாமர்த்தியத்தால் தேவனை மேற்கொள்ளவே முடியாது.

இன்று உலகில் காணப்படுகின்ற ஒழுக்க சீர்கேடு, குற்றம் அதிகரிப்பு, தீமையின் வளர்ச்சி போன்றவைகளெல்லாம் இவ்வுலகம் நன்மை மற்றும் பரிசுத்த காரியங்களின் மீது காட்டிய பாராமுகத்தின் விளைவுகளாகத்தான் இருக்கின்றன. இச்சமுதாயம் தெய்வீக உடன் படிக்கைகளையும், பொருத்தனைகளையும் மீறியதன் விளைவாகத் தான் உறவுகளில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது. உருவக நடையில் சொன்னால், இக்காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் காற்றை விதைத்து சூரைக்காற்றை அறுத்துக்கொண்டிருக்கிறோம்! இவ்வுலகில் நாம் காணும் தீமையின் பெருக்கம் ஒழுக்க சீர்கேடு சமுதா யச் சீரழிவு போன்றவைகளெல்லாம் நம் பாவத்தின் விளைவாகத்தான் இருக்கின்றன. இவைகளின் மத்தியிலும் தேவன் இருந்து கொண்டு நாம் எதை விதைக்கிறோமோ அதை அறுக்கச்செய்து சகலவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

தேவன், இன்னும் நாம் எதைச் செய்ய தெரிந்துகொள்ளுகிறோ மோ அவர் இன்னும் நீதியினிடத்தில் நம்மை அழைத்து அதன் நன்மை களை நாமாகவே அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறார். தேவன் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு நீதியை தெரிந்துகொண்டு அதன்படி வாழ விரும்பும் எல்லோரையும் ஆசீர்வதிக்க அவர் ஆயத்தமாயிருக்கிறார். நாம் தீமையை தெரிந்து கொண்டால் கூட அவர் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டிற் குள் வைத்துக் கொண்டு நாம் எதைத் தெரிந்து கொள்ளுகிறோமோ? அதன் விளைவுகளை அனுபவிக்க நம்மை அனுமதிப்பார்.

நம் தேவன், எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத் துக் கொள்வது மாத்திரமல்ல நமக்கு அழிவை ஏற்படுத்தும் எல்லா செயல்பாடுகள் மற்றும் நோக்கங்களை விட்டுவிட்டு அவரிடம் கிட்டிச் சேரும்படி நம்மை அழைக்கிறார். நாம் பாவத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் விலகியிருக்கும்படி நம்மை அழைக்கிறார். நாம் அநீதியை தெரிந்து கொண்டால் அதன் விளைவுகளையும் நாம்

அனுபவிக்க அனுமதிக்கிறார். அதே நேரத்தில், அநீதியின் பாதையிலிருந்து நாம் விலகியிருக்க வேண்டுமென்றே அவர் விரும்புகிறார். அவர் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு நாம் தீமையை விட்டு விட்டு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தால் அவர் நம்மை பாவங்களிலிருந்து கழுவி, சுத்திகரித்து நம்மை முற்றிலும் சுத்தமாக்க அவர் சித்திரமுள்ளவராயிருக்கிறார். அவர் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி நம்மீது ஆசீர்வாதங்களை வழங்க ஏங்கிக்கொண்டிருக்கிறார் (எபேசி 1:3,4).

ஆசீர்வாதங்களெல்லாம், நம்மை ஆசீர்வதிக்க ஆவலாயிருக்கிற அன்பான சர்வவல்லவரிடமிருந்தே இறங்கிவருகிறது. அழிவும், நாசமும் இன்னும் மற்ற தீமையின் விளைவுகளும் தவிர்க்க முடியாத விதிகளினால் மாத்திரம் விளைவதில்லை. நம் அன்பான சர்வவல்லமையுள்ள தேவனும், நம் துர்க்கிரியைகளின் காரணமாக நாம் துயரத்தையும், துன்பத்தையும் அனுபவிக்க அனுமதித்து விடுகிறார். நம் தேவன் சர்வவல்லவரும், சர்வ ஞானியுமாக இருக்கிறார். அவர் அன்பாக இருக்கிறபடியால் நாம் பாவத்தை விட்டு விலகி அவரிடம் கிட்டிச்சேர வேண்டுமென்று எப்போதுமே நாடுகிறார்.

> நம் தேவன் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வது மாத்திரமல்ல நமக்கு அழிவை ஏற்படுத்தும் எல்லா செயல்பாடுகள் மற்றும் நோக்கங்களை விட்டுவிட்டு அவரிடம் கிட்டிச்சேரும்படி நம்மை அழைக்கிறார்.

**வேதத்தை வாசிக்க நேரத்தை கண்டுபிடிக்க சில வழிகள்**

- காலை வேளையில் வேதாகமத்தை எடுத்துச் செல்ல ஒருபோதும் தவறவேண்டாம்.
- குறைவாகப் பேசுங்கள் இப்பொழுது வேகத்தை வாசிக்க சிலநிமிடங்கள் கூடுதலாக கிடைக்கும்.
- பயணங்களின் போது வேதாகமத்தை எடுத்துச் செல்ல ஒரு போதும் தவறவேண்டாம்.
- குடும்பமாக சேர்ந்து உணவு உண்ணும்போது சில வசனங்களை வாசிக்கவும்

## தேவன்

# கிறிஸ்துவின் நிறைவு

# The Fullness of Christ

Charles Cash

**கீ**ழ்க்காணும் வார்த்தைகள் இங்கிலாந்து நாட்டிலுள்ள *Hampshire* பகுதியிலுள்ள ஒரு தேவனுடைய கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.

நீங்கள் இந்த தேவாலயத்திற்குள் புதியவராக அல்ல, தேவனுடைய விருந்தினராக பிரவேசிக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் உங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியோடும், உதடுகளில் நன்றியோடும் தேவனுக்கு உங்கள் அன்பையும், சேவையையும் பலிகளாக ஏறெடுங்கள். இந்த ஆராதனை ஸ்தலத்தைக் கட்டிய உறுதியும் உண்மையுமுள்ள ஆண்களிடத்திலும், பெண்களிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் நன்றியாயிருங்கள். அதேபோல் தங்கள் ஜெபத்தாலும் துதியாலும் இத்தேவாலயத்தை அழகுபடுத்தி பரிசுத்தபடுத்தியவர்களிடத்திலும் நன்றியாயிருங்கள். இந்த விசுவாச வீட்டை நேசிக்கிற எல்லோரும் தங்கள் பிரயாசத்திற்கான உந்து சக்தியைப் பெற்றுக் கொண்டு தேவனுடைய வல்லமையிலும் அன்பிலும் களிகூருவார்களாக உங்கள் போக்கிலும் வரத்திலும் தேவனுடைய ஆசீர்வாதம் உண்டாயிருப்பதாக.

இந்த கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள வார்த்தைகள் உண்மையில் சபைக் கட்டிடத்தைப் பற்றி விவரித்திருந்தாலும் கூட இன்று சபைக்கு இது கச்சிதமாக பொருந்துகிறது. சபை என்பது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அர்ப்பணிப்புடனும் கீழ்ப்படிதலுடனும் வரும் கூட்டத்தைக் குறிக்கும் சபையை நாம் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்றும் சொல்வோம். இந்த அழைக்கப்பட்டவர்கள் விசுவாச வாழ்க்கை என்பது வேதாக விவரிப்புகளில் ஒருவருடைய தனிப்பட்ட கூட்டமாகிய சபைதான் தேவனுடைய ஆசீர்வாதத்தை முழுமையாக அனுபவிக்கிறது. *Eugene Pattersion* என்பவர் தன்னுடைய புஸ்தகத்தில் விஷயமாக விவரிக்கப்பட்டிருந்தாலும் கூட அது எப்போதும் கூட்டாகவே, ஒரு குடும்பமாகவே, ஒரு சபையாகவே குறிப்பிடப்பட்டிருந்தது. தேவனுடைய அன்பும், இரட்சிப்பும் கெம்பீரசத்தத்தை அறியும் ஜனங்களாகிய சபையாரிடத்தில் வெளிப்படுத்தப்படுகிறது அனுபவிக்கப்படுகிறது (சங்கீதம் 89:15).

மேற்சொல்லப்பட்ட மையநோக்கத்தை மனதில் கொண்டவர்களாய் தேவ ஆவியினால் ஏவப்பட்ட பவுலின் வார்த்தைகளை கவனியுங்கள் எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் [எபேசியர் 1:22,23]. இயேசு கிறிஸ்து சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் மாத்திரமல்ல [கொலோ 1;18] தலைமைத்துவ அதிகாரத்தையும் அவர் பெற்றிருக்கிறபடியால் சபைக்கடுத்த எல்லாக் காரியங்களுக்கும் அவரே தலையாயிருக்கிறார். சபையானது எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாயிருக்கிறது. சுருக்கமாகச் சொல்லப்போனால், நிறைவு என்பது கீழ்க் காண்பவைகளை உள்ளடக்கியது.

முதலாவது, கிறிஸ்து எதை அடையாளப்படுத்துகிறாரோ அதுவே நிறைவாயிருக்கிறது. ''ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது [கொலோ 2:9]. மனித இனத்துக்கான எல்லா வடிவமைப்புகளும், நோக்கங்களும் குறிக்கோள்களும் பரிபூரணமாக கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. Oftenheimer என்னும் அணுவிஞ்ஞானி ஒருமுறை இவ்விதமாகச் சொன்னார். **ஜனங்களிடம் போய்ச்சேர வேண்டுமென்று உங்களிடம் ஒரு கருத்தோ ஓர் எண்ணமோ இருந்தால், அதைக் கொண்டு சேர்க்க திறமைப்பெற்ற ஒரு மனிதனைத் தெரிந்து கொண்டு அவனுக்குள் அக்கருத்தை உட்புகுத்தி அந்த மனிதனை அனுப்புங்கள்** என்று. தேவன் தம்முடைய தெய்வீக நோக்கத்தின்படியே இதைத்தான் கச்சிதமாகச் செய்தார்.

இரண்டாவது, தேவன் தம்முடைய ஜனங்களுக்கு கிறிஸ்து மூலமாக எல்லாவற்றையும் பூரணமாகக் கொடுத்தார். **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்** அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' [எபேசியர் 1:3]. அதேபோல், தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நாம் நிறையப்பட வேண்டுமென்பதும் தேவனுடைய திட்டமாயிருக்கிறது [எபேசியர் 3:19].

மூன்றாவது, கிறிஸ்துவின் பிரசன்னத்தின் பரிபூரணம் நம் ஜீவியங்களில் காணப்படுகிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்

வாழ்க்கை வரலாறு இவ்விதமான வார்த்தைகளோடு முடிவடைகிறது. இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்'' (மத்தேயு 28:20). எபிரெய ஆசிரியர் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று உறுதிப்படுத்துகிறார். எபிரெயர் 13:8. மேற்சொல்லப்பட்ட மூன்று வசனங்களும் தேவனுடைய மகத்தான மூன்று வாக்குத்தத்தங் களாகும். அப்போஸ்தலனாகிய பவுல் நம் வாழ்க்கையை சபைக்குள் இவ்விதமாக சுருக்கியிருக்கிறார். ''நாம் வேண்டிக் கொள்ளுகிறதற் கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய் கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமு றைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக, ஆமென் (எபேசி யர் 3:20,21). தேவனுக்கான நம்முடைய வாழ்க்கையில் சபை மூலமாக நாம் தேவனுக்கு மகிமையைச் செலுத்துகிறோம். அந்தச் சபையில் தான் நாம் கிறிஸ்துவின் நிறைவை அனுபவிக்கிறோம்.

✝

## சுவிசேஷம் என்பது என்ன?

நீங்கள் செய்யும் செயல்களாலும்
நீங்கள் பேசும் வார்த்தைகளாலும் ஒவ்வொரு
நாளும் சுவிசேஷப் புத்தகத்தின் ஓர் அதிகாரத்தை
நீங்கள் எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்
மனிதர்கள் அவைகள் உண்மையா அல்லது
உண்மையற்றவையா என்பதைத்
தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.
உங்களைப் பொறுத்தவரை எது
சுவிசேஷம்? சொல்லுங்கள்.

## தேவன்

# நம் தேவன்

**வி**ஞ்ஞானிகள் நம்மிடமிருந்து கோடிக்கணக்கான ஒளி ஆண்டுகள் துரத்திலுள்ள நட்சத்திரங்கள்,பால்வழிப்பாதை மற்றும், சூரியன்பற்றி பேசுகிறார்கள். உண்மையாகவே, ஆயிரம் கோடி ஒளி ஆண்டுகள் பயணித்த பிறகு இப்பிரபஞ்சத்தின் உருவம் நம் கண்களுக்கு முன்பாக விவரிக்கப்பட்ட திரைச்சீலைப்போல்தான் காட்சியளிக்கும். கோடிக்கணக்கான பால்வழிப்பாதைகள் பிரமாண்டமாக காட்சியளித்து நம்மை பிரமிக்கசெய்கின்றன. இப்பிரபஞ்சத்தின் எல்லையில்லா உருவமும் அதன் சிக்கலானதன்மைகளும், அதன் இரகசியங்களுங்கூட மனிதமனதால் புரிந்துகொள்ள முடியாதவைகளாகவே இருக்கின்றன.

இருந்தபோதிலும், சிருஷ்டிகரும், நித்தியமானவரும்,பரிசுத்தரும், உன்னதமானவருமான தேவன் தம்முடைய வார்த்தையின் வல்லமையால் இவையெல்லாவற்றையும் உண்டாக்கிவிட்டு தம்மைப்பற்றியும், தம்முடைய பண்புகளைப் பற்றியும், இப்பிரபஞ்சத்தைப்பற்றியும் வேதப்புத்தகத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய மகத்துவத்தையும், எல்லையில்லா ஞானத்தையும் நாம் எவ்வளவு அதிகமாக அவருடைய சமுகத்தில் கண்டு உண்மையாகவே பயம் கலந்த ஆச்சரியத்தில் மௌனமாகிறோம்.

இப்படி, தேவனுடைய மகத்துவத்தை எண்ணி நாம் மலைத்துப்போய் நிற்க சிலர் வானத்தில் பழைய மனிதன் என்று கேலி செய்கிறார்கள். வேலுசிலர், இயேசுவே, சுகமாக்கும் என்று நிற்பந்திக்கிறார்கள். இன்னும் சிலர், தேவனைப்பற்றி பலவிதமான பரிகாசங்களை தயார் செய்து எல்லையில்லா வல்லமையைக் கொண்டிருக்கும் பரிசுத்தாரைப் பார்த்து நகைக்கிறார்கள். நான் ஒரு புத்தகத்தைப் பார்த்தேன், அதன் தலைப்பு என் கன்னத்தில் அறைந்ததுபோல் இருந்தது. அப்புத்தகத்தின் தலைப்பு **உட்காரும் தேவனே** என்பதாயிந்தது. எனக்கு கடுங்கோபம் வந்தது மனிதர்களாகிய நாம் நம்மை யார் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம்! ✝

# தேவனுடைய வார்த்தை

# வேதாகமத்தின் ஊடே ஓர் நடை

# A Walk Through The Bible

Paul Halland

**வே**தாகமத்தின் உள்ளான பொருளை ஒரு வரியில் சொல்ல வேண்டுமென்றால், **தேவனுடைய மகிமைக்காக இயேசு கிறிஸ்து மூலமாக மனிதனுடைய இரட்சிப்பு** என்று சொல்லிவிடலாம். ஒட்டுமொத்த வேதாகமும் இதைப்பற்றியதுதான். நாம் வேதாகமத்தின் வரலாற்றை 15 காலங்களாகப் பிரிக்க முடியும். நாம் இந்த வரலாற்றைப் புரிந்து கொள்ளும்போது வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் எப்படி வேதாகம வரலாற்றோடு பின்னிப் பிணையப்பட்டிருக்கிறது என்பதைக் காணமுடியும்.


**ஜலப்பிரயைத்திற்கு முந்தையகாலம்**

வேதாகம வரலாற்றின் முதல்காலம் ஆதியாகம புத்தகத்தின் முதல் எட்டு அதிகாரங்களை உள்ளடக்கியதாகும். இது ஆரம்பச் சம்பவங்களை உள்ளடக்கிய ஒரு பகுதியாகும். அதாவது, உலகம், மனிதன் குடும்பம், பாவம், ஆராதனை போன்றவைகளின் ஆரம்பங்களை இப்பகுதி விவரிக்கிறது.

**ஜலபிரளயத்திற்கு பிந்தையகாலம்:**

இந்த ஜலப்பிரளதிற்கு பிந்தைய காலம் என்பது ஆதியாகம புத்தகம் 9–11 அதிகாரங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இது ஆபிரகாமின் அழைப்புவரை நீள்கிறது.

**பிதாக்களின் காலம்:**



இந்த பிதாக்களின் காலம் என்பது தேவன் நம் முற்பிதாக்களான ஆபிரகாம் **ஈசாக்கு** மற்றும் யாக்கோபோடு நேரடியாக பேசின காலகட்டத்தைக் குறிக்கிறது. இந்த பிதாக்கள் என்னும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஆறுமுறைகள் இடம் பெற்றிருக்கிறது. நம்முடைய ஆய்வின்படி பிதாக்களின் காலம்''

27



என்பது ஆதியாகமம் 11–45 அதிகாரங்களையும், அநேகமாக யோபு புத்தகத்தையும் உள்ளடக்கிய காலகட்டத்தைக் குறிக்கிறது.

**எகிப்தின் காலம்:**

வேதாகமத்தின் அடுத்தகாலம் யாக்கோபு எகிப்துக்கு போவதிலிருந்து ஆரம்பமாகிறது. இந்த எகிப்தில்தான் எபிரெயர்கள் எகிப்தியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு துன்பப்படுத்தப்பட்டார்கள். எபிரெயர்கள் எகிப்திலே போய் சுமார் இருநூறு ஆண்டுகள் வாழ்ந்த போது எகிப்திலிருந்து இஸ்ரவேலர்களை வெளியே கொண்டுவரும்படி தேவன் மோசேயை அழைத்தார். இக்காலகட்டம் ஆதியாகமம் 46–யாத்திராகமம் 14 வரை உள்ள சம்பவங்களை உள்ளடக்கியதாகும். ஆதியாகமம் 32ஆம் அதிகாரத்தில் யாக்கோபு தேவதூதரோடு போராடிய போது அவருக்கு இஸ்ரவேல் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட இக்காலகட்டத்தில் தான் எபிரெயர்கள் இஸ்ரவேலர்கள் என்றழைக்கப்பட்டார்கள்.

சீனாய் மலையில் தேவன் இந்த இஸ்ரவேல் ஜனங்களை ஒரு தேசமாக்கி அவர்களுக்கு ஒரு பிரமாணத்தை அதாவது மோசேயின் பிரமாணத்தைக் கொடுத்தார். இந்த பிரமாணங்கள் எல்லாம் ஒன்றான மெய் தேவனிடத்தில் இஸ்ரவேலர்கள் விசுவாசத்தை இழந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் கொடுக்கப்பட்டது. ஆகவே, கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு கொண்டுவர தேவன் ஜனங்களையும், சட்டத்தையும் ஏற்கனவே ஏற்படுத்தியிருந்தார்.

**அலைந்து திரிந்த காலம்**

வேதாகம வரலாற்றின் ஐந்தாவது காலம் இஸ்ரவேலர்கள் நாற்பது வருடங்கள் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த காலமாகும். இதை நாம் எண்ணாகமம் 13 மற்றும் 14 அதிகாரங்களில் வாசிக்க முடியும். மோசே கானான் தேசத்தை வேவுபார்க்கும்படி 12 வேவுகாரரை அனுப்பினார். ஆனால், அந்த பன்னிரெண்டு பேரில் பத்துபேர் கானான் தேசத்தை சுதந்தரிக்க முடியுமென்று நம்பவில்லை. வேவுகாரர் அந்த தேசத்தில் நாற்பது நாட்கள் இருந்தபடியால் நாற்பது வருடங்கள் இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் அலைக்கழிக்கப்பட்டார்கள். அலைந்து திரிந்த காலம் யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், மற்றும் உபாகமம் வரை நீடிக்கிறது.

**படையெடுப்பின் காலம்**

தேவன் ஆபிரகாமின் சந்ததிக்கு கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை கொடுப்பதற்காக கானான் தேசத்தின்மீது படையெடுக்கும்படி தேவன் யோசுவாவுக்கு கட்டளையிட்டார். இக்கால கட்டம் யோசுவா புத்தகம் முழுவதையும் உள்ளடக்கிய ஒன்றாகும்.

**நியாயாதிபதிகளின் காலம்:**

இஸ்ரவேலர்கள் திரள் திரளாய் கானான் தேசத்துக்குள் பிரவேசித்து அதை மேற்கொண்டாலும் கூட, தேவன் அவர்களுக்கு கட்டளையிட்டபடி அவிசுவாசமான தேசங்களை முழுமையாக விரட்டிவிடவில்லை. இந்த தேசங்கள் இஸ்ரவேலர்களுக்கு பல ஆவிக்குரிய பிரச்சனைகளை உண்டாக்கினார்கள். அந்நாட்களில் நியாயாதிபதிகள் இன்றைய நாட்களில் நீதிபதிகளைப்போல் சட்ட ஆலோசகர்களாக இருக்கவில்லை. அவர்கள் ராணுவத் தலைவர்களாக இருந்தார்கள். நியாயாதிபதிகளில் கிதியோன் மற்றும் தெபோராள் போன்றோர் நல்ல நியாயாதிபதிகளாக இருந்தார்கள். ஆனால், யெப்தா தொடங்கி சிம்சோன் வரையிருந்த நியாயாதிபதிகள் தங்களை மையப்படுத்திய வாழ்க்கை வாழ்ந்து தேவ ஜனங்களை பாதிப்புக்குள்ளாக்கினார்கள்.

**ஐக்கிய ராஜ்யத்தின் காலம்:**

ஆரம்பத்தில் நல்ல ராஜாவாக ஆட்சிசெய்த சவுல் பின்பு மோசமான ராஜாவாக மாறிவிட்டான். அடுத்ததாக அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீது ராஜா சில பாவங்களை செய்திருந்தாலும் கூட, ஒட்டுமொத்தமாக ஒரு நல்ல ராஜாவாகவே இருந்தான். தாவீதின் குமாரனாகிய சாலொமோன் ஐக்கிய ராஜ்யத்தை அரசாண்ட கடைசி ராஜாவாக இருந்தான். தாவீது சாலொமோன் போன்ற ராஜாக்கள் கி.மு. 1000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்கள்.

**பிளவுபட்ட ராஜ்யத்தின் காலம்:**

சாலொமோன் ராஜா தன்னுடைய கட்டுமானப் பணிகளுக்காக இஸ்ரவேலில் வரிகளை உயர்த்தினான். சாலொமோன் மரித்த போது அவருடைய குமாரன் ரெகொபெயாம் அந்த வரிகளை இன்னும் அதிக மாக உயர்த்தினார். ஆகவே, தேசம் இரண்டாகப் பிளந்தது. பத்து கோத்திரங்கள் வடக்கு ராஜ்யமாக ஒன்றிணைந்து இஸ்ரவேல் என்றழைக்கப்பட்டது. அதற்கு சமாரியா தலைநகராக இருந்தது.

தெற்கிலே இரண்டுகோத்திரங்கள் யூதாவும், பென்யமீனும் இருந்தது. தெற்கு ராஜ்யமாக உருவானது. அதன் தலைநகரம் அது எருசலேமாக இருந்தது. வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேலில் விக்கிரக ஆராதனை தலை விரித்தாடியது.

அதன் காரணமாக இஸ்ரவேல் அசீரியாக்களால் தோற்கடிக்கப் பட்டு கி.மு 722 ல் அசீரியாவுக்கு சிறைக் கைதிகளாக கொண்டு போகப் பட்டனர். இந்த அசீரியர்கள் இஸ்ரவேலர்களல்லாதவர்களையும் அசீரியாவுக்கு கொண்டுபோனார்கள். அவர்கள் இஸ்ரவேலர்களோடு கலப்பு திருமணம் செய்ததன் விளைவாக உருவானவர்கள்தான் இந்த சமாரியர்கள்.

இவ்வரலாறு 1 மற்றும் 11 ராஜாக்கள் புத்தகங்கள் முழுவதுமாக பரவியிருக்கிறது. இக்காலகட்டத்தில் தீர்க்கதரிசனம் உரைத்த தீர்க்க தரிசிகள் : ஏசாயா, ஓசியா, யோவேல், ஆமோஸ், யோனா, மற்றும் மீகா.

**யூதாவின் காலம்:**

வடக்கு ராஜ்யம் சிறைபிடிக்கப்பட்டுப் போன பிறகு, தெற்கு ராஜ்யம் 136 வருடங்கள் தனியாக இருந்தது. ஆனால், தெற்கு ராஜ்யமும் பாபிலோனால் சிறைபிடிக்கப்பட்டு கொண்டு போகப்பட்டது. இது கி.மு 586 ல் நடந்தது. இச்சம்பவத்தை நாம் 11 ராஜாக்கள் புத்தகத்திலும், இதே சம்பவத்தை 11 நாளாகம புத்தகத்திலும் வாசிக்கமுடியும். இக்கால கட்டத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள் : எரேமியா (புலம்பல்) ஒபதியா, நாகூம், ஆபகூக், மற்றும் செப்பனியா.

**அடிமையின் காலம்:**

எரேமியா தீர்க்கதரிசி யூதர்கள் பாபிலோனிலே அடிமைகளாக எழுபது வருடங்கள் இருப்பார்கள் என்று தீர்க்க தரிசனம் உரைத்தார்கள்.

**மீட்டமைத்தலின் காலம்:**

தேவனாகிய கர்த்தர் யூதர்களை பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு ஏற்றகாலத்தில் திருப்பிக் கொண்டு வருவதாக

வாக்குத்தத்தம் செய்தார். அக்காலகட்டம்தான் மீட்டமைத்தலின் காலம். இது ஏறத்தாழ கி.மு 520 – 516 ஆண்டுகளில் நடந்தது. இது எஸ்றா நெகேமியா மற்றும் எஸ்தர் புஸ்தகங்கள் முழுவதுமாக பரவியிருக்கிறது. அப்போது வாழ்ந்த சமகால தீர்க்கதரிசிகள் ஆகாய் சகரியா மற்றும் மல்கியா போன்றோர்.

எஸ்தர் ராணியின் சம்பவம் பெர்சியா நாட்டில் நடந்தேறிய சம்பவமாகும். இப்பெர்சிய ராஜ்யந்தான் பாபிலோன் ராஜ்யத்தை மேற் கொள்கிறது. அந்த பெர்சிய ராஜாவாகிய கோரேசு இஸ்ரவேலர்கள் நாடு திரும்ப அனுமதித்தான்.

**பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாட்டுக்கும் இடைப்பட்ட காலம்:**

பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்குமிடையே நானூறு ஆண்டுகள் இடைவெளி காணப்பட்டது. இக்காலகட்டத்தில்தான் பெர்சிய ராஜ்யம் மக்கதோனியா நாட்டின் பிலிப்பாலும், அவருடைய குமாரன் மகா அலெக்சாண்டராலும் வீழ்த்தப்பட்டது. பெர்சிய ராஜ்யத்தை வீழ்த்தி கிரேக்க சாம்ராஜ்யம் ஆரம்பமானது.

கிரேக்க மொழியும் கிரேக்க கலாச்சாரமும் மத்திய தரைக்கடல் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது. அதன் பின்பு ரோம சாம்ராஜ்யம் கிரேக்க ராஜ்யத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை மேற்கொண்டது. இந்த ரோம சாம்ராஜ்யந்தான் நாம் வரலாற்றில் வாசிக்கும் ரோம சமாதானத்திற்கு வழிவகுத்தது. ரோமர்கள் சாலைகளை அமைத்தார்கள்; அவர்கள் சட்டங்களை இயற்றி சமாதானத்தை உண்டு பண்ணினார்கள். இந்த ரோமர்கள்தான் தபால் முறையை அறிமுகப்படுத்தினார்கள். இவைகளெல்லாம் பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்புவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தியது.

**கிறிஸ்துவின் வாழ்க்கை காலம்**

பழைய ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின பிறகு இயேசு கிறிஸ்து தேவனுடைய மகிமைக்காக மனிதனுடைய பாவங்களை இரட்சிக்கும்படிக்கு இவ்வுலகத்திற்கு வந்தார். கிறிஸ்து இவ்வுலகில் 30.33 வருடங்கள் வாழ்ந்தார். அவர் வருகைக்காக எல்லாமே ஆயத்தமாயிருந்தது. ஜனங்கள் (இஸ்ரவேல்) ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள்; சட்டம் (மோசேயின் பிரமாணம்) கொடுக்கப்பட்டிருந்தது. அவர் வாழ்வதற்கு நிலம் ஆயத்தமாயிருந்தது (பாலஸ்தீனம்) இயேசு கிறிஸ்து தம்மைக் கொண்டு பிதா என்ன செய்ய விரும்பினாரோ அதைச் செய்தார். அதன் பின்பு

நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அதன்பின்பு பிதாவினிடத்தில் திரும்பச் சென்றார்.

**சபை அல்லது ராஜ்யத்தின் காலம் ;**

இயேசு கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை அல்லது சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்தார். அந்த சபை அல்லது ராஜ்யம் பெந்தேகொஸ்தே நாளிலே அப்போஸ்தலர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அந்நாளிலிருந்து இயேசு கிறிஸ்து வரும்வரை நாம் ராஜ்யத்தின் காலத்தில் தான் வாழ்கிறோம். கிறிஸ்து மறுபடியும் வந்தபிறகு வேறெந்த காலமும் இருக்காது.

வேதாகம வரலாற்றை நாம் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானது. ஏனென்றால், அதன்மூலம் தேவனுடைய கிரியையை நாம் காணமுடியும். இது அவருடைய வார்த்தையில் விசுவாசம் வைத்து அவருக்கு கீழ்ப்படிய ஏதுவாயிருக்கும்.

## சாத்தானோடு போராட்டம்

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களையும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச் சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். (எபே 6 : 11–7).

சாத்தானுடனான யுத்தத்தில் பக்தி வாழ்வில் பயிற்சி எடுக்காமல், காலத்தைக் கழித்துவிட்டால், ஒருமுறைகூட நம்மால் வெற்றி பெறவே முடியாது. ஆகவே, முறையான பயிற்சியும், பொருத்தமான வஸ்திரமும் இருந்தால் தான் ஆவிக்குரிய வாழ்வில் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அந்த எதிரியை நம்மால் எளிதாக வீழ்த்தி, ஆன்மீக வாழ்வில் வீரநடை போட்டு, கிறிஸ்துவோடு சேந்து பரலோகம் சென்று பரமவாழ்வு வாழமுடியும்.

## தேவனுடைய வார்த்தை

# இவ்வுலகம் எப்படி முடிவடையும்?

# How The World Will End?

David A. Sargent

**பு**திதாக நான் கண்ட ஆய்வறிக்கை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதில் மனித உயிருக்கு முடிவைக் கொண்டு வரும் ஆபத்தான சில காரியங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது Global Challenge Foundation என்ற அமைப்பில் Dennis Pamlin மற்றும் Stnant Armstrog ஆகியோரின் தலைமையின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வில் மனித இனத்தை அச்சுறுத்தும், அல்லது நாகரீகத்தை அழிவுக்குக் கொண்டு வரும் ஆபத்தான காரியங்களைப் பட்டியலிட்டிருக்கிறார். அதை கீழ்க்கண்டவாறு காணலாம்.

**உலகத்தை அநேகமாக அழிக்கப்போகும் 12 காரியங்கள்.**

1. பேரழிவை ஏற்படுத்தும் காலநிலை மாற்றம்
2. அணு ஆயுதப் போர்
3. உலகளாவிய பெருநோய்
4. சுற்றச்சூழல் சம்பந்தமான பேரழிவு
5. உலகளாவிய அமைப்பின் வீழ்ச்சி
6. விண்கற்களின் தாக்கம்
7. எரிமலை வெடிப்பு
8. செயற்கை உயிரியல்
9. நானோ தொழில்நுட்பம்
10. செயற்கை நுண்ணறிவு
11. எதிர்கால மோசமான ஆளுகை
12. இன்னும் அறியப்படாதவைகள்

உலகத்தையும், அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன் இவ்வுலகம் எப்படி முடிவுக்கு வரும் என்று தம்முடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும் ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும், இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்.

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.

இவ்வுலகம் எப்படி அழியப் போகிறது என்பதை தேவன் நமக்குத் தெளிவாக சொல்லியிருக்கிறபடியால் இப்படியிருக்குமா, அப்படியிருக்குமா என்று யூகிக்க வேண்டிய அவசியமில்லை. இப்போது கேள்வி என்னவென்றால், இப்படி இவைகளெல்லாம் அழிந்த போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த தடக்கையும், தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதாயிருக்கிறது (II பேதுரு 3:11)

தேவனுடைய பதில்: நாம் கிறிஸ்தவர்களாயிருக்க வேண்டும். எப்படி நோவாவும், அவருடைய குடும்பமும் தண்ணீரினால் ஏற்பட விருந்த அழிவிலிருந்து காப்பாற்றப்பட பேழையில் இருக்கவேண்டிய தாயிருந்ததோ அதுபோல அக்கினியால் வரவிருக்கும் அழிவிலிருந்து நம்மை நாம் இரட்சித்துக் கொள்ள நீங்களும் நானும் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும். ஏனென்றால், நித்திய அழிவிலிருந்து நம்மை இரட்சிக்க தேவனுடைய தீர்வு இயேசு கிறிஸ்துவாயிருக்கிறார். (மத்தேயு 7:13,14). பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6:23).

தேவன் நம்மீது பாராட்டின அன்பின் காரணமாக நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்துவை சிலுவையில் மரிக்கும்படி ஒப்புக் கொடுத்தார். நாம் பாவ மன்னிப்பையும் நித்திய ஜீவனின் வரத்தையும் பெற்றுக் கொள்ளத்தக்கதாக கிறிஸ்து மரித்தார் ( யோவான் 3:16; எபேசியர் 1:7).

Denny Petrillo எளிய நடையில் சொன்னது போல இவ்வுலகம் அக்கினியால் அழிக்கப்படப்போகிறது. தேவன் எவ்விதமான விதத்தில் அக்கினியை இவ்வுலகத்தை பயன்படுத்தப்போகிறார் என்பது இரகசியமாயிருக்கிறது. ஆனால், நிச்சயமாக இப்பிரபஞ்சத்தை அக்கினியால் அழிக்கப்போகிறார். ஆனால், தேவன் தம்முடைய குமாரனிடத்தில் விசுவாசம் வைத்து (அப்போஸ்தலர் 16:30:31) தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி (அப்போஸ்தலர் 17:30,31) மனுஷருக்கு முன்பாக கிறிஸ்துவை அறிக்கை செய்து ( ரோமர் 10: 9-10) பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறுகிற எல்லோரையும் இரட்சிப்பார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் (அப்போஸ்தலர் 2:38; கலாத்தியர் 3:26,27).

✝

# தேவனுடைய வார்த்தை

தேவனுடைய வார்த்தை

## God's Word

Greg Tidwell

**அ**வர் பிரதியுத்தரமாக, மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல
தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினா
லும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார் (மத்தேயு4:4). நம்
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வனாந்திரத்தில் பிசாசினால் சோதிக்
கப்பட்ட போது, தொடர்ச்சியாக பிசாசுக்கு பதிலடி கொடுப்பதற்கு
வசனங்களை ஆயுதமாகப் பயன்படுத்தினார். நம் கர்த்தரே தீய சக்தி
களை எதிர் கொண்டாரென்றால், நாம் அனுதினமும் தீயசக்திகளை,
சோதனைகளை எதிர் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. நாம் உயிர்
வாழ வேண்டுமென்றால், நாம் கர்த்தருடைய முன் மாதிரியை நம் இரு
தயத்தில் பதிக்க வேண்டும். நாம் சரீரப்பிரகாரமான காரியங்களை
மையப்படுத்தினால், உண்மையாகவே வாழ முடியாது. இவ்வுலகில்
நாம் ஆகாரத்தினால் மாத்திரம் உயிர் வாழ முடியாது. நமக்கு இன்னும்
சில காரியங்கள் தேவை.

பரலோகத்திலிருக்கிற நம் தேவன், நம் தேவைகளை அறிந்து
நம்மை பராமரித்துப் போஷிக்கிறார். ஆனால், கிறிஸ்து மத்தேயு 6:33ல்
நமக்கு போதிக்கிறபடியே தேவன் நம் தேவைகளை சந்திப்பார் என்னும்
விசுவாசத்தில், **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவரு
டைய நீதியையும் தேட வேண்டும்.** ஆனால், தேவனுடைய ராஜ்யத்
தையும் அவருடைய நீதியையும், நாம் எப்படித் தேடுகிறோம்? இவ்வுல
கில் மனித உயிர் சரீர ஆகாரத்தினால் மாத்திரம் நீடிக்கப்படுவதில்லை.
தேவனுடைய வார்த்தையில் காணப்படும் போஷாக்கினாலும் அது
நீடிக்கிறது.

தேவன் பேசியிருக்கிறார். அவருடைய வார்த்தை நித்திய ஜீவ
னுக்கு வழிவகுக்கிறது. தேவனுடைய வார்த்தை நம் விசுவாசத்தைக்
காட்டுகிறது. நாம் கீழ்ப்படிய நமக்கு போதிக்கிறது. தேவனுடைய வார்த்
தையில் நாம் இவ்வுலகில் முழுமையாக, நிறைவாக வாழத் தேவை
யான தகவல்கள் தரப்பட்டுள்ளன. எனவே, நாம் நம் வாழ்வை அவரு
டைய சித்தத்திற்கு இசைவாக அமைத்துக் கொள்வோம். ✝

## தேவனுடைய வார்த்தை

# யோவான் ஸ்நானன் எலியாவா இல்லையா?

# Is John The Baptist, Elijah or Not?

Shane Fisher

**வே**தாகமத்தை சந்தேகப்படுபவர்கள் தொடர்ச்சியாக தெய்வீகமானது அதன் உள்ளடக்கத்தை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் உத்தேசிக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காக யூக அடிப்படையிலான முரண்பாடுகளைத் தேடுகிறார்கள். இப்படி, இந்த சந்தேகப்பேர்வழிகள் கொண்டுவந்த முரண்பாடுகள் ஒன்று சுவிசேஷஎழுத்தாளர்களில் ஒருவனாகிய யோவான் ஸ்நானன், எலியாவா இல்லையா என்பதில் குழப்பமடைந்திருக்கிறார்கள். சரி உண்மையாகவே யோவான் ஸ்நானன் எலியாவா இல்லையா? இக்கேள்விகளை பதிலை மத்தேயு 11:13–14; 17: 12–13; மாற்கு 9:13. சுவிசேஷ எழுத்தாளர் யோவான் இக்கேள்விக்கான பதில்இல்லை என்று சொல்கிறார். அதுவும் யோவான் 1:21 ல் யோவான் ஸ்நானனே தான் எலியா அல்ல என்று சொல்வதை நாம் கேட்க முடியும். அப்படியென்றால், அந்த சந்தேகப்பேர்வழிகள் இறுதியாக முரண்பாட்டை கண்டுபிடித்து விட்டீர்களா? நிச்சயமாக இல்லை.

முரண்பாடு என்பதற்கான உண்மையான விளக்கம் என்ன? முரண்பாடற்ற விதி அளிக்கும் விளக்கம் முரண்பாடான வாக்கியங்கள் ஒரே நேரத்தில், ஒரே வகையில் இரண்டுமே உண்மையாயிருக்க முடியாது'' என்பது.

எலியா அந்நாட்களில் இஸ்ரவேல் தேசத்தில் மிகவும் புகழ் பெற்ற தீர்க்கதரிசிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். (I ராஜாக்கள் 17 லிருந்து II ராஜாக்கள் 2 வரை). இவர் மோசமான அரசன் ஆகாப் மற்றும் அரசியாயிருந்த யேசபேலால் தேசிய அளவில் பரப்பப்பட்டிருந்த அதிலும் குறிப்பாக இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யத்தில் வேர்கள் விட்டிருந்த பாகால் விக்கிரக ஆராதனைக்கு விரோதமாக சமரசமற்ற நிலைபாட்டிற்காக அறியப்பட்டிருந்தார். கர்மேல்பர்வதத்தில் இஸ்ரவேலின் தேவனுக்கு அடையாளமாயிருந்த எலியாவுக்கும் வானிலையின் தேவனாயிருந்த பாகாலுக்கு அடையாளமாயிருந்த தீர்க்கதரிசிகளுக்குமிடையே காரசாரமான வாக்குவாதம் நடந்தது (Iராஜாக்கள் 18). இது பாகாலுக்கு எளிதான போட்டியாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால், பாகால் பரிதாபமாக தோற்றது! ஆனால், காலநிலைகளைக் கட்டுப்படுத்துகிற தேவனுக்கு இது ஒரு போட்டியே அல்ல.

எலியா ஜனங்கள் ஜீவனுள்ள தேவனிடத்தில் திரும்பத்தக்க தன் தீப்பொறி பிரசங்கத்தினால் அவர்களுடைய இருதயங்களில் அனல் மூட்டினார். (1 ராஜாக்கள் 18:39). இஸ்ரவேல் தேசம் சிறைபிடிக்கப்பட்டுபோன பிறகு இஸ்ரவேலர்களுக்கு தீர்க்க தரிசனம் உரைத்த மல்கியா தீர்க்கதரிசி கி.மு. 400 ல் கர்த்தருடைய நாளுக்கு முன்பாக எலியா வந்து மீட்டமைக்கும் இயக்கத்தை தொடங்குவார் என்று முன்னறிவித்தார். இந்த சந்தர்ப்பத்தில் கர்த்தருடைய நாள் என்பது எருசலேம் நகரம் கி.பி 70ல் ரோம ராஜ்யத்தால் அழிக்கப்படுவதைக் குறிக்கிறது. தேசிய நியாயத்தீர்ப்பாக கருதப்பட்ட இந்த மகா கொடியதும், பயங்கரமுமான நாளுக்கு முன்பாக இந்த எலியா தோன்றுவார் என்று தீர்க்க தரிசனம் உரைக்கப்பட்டது. இந்த தீர்க்க தரிசனம் சரியான காலக்கட்டத்தில் நிறைவேறியதா?

ஆசாரியனான சகரியா தேவாலயத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது காபிரியேல் தூதன் அவனுக்கு முன்பாகத் தோன்றி அவன் மனைவி எலிசபெத்து மலடியாயிருந்தாலும் கூட ஒரு குமாரனைப் பெறுவாள் என்று நற்செய்தி அறிவித்தான். மேலும், காபிலியேல் தூதன் ''அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். அவன் எலியாவின் ஆவியும், பலமும் உடையவான் அவருக்கு முன்னே நடப்பான்'' என்று சொன்னான். யோவான் வளர்ந்தபோது, மகாராஜாவாகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாக இருக்கத்தக்க அவன் ஒரு தீர்க்கதரிசியாக அழைக்கப்பட்டான் (ஏசாயா 40:1-3).

யோவான் ஸ்நானன் புகழ்பெற்ற தீர்க்கதரிசிகளுள் ஒருவராக திகழ்ந்தார். அவர் இந்த நவநாகரீக நாட்களில் மிகவும் கீழாக பார்க்கப்படுகிற மனந்திரும்புதல் மற்றும் நரகம் போன்ற தலைப்புகளைக் குறித்து பிரசங்கிக்க பயப்படவில்லை (மத்தேயு). யோவானின் இருதயம் கர்த்தருக்காக பற்றி எரிந்தது. அவர் தன் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டாலும் கூட விவாகம், விவாகரத்து மறுமணம் போன்றவைகளைக் குறித்து உண்மைகளை உடைப்பதில் பின்வாங்கவேயில்லை. (மாற்கு 6:17,18). விக்கிரக ஆராதனையிலிருந்து வெளியே கொண்டு வந்து தேவனுடைய ஐக்கியத்தில் ஜனங்களை மறுபடியும் சேர்க்கும் பணியை செவ்வெனச் செய்தார். யோவான் எலியாவைப்போல் உறுதியாகவும், தைரியமாகவும் பிரசங்கித்தார். எலியாவுக்கு யேசபேல் ஆகாப் போன்ற எதிரிகள் இருந்தார்கள். அதேபோல் யோவான் ஸ்நானனுக்கும் ஏரோது மற்றும் ஏரோதியாள் போன்ற எதிரிகள் இருந்தார்கள்.

பரிசேயரும், வேதபாரகரும் யோவான் யார் எனக் கண்டறியும்படி அவரை அணுகினார்கள். தான் எலியா அல்ல என்று பதிலளித்தபோது தான் மறு அவதாரம் எடுத்த எலியர் அல்ல என்று பொருள்படும்படித் தான் அவ்விதமாக பரிசளித்தார். வேதாகமத்தின் மற்ற வேதவனப் பகுதி கள் யோவான் ஸ்நானனை எலியா என்றழைத்ததற்கான காரணம் யோ வான் குணாதிசயத்திலும் பிரசங்க பாணியிலும் அப்படியே எலியவைப் பிரதிபலித்தார். அது மட்டுமல்லாமல் தேவனிடமிருந்து விலகிப்போன ஜனங்களை மீட்டமைத்து மறுபடியும் தேவனுடைய ஐக்கியத்திற்குள் கொண்டு வருகிற காரியத்திலும் எலியாவை அப்படியே யோவான் ஸ்நானன் பிரதிபலித்தார்.

## வார்த்தையின் ஐந்து அதிசயங்கள்

- **அது ஏவப்பட்டதன் அதிசயம்!** வேதவாக்கியங் களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (II தீமோத்தேயு 3:16).

- **அது உருவாக்கப்பட்டதன் அதிசயம்!** வார்த்தைகள் திடீரென உருவாகவில்லை. அதற்கு சுமார் 1600 வருடங்கள் பிடித்தன கற்பனையின் மேல் கற்பனையும், பிரமானத்தின் மேல் பிரமாணமும் இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமுமாம் (ஏசாயா 28:10).

- **அதன் ஒருமைப்பாட்டின் அதிசயம்!** வேதகாமம் 66 புத்தகங்களைக் கொண்ட ஓர் நூல் நிலையமாக இருந்தாலும் கூட இது ஒரு புத்தகமாகத் திகழ்கிறது. தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவி யினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (II பேதுரு 1:21).

- **அதன் வெளிப்பாட்டின் அதிசயம்!** நம் கைகளில் தவழும் வேதகாமம் தேவனுக்குரியவைகளின் முழுமையான மற்றும் இறுதியான வெளிப் பாடாயிருக்கிறது. தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான் (I கொரிந்தியர்2:11).

- **அதன் தகவலின் அதிசயம்!** உலகத்திலேயே மிகச்சிறந்த இலக்கியம் வேதகாமம் தான். ஆனால், வேதாகாமம் இலக்கியத்தையும் தாண்டி அநேக காரியங்களை உள்ளடக்கிய புத்தகமாகும். இன்னும் சொல்லப் போனால், ஜீவனுக்கும், தேவபக்திக்கும், வேண்டிய யாவற்றையும் வேதகாமம் தன்னகத்தேக் கொண்டுள்ளது (II பேதுரு 1:3).

இரட்சிப்பு

# கல்லறைத் தோட்டத்தில் மிகப்பெரிய கல்

## The Biggest Tombstone in the Cemetery

Charles Box



மரணமும், கல்லறைத் தோட்டங்களும் நமக்குப் புதிதானவைகளல்ல. கடந்த காலங்களில் நம் குடும்ப அங்கத்தினர்கள், சக கிறிஸ்தவர்கள், அயலகத்தார் மற்றும் நண்பர்கள் மரித்திருக்கிறார்கள். நம் பிரியமானவர்களுடைய மரணம் ஒரு வலியுள்ள அனுபவமாகும். ஒரு நாள் எல்லோரையும் போல நம் சரீரமும் மரித்துப் போகும். இருந்த போதிலும், சரீர மரணம் நம் முடிவல்ல. நம் சரீரம் மரிக்கும்போது, நம் ஆவி மரிப்பதில்லை. நாம் அடக்க ஆராதனையில் கலந்துகொள்ளும்போதும், கல்லறைத் தோட்டத்தைச் சுற்றிவரும்போதும் ஆதாமும், ஏவாளும் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்ததன் காரணமாக மனித இனத்தின் மீது வருவிக்கப்பட்ட சாபத்தினால் நாமெல்லோரும் மரணத்தை எதிர்கொள்வோம் என்று நினைப்பூட்டப்படுகிறோம் (ஆதியாகமம்3). மரணம் உண்மையானது. அது ஒரு கற்பனைக்காரியமல்ல. நான் திரும்பிக் கொண்டு சூரியனுக்குக் கீழே கண்டதாவது. ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும் யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது; பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது; தயவு அடைவதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச் செயலும் நேரிட வேண்டும். தன் காலத்தை மனுஷன் அறியான்; மச்சங்கள்

கொடிய வலையில் அகப்படுவது போலவும், குருவிகள் கண்ணியில் பிடிபடுவது போலவும், மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடிதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள் [பிரசங்கி 9:11,12] மரணம் எல்லோரையும் தழுவும். நானும், என் நண்பரும் கல்லறை தோட்டத்தில் ஒருவருக்கருகில் நின்று கொண்டிருந்தோம். எங்களருகே இருந்த கல்லறையின்மீது மிகப்பெரிய ஞாபகக்கல் வைக்கப்பட்டிருந்தது. **இதுதான் அந்த கல்லறைத் தோட்டத்திலேயே மிகப்பெரிய ஞாபகக்கல்லாயிருக்க வேண்டும்.** இருந்தபோதிலும் கல்லறைத்தோட்டத்தில் மிகப்பெரிய ஞாபகக்கல்லாயிருப்பது ஒருவர் தேவனோடு சரியான உறவு வைத்துக் கொள்வதற்கு உத்தரவாதமல்ல.

**கல்லறைகளும், ஞாபகக்கற்களும் புதிதானவைகளல்ல**

வேதாகமத்தின் ஆரம்ப பக்கங்களிலே மரணத்தைப்பற்றி நாம் வாசிக்கிறோம். வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் முதல் மரணம் ஒரு கொலையால் உண்டானது. காயின் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான். அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில் காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலை செய்தான்[ஆதியாகமம்4:8]. அந்நாளிலிருந்து கல்லறைகளும், கல்லறைகளைக் குறிக்கும் ஞாபகக்கல்களும், கல்லறைத் தோட்டங்களும் இருந்து வருகின்றன. சாராள் மக்பேலாவின் குகையிலே அடக்கம் பண்ணப்பட்டாள், [ஆதியாகமம் 23:19]. ராகேல் மரித்து பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்கு போகிற வழியிலே அடக்கம் பண்ணப்பட்டாள். அவள் கல்லறையின் மேல் யாக்கோபு ஒரு தூணை நிறுத்தினான், அதுவே இந்நாள் வரைக்கும் இருக்கிற ராகேலுடைய கல்லறையின் தூண் [ஆதியாகமம் 35;19,20].

**II** ராஜாக்கள் 23:17 ல் ஒரு கிழ தீர்க்கதரிசியால் வஞ்சிக்கப்பட்டு பின்பு கொல்லப்பட்ட ஒரு தீர்க்கதரிசியின் கல்லறையை நாம் காணமுடியும். அக்கல்லறை கல்வெட்டுகளால் குறிக்கப்பட்டிருந்தது. இயேசு கிறிஸ்துவின் சரீரம் அரிமத்தியா ஊரனாகிய யோசேப்பினால் அடக்கம் பண்ணப்பட்டது. இந்த யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்து துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி தான் கன்மலையிலே வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப் போனான் [மத்தேயு 27:57–60].

ஒருவர் குடும்பத்தினரால் ஆழமாக நேசிக்கப்பட்டதன் விளைவாக அவருக்கு கல்லறைத் தோட்டத்தில் மிகப்பெரிய ஞாபகக்கல் வைக்கப்பட்டிருக்கலாம். குடும்ப அங்கத்தினர்கள் அன்பு செய்யப்படுவது, மதிக்கப்படுவது, பாராட்டப்படுவது, ஓர் அருமையான காரியமாகும். ஆனால், நமக்குப் பிரியமானவர்கள் மரித்தபிறகு

அவர்களுக்கு அடக்க ஆராதனையை ஆடம்பரமாகச் செய்வதோ, மிகப்பிரமாண்டமான கல்லறைத் தோட்டத்தைக் கட்டி அதின் மேல் ஞாபகக்கல்லை வைப்பதோ பெரிய காரியமல்ல. அதில் எந்த பிரயோஜனமும் இல்லை. அவர்கள் உயிரோடிருக்கும்போதே அவர்களிடத்தில் அன்பு செலுத்தி அவர்களை கனம்பண்ணி நீங்கள் அவர்களிடத்தில் அக்கறையாயிருக்கிறீர்கள் என்பதைக் காட்டுங்கள். சபை ஒருவரிலொருவர் அன்புகூர யோவான் பயன்படுத்திய அதே வழி முறைகளே குடும்பத்தில் ஒருவரிலொருவர் அன்புகூர உற்சாகப் படுத்துகிறதாக இருக்க வேண்டும். நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷ மாயிருக்கிறது (1யோவான் 3:11). நம் குடும்ப அங்கத்தினர்கள் உயிரோடிருக்கும்போதே நாம் அவர்களிடத்தில் அன்பைக்காட்ட வேண்டும். கல்லறைத் தோட்டத்திலேயே மிகப்பெரிய ஞாபகக்கல்லை எழுப்புவதென்பது ஒருவர் தேவனோடு சரியான உறவை வைத்திருக்கிறார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் அல்ல. அது குடும்ப அன்பின் உண்மையான ஆதாரமும் அல்ல.



ஒருவருக்கு கல்லறைத்தோட்டத்திலேயே மிகப்பெரிய ஞாபகக்கல் வைக்கப்படலாம். ஏனென்றால், இறந்த அந்த நபர் உயிரோடிக்கும் போது அந்தக் குடும்பத்தினால் அவர் உதாசினப் படுத்தப்பட்டிருக்கலாம், புறக்கணிக்கப்பட்டிருக்கலாம், அதைக்குறித்த குற்ற உணர்வின் காரணமாக குடும்பத்தினர்கள் மிகப்பெரிய ஞாபகக் கல்லை வைத்திருக்கலாம். நாம் நம்முடைய அன்பை குடும்பத்தாரிடம் நிரூபிக்க வேண்டுமென்றால் அவர்களோடு நம்முடைய அன்றாட செயல்பாடுகள் முக்கியமானவைகளாகும். ✝

# விலையேறப் பெற்ற கேள்விகள்

மதசம்மந்தமாக நான் எதைப் போதிக்கிறேனோ, எதைச் செய்கிறேனோ அதற்கு வசன அடிப்படையில் காரணத்தைக் கொடுக்க முடியுமா ?

நான் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுகிறேனா? (யோவான் 4:24)

நான் எந்த சபையில் அங்கம் வகிக்கிறேனோ அந்த சபை தேவனுடைய வார்த்தையில் குறிப்பிடபட்டிருக்கிறதா ? (ரோமர் 16:10: மத்தேயு 16:18)

கிறிஸ்துவின் எளிய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய நான் மறுத்துவிட்டேனா? (லூக்கா 6:46; அப்போஸ்தலர் 2:38)

சபையின் ஆராதனையிலிருந்து என்னை நான் விளக்கிக் கொள்கிறேனா? (அப்போஸ்தலர் 20 : 7; எபிரேயர் 10:25)

இப்பூமியில் குடும்பத்தில் நான் பெற்றிருக்கும் எல்லா சிலாக்கியக்களும் நான் அந்த குடும்பத்தில் பிறந்ததினால் எனக்கு கிடைத்தவைகள். அதே போல் தேவனுடைய குடும்பமாகிய சபையில் இருக்க நாம் ஆவிக்குரிய பரிகாரமாகப் பிறக்க வேண்டும்

இரட்சிப்பு

# தற்காலிகமான காரியங்கள், நிரந்தரமான காரியங்கள்

## Things TemPorary, Things Permanent

Joe W. Nichols

இவ்வுலக வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரமல்ல. எல்லாமே தற்காலிகமானது தான் என்பதை ஒருவர் உணரும் போது சற்று பயம் ஏற்படுகிறது. ஓசோன் படலத்தின் சுருக்கம், பூமியும் அதன் தண்ணீரும் மாசுபடுத்தப்படுதல், பூமியின் மீது விண்கல் மோதல், புவிவெப்பமய மாதல், வருங்காலத்தில் சூரியன் எரிந்து போகும் நிலை என்றெல்லாம் பொதுமக்கள் அதிகமாகப் பேசுகிறார்கள். இவைகளையெல்லாம் குறித்து பலர் கவலைப்பட்டுக் கொண்டிருக்க இதை அதிகப்படுத்தும் விதமாக எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென வானமும், பூமியும் ஒழிந்துபோம் என்று வேதாகமும் போதிக்கிறது.

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆசாரிப்புக்கூடாரம், தேவாலயம் மற்றும் ஆசாரியத்துவம் போன்றவைகளைக் குறித்து நாம் சிந்திக்கும் போது எல்லாமே கடந்து போகத்தக்கதாகவும் மாறிப் போகக்தக்கதாக வும் தான் வடிவமைக்கப்பட்டிருந்தது. எபிரெயர் 12:27 7:12]. கூடார மாக இருந்தாலும் சரி, தேவாலயமாயிருந்தாலும் சரி உள்ளேயிருந்த பொருட்கள் அழியும் தன்மை கொண்டவைகளாகவே இருந்தன. அவர்களுடைய தட்டு முட்டு சாமான்களும் அலங்காரப் பொருட்க ளும் எதிரிகளால் கொள்ளையிடப்பட்டு அழிக்கப்பட்டன. இன்று அங்கே மீந்திருப்பது அவர்களுடைய மகிமையான நேரங்களின் பதிவேடு களும், மனித இனத்தின் எந்தப் பிரிவையும் ஆளாத பழைமையான பிரமாணங்கள் தான்.

அதேபோல், திருமணத்தை எடுத்துகொண்டாலும் கூட மனிதனுக்கு ஏற்ற துணையை உண்டாக்கப்பட்டது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். திருமணத்தைப்பற்றிய தேவனுடைய நோக்கம் அவர்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்ப வேண்டும் என்பதாயிருந்தது [ஆதியாகமம் 1:28]. திருமணம் பிள்ளைகளை சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் போஷிக்க ஏற்றசுழலை உருவாக்குகிறது. [ எபேசியர் 6:4]. எல்லா திருமணங்களும் ஏற்ற நேரத்தில் மரணத்தின் காரணமாக முடிவுக்கு வருகிறது. ஆனால், ஒரு தற்காலிக ஐக்கியமாக தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுகிறது [ரோமர் 7:1,2]

தேவனால் வடிவமைக்கப்பட்ட மனிதக் குடும்பத்தை எடுத்துக் கொண்டாலும் கூட பிறக்கிற ஒவ்வொரு குழந்தையும். இப்பூமியில் குறுகிய காலத்தைத்தான் அனுபவிக்கிறது. ஏற்ற நேரத்தில் குடும்பங் கள் பிரிந்து மற்றகுடும்பங்களுக்கு வழிவிடுகின்றன. சரீரப்பிரகாரமான குடும்பங்கள் அநித்தியமானவைகள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. அவைகள் தேவனுடைய தறகாலிக நோக்கத்தை நிறை வேற்றுவதற்காகவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன [மாற்கு 12;5].

இப்போதிருக்கின்ற வானங்களையும், பூமியையும் எடுத்துக் கொண்டால் அவைகள் அழிவுக்காக குறிக்கப்பட்டுள்ளன. அப் பொழுது, வானங்கள் மடமட என்று அகன்றுபோம், [**II** பேதுரு 3:10]. எதிர்காலத்தில் வானங்களும், பூமியும் அது சம்மந்தமான யாவும் இல்லாமல் போகும்.

சிருஷ்டிப்பின் தேவனுடைய நித்திய நோக்கத்தை எடுத்துக் கொண்டால் ஓர் அழகான சித்திரம் தோன்றுகிறது. இப்போதிருக்கிற வானங்களும், பூமியும் இல்லாமல் போகும் என்பது உண்மை தான், ஆனால், தேவன் தம்முடைய சொந்த ஜனங்களுக்கு ஒரு மேலான இடத்தை ஆயத்தமாக்கியிருக்கிறார். நம் பழைய ஏற்பாட்டு பரிசுத்த வான்கள் அதையல்ல அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள் [எபிரெயர் 11:16]. மோசே இவ்வாழ்க்கைக்கு அப்பால் பார்த்திருக்கிறார். இனி வரும் பலன் மேல் நோக்கமாயிருந்து எகிப்தி லுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் [எபிரெயர் 11:26]. இப்படி இவை களெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால். தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருக்க வேண் டும். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதி ய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்க வேண் டும் [**II** பேதுரு 3:11-13].

ஆகவே, தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு இப்பூமிகுரிய அநித்தியமான காரியங்களிலிருந்து விடுபட்டு நித்தியமான காரியங்க ளுக்குள் பிரவேசிக்க வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார். அதுமாத்திர மல்ல, உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு தேவன் என்றென்றும் அழி யாத இடத்தை ஆயத்தமாக்கியிருக்கிறார். [யோவான் 14:1-4; எபிரெயர் 10:19-23 12:27,28]. தேவன் நமக்காக கீழ்க்காணும் காரியங் களை வடிவமைத்திருக்கிறார்.

- புதிய பிறப்பு மற்றும் புதிய ஆவிக்குரிய குடும்பம் (யோவான் 3:3,5; மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38,41,47; I பேதுரு 2:59 I தீமோத்தேயு 3:15).

- புதிய உயிர்தெழுந்த, அழியாத ஆவிக்குரிய சரீரம் (I கொரிந்தியர்; 15:38-54 ;I தெசலோனிக்கேயர் 4:13-18; வெளி 22:14)

- புதிய பரலோக நகரம் யோவான் 14:13

பிதா குமாரன் மற்றும் சத்திய ஆவியானவரோடு ஒரு புதிய தனிப்பட்ட, ஆவிக்குரிய பரலோக உறவு

நம் ஜீவனின் குறுகிய கால அளவையும் (சங்கீதம் 90:1-12) எத்தனை வேகமாக இவ்வுலகில் நம் நாட்கள் கடந்து சென்று கொண்டுடிருக்கிறது என்பதையும் எடுத்துக் கொண்டால், இவ்வுலகத்தாலும், உலகத்திற்குரிய காரியங்களாலும் கவரப்பட நம்மை நாம் அனுமதிக்கிறோமா அல்லது நிரந்தரமும் நித்தியமுமான தேவனுக் கேற்ற காரியங்களில் நம் சிந்தையைச் செலுத்தி அதில் வாழ்கிறோமா? பலர் உலகத்திலும் அதின் இன்பங்களிலும் அன்பு கொள்வதைத் தெரிந்து கொண்டு (யோவான் 2:15-17) மிக மோசமான கசப்பான விளைவுகளை சந்திக்கின்றனர். புதிய ஆவிக்குரிய நித்திய சரீத்திரத்தோடு, புதிய ஆவிக்குரிய நித்திய உறவோடு எந்த தற்காலிகமான பூமிக்குரிய ஆசீர்வாதத்தை ஒப்பிட முடியும்? ஆகவே, நிச்சயமாக கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை நாடுவதும், தேடுவதும் விவேகமான தீர்மானமாக இருக்கும் (தகொலோசெயர் 3:12)

இப்பூமியிலே நம்மை நாம் அந்நியரும், பரதேசிகளுமாகப் பார்த்தால் (பேதுரு 2:11 ) பூமியிலே துன்மார்க்கமான காரியங்களை உண்டு பண்ணுகிற அவயவங்களை அழித்துப்போடுவோம், புதித்தாக்கப்பட்ட புதிய மனுசனை தரித்துக் கொள்வோம் (கொலோ 3:5 -15). இப்பாழாய்ப் போன உலகில் நமக்கு பிரகாசமான எதிர்காலம் இல்லை. பயன்படுத்து வதால் அழிந்துபோகும் பொருள்களைத்தான் இவ்வுலகம் சேர்த்து வைத்திருக்கிறது. தேவன் மாத்திரமே தம்முடைய இயேசு கிறிஸ்து மூலமாகவும், சிலுவை மூலமாக நமக்கு நம்பிக்கையைத் தருகிறார். ஆவிக்குரிய மற்றும் நித்திய காரியங்களைக் குறித்து பரந்து விரிந்த காட்சியைக் கண்ட நாம் எவ்வித தயக்கமுமின்றி, ஊக்கமாக, நம்பிக்கையாக பரலோகம் எனக்காக எல்லாவற்றையும் வைத்திருக்கிறது என்று சொல்ல முடியும். ✝

இரட்சிப்பு

# கிறிஸ்துவுக்குள் சுதந்திரம்

## Freedom In Christ

Vance Hutton



**நீ**ங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்களா? நாமெல்லோரும் ஏதோ ஒரு விதமான சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டு தான் இருக்கிறோம். இது ஒரு அருமையான ஆசீர்வாதம், சிலாக்கியம். எல்லோருக்கும் இவ்விதமான நன்மை கிடைப்பதில்லை. ஒரு சுதந்திரம் உண்டு அது மனித அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரமடைவதை விடவும் மிகப்பெரியது என்று நம்மால் தைரியமாகச் சொல்ல முடியும். நான் கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டிருக்கும் சுதந்திரத்தை மனதில் கொண்டு பேசுகிறேன். கிறிஸ்து நமக்கு சுதந்திரத்தை தருகிறார் [கலாத்தியர்5:11]. அன்பின் அப்போஸ்தலன் யோவான் கிறிஸ்து கொடுக்கும் சுதந்திரம் தான் நம்மை சுதந்திரமாக மெய்யாகவே சுதந்தரமாக்குகிறது என்று சொல்கிறார [யோவான் 8:36]. எத்தனையோ பேர் இவ்விதமான சுதந்திரத்தை அனுபவிப்பதில்லை என்பதை எண்ணிப் பாருங்கள். அவர்கள் சுதந்திரமாக சுற்றித்திரிந்தாலும் கூட அவர்கள் இன்றும் பாவத்தின் ஆதிக்கத்தின் கீழ் தான் இருக்கிறார்கள். அவர்கள் பாவத்திற்கு சேவை செய்கிறார்கள்.

பாவம் அவர்களை ஆண்டு கொள்கிறது. அவர்கள் தங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாக பாவத்திற்கு ஒப்புக் கொடுக்கிறார்கள். பாவம் அவர்களுடைய வாழ்க்கையில் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. அவர்களுடைய இருதயங்களையும், ஆத்துமாக்களையும் பாவம் பிடித்து வைத்திருக்கிறது. அவர்கள் குற்ற உணர்வுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாவத்தினால் தீட்டுப் படுத்தப்படுகிறார்கள். பாவத்தின்

காரணமாக அவர்கள் தேவனிட மிருந்து தனிமைபடுத்தப்படுகி றார்கள். அவர்கள் பாவத்தின் விளைவுகளை இங்கேயே எதிர் கொள்ளுகிறார்கள் இவ்வுலகத் திற்கு அப்பால் நித்திய அழிவு அவர்களுக்காக காத்திருக் கிறது. ரோமர் 6:17, 18 வசனங் கள் ஒருவர் பாவத்தியிருந்து விடுதலையாகிற அனுபவம் பற்றிப் பேசுகிறது. ஒருவர் வேதாகமத்தை எடுக்கும் போது விடுதலைக்கான வாக்குத்தத் தத்தையும், விலையையும், திட்டத்தையும் காண்கிறார். இவைகளை என்னோடு சேர்ந்து கவனியுங்கள்.

**சுதந்தரத்திற்கான வாக்குத்தத்தம்**

வேதாகமத்தின் அழகான ஆறுதலான வசனங்கள் பாவத்தி லிருந்தும், அதன் ஆதிக்கத்திலி ருந்தும் விடுதலையை வாக்குத் தத்தம் செய்யும் வசனங்களா கவே இருக்கும். பாவம் உறைந்த மழையைப் போல் வெண்மையாக்கப்படும் என்ற வாக்குத்தத்தத்தை சற்று சிந்தித் துப் பாருங்கள் [ஏசாயா 1:18].

பாவங்களை தேவன் சமுத்தி ரத்தின் ஆழங்களில் போட்டு விடுவதாகக் குறிப்பிடுகிறார் [மீகா 7:18,19]. அதே போல், எரேமியாவும் தேவன் தம்மு டைய ஜனங்களின் பாவங் களை நினையாதிருப்பதாகச் சொன்னார் [எரேமியா 31:34]. இது எல்லோருக்கும் பிரியமான ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால், எல்லோரும் பாவஞ் செய்திருக்கிறார்களே [ரோமர் 3:23]. இந்த வாக்குத் தத்தம் வருசந்தோறும் பாவங் களை நினைப்பூட்டிய பழைய பிரமாணத்தை விட மேலானது [எபிரெயர் 10:1]. நம்மால் விடு தலை ஆக முடியும்யோவான் [8:32]. இப்படிப்பட்ட சுதந்தி ரத்திக்கு நாம் தேவனுக்குத் தான் நன்றி செலுத்த வேண்டும் [ரோமர் 6:17,18]. உங்கள் மோச மான எண்ணங்கள், பேசிய தீமையான வார்த்தைகள், செய்ய நினைத்து செய்யத் தவறிய காரி யங்கள் போன்றவைகளினால் உண்டான குற்ற உணர்விலி ருந்து விடுதலையாக விரும்புகி றீர்களா? மன்னிப்பு மற்றும் விடு தலையின் வாக்குத்தத்தங்க ளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

**சுதந்திரத்திற்கான விலை**

சுதந்திரத்துக்கான விலை ஒரு போதும் மலிவாக இருப்ப தில்லை. இந்த சுதந்தரத்துக்கான விலை கிறிஸ்துவின் விலையே றப் பெற்ற இரத்தமாயிருக்கிறது. கிறிஸ்துவினாலே மாத்திரமே நாம் விடுதலையாக்கப்படுகி றோம் [கலாத்தியர் 5:1]. அவர் தம் முடைய இரத்தத்தினாலே நம்மை மீட்டுக் கொண்டார். I பேதுரு 1:18,19] . அவருடைய நீதியினாலே நீதிமான்களாக்கப்ப டுகிறோம் [II கொரிந்தியர் 5: 21] நம்மைச் சுத்திகரிக்கும் படி

அவர் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார் (தீத்து.2:13,14). நமக்கு விடுதலை கிறிஸ்து மூல மாகத் தான் (கலாத்தியர் 1:4). இந்த சுதந்திரம் எல்லோருக்கும் அளிக்கப்படுகிறது (யோவான் 3:16). நீங்கள் சுதந்திரமாக இருக் கிறீர்களா?

**சுதந்திரத்திற்கான திட்டம்**

சுதந்திரம் எல்லோரும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்கிறது (தீத்து 2:11,18). ஆனால், இன்னும் பலர் அடிமைத்தனத்தில் தான் இருக்கிறார்கள். ஒரு திட்டம் ஒன்று பின்பற்றப்பட வேண்டும். இந்த அருமையான ஆசீர்வாதங் களைப் பெற்றுக் கொள்ள தேவன் சில நிபந்தனைகளை விதித்திருக்கிறார்.தேவனுடைய வார்த்தைகளை கேள்விப்பட வேண்டும் ( ரோமர் 10:17). விசு வாசிக்க வேண்டும். எபிரெயர் 11:6, பாவங்களிலிருந்து மனந்தி ரும்ப வேண்டும் (லூக்கா 13:3). கிறிஸ்துவை மனுசருக்கு முன் பாக அறிக்கையிட வேண்டும் ( ரோமர் 10:10), ஞானஸ்நானம் பெற வேண்டும். (அப்போஸ்தலர் 2:38), மரணபரியந்தம் உண்மை யுள்ளவர்களாக இருக்க வேண் டும் வெளி 2:10.


உண்மையான சுதந்திரத் தின் சந்தோஷம் உங்களுக்குத் தெரியுமா? விடுதலையாக்கப் பட்ட பிறகு மீண்டும் அடிமை தனத்திற்கு போய்வீட்டீர்களா? நீங்கள் மறுபடியும் திரும்பி வர முடியும். இன்றே கர்த்தருக்குக் கீழ்ப்படியுங்கள்.

கர்த்தாவே நான் ஒளிவீசும்
விளக்காக இருக்கட்டும்

அதனால் மற்றவர்கள் என்
சொல்லிலும், செயலிலும்

உம்முடைய இரக்கத்தையும்
அன்பையும் காணட்டும்

## ஜனங்கள் பிறக்கிற அந்த ராஜ்ஜியம் என்ன?



... ஒருவன் மறுபடியும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் (யோவான் 3:5)

... இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை பரலோக ராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத்தருவேன்...

... எல்லோரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் (Iகொரிந்தியர் 12:13).

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபேசியர் 1:23).

அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோசெயர் 1:18).

இதினிமித்தம் நான் பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழுங்கால் படியிட்டு (எபேசியர் 3:14,15)

அந்த ராஜ்ஜியம் அவருடைய ஒரே சரீரமாகிய சபையாயிருக்கிறது. அதற்கு அவரே தலையாயிருக்கிறார்.

சபை என்பது குடும்பமாயிருக்கிறது. கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறது இது மணவாளனுடைய பெயரைத்தான் தரித்திருக்க வேண்டும்.

# உண்மையான சபையினிடத்தில் நாம் எப்படி திரும்ப முடியும்

# How Can We Get Back To The Original Church?

## Ken Tyler

இயேசு கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்கள் மூலமாக முதல் நூற்றாண்டில் ஏற்படுத்திய சபை, ஒரு மார்க்கப் பிரிவினை சபை அல்ல. அது தூய்மையான நிலையில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது. இதை பெரும்பாலானோர் ஒத்துக் கொள்வார்கள். ஆனால், உண்மையான சபைக்கு மறுபடியும் திரும்புவதைக் குறித்து பேசும் போதும், அதற்கான காரியங்கள் பற்றி பேசும் போதும் அதை ஒத்துக் கொள்பவர்கள் ஒரு சிலர் தான். மார்க்கப்பிரிவினை கூட்டத்திலிருந்து நம்மை விலக்கிக்கொள்வது என்பது எளிதான காரியமல்ல. ஆனால், நாம் செய்யும் காரியங்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் இது அவசியமாயிருக்கிறது யோவான் 17:20– 22; ரோமர் 16:17; I கொரிந்தியர் 1:10–13;3:1–4; எபேசியர் 4:1–6; கலாத்தியர் 1:6–8). புதிய ஏற்பாட்டில் காணப்படாத பாரம்பரியங்களையும், மார்க்கப்பிரிவினை அமைப்புகளையும் நியாயப்படுத்த முயற்சிப்பதை நாம் நிறுத்திக் கொள்வோம்.

தேவன் நாம் ஒன்றை விசுவாசிப்பதற்கும், மற்றவர்கள் வேறொன்றை விசுவாசிப்பதற்கும் நமக்கு உரிமை தருவதில்லை. அந்த மாபெரும் நாளில் நாமெல்லாரும் ஒரே புத்தகத்தால் நியாயந்தீர்க்கப்படப்போகிறோம். அப்புத்தகம் என்ன என்பது நமக்குத் தெரியும். நாம் ஒரு மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தை உருவாக்கவோ அல்லது அதில் சேர மற்றவர்களை அழைக்கவோ நமக்குத் எந்த வித உரிமையோ அல்லது அதிகாரமோ கிடையாது. நாம் தேவனுக்கு கீழ்ப்படியும் போது ஒன்றாக்கப்படுகிறோமே தவிர, மார்க்கப் பிரிவினைகளாக அல்ல (எபேசியர் 2:16' கொலோ 3:15;I கொரி 12:13; அப்போஸ்தலர் 2:38 – 4;47).

நாம் பூர்வ எல்லைக் குறியை நாம் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும். நாம் மறுபடி பழையநிலைக்குத் திரும்புவோம்; ஆம், முதல் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட சபைக்கு நாம் மறுபடியும் திரும்புவோம் (இந்த சபையை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வதில்லை என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் மத்தேயு 16) நாம் பாரம்பரியங்களை விட்டொழித்துவிடுவோம். ✝

> நாம் மறுபடியும் பழைய நிலைக்கு தாழ்மையாக திரும்புவோம். ஆம், முதல் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட சபைக்கு நாம் மறுபடியும் திரும்புவோம்

சபை

# இயேசு எங்கே ஆராதிப்பார்?

## Where Would Jesus Worship?

Allen Webster


கிறிஸ்து இப்பூமியில் ஒருவேளை திரும்பி வந்து இந்த வாரம் நாம் வாழ்கின்ற பகுதியை வந்து பார்வையிட்டால், ஞாயிற்றுக் கிழமையில் எங்கே தேவனை ஆராதிப்பதற்காக கலந்து கொள்வார்? நிச்சயமாகவே சபைகள் என்ற பெயரில் நிறைய பல பிரிவினை சபைகள் உள்ளன. அவர் பிரிவினைவாத சபைகளைத் தெரிந்து கொள்வாரா? இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் ஆராதனை நாளில் தேவனை தவறாமல் ஆராதிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் ( லூக்கா 2:42:4:16). ஆகவே, அவர் இப்பூமிக்கு திரும்பி வந்தால் எங்கே போய் ஆராதிப்பார்?

கிறிஸ்து அவருடைய நாமத்தை கனப்படுத்தும் ஒரு சபையில் தான் கலந்து கொள்வார். இயேசு கிறிஸ்துவே எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் (கொலோ 1:18). எல்லாரும் அவரை, கனப்படுத்துகிற காரியத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஆனால், அவருடைய விலையேறப்பெற்ற நாமத்திற்கு கொடுக்க வேண்டிய மரியாதையை, மதிப்பை கொடுப்பதில்லை. ஒரு மத அமைப்பு எந்த பெயரை வைத்திருக்கிறதோ அது முக்கியமானது. ஏனென்றால், ஒவ்வொரு முறை அந்த பெயர் பயன்படுத்தப்படும் போதும் யாருடைய பெயர் பயன்படுத்தப்படுகிறதோ அவருக்குத்தான் கனம் கொடுக்கப்படுகிறது. பெரும்பாலான சபையின் பெயர்கள் ஒரு மனிதனையோ, சபையின் கொள்கைகளையோ அல்லது அதன் அங்கத்தினர்களையே தான் கனப்படுத்துகின்றன.

கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்தவர்கள் என்றழைத்துக் கொள்ளும் போது கனப்படுத்தப்படுகிறார். கிறிஸ்தவர்கள் என்று மாத்திரமே தம்மைப் பின்பற்றுபவர்கள் அழைக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார். மனிதனால் உண்டாக்கப்பட்ட பதவி பட்டங்களால் அழைக்கப்படுவதில் அல்ல. ஒருவரைப் பார்த்து மத சம்மந்தமாக அவர் என்னவாயிருக்கிறார் என்று கேட்கப்படும் போது அவருடைய பதில் கிறிஸ்துவை கனப்படுத்தும் அல்லது கனவீனப்படுத்தும். நாம் கிறிஸ்தவர்களாக மட்டும் அழைக்கப்படும் போது ராஜாதிராஜாவாக கிறிஸ்து கனப்படுத்தப்படுகிறார் (I தீமோத்தேயு 6:15).

வேதாகமம் கிறிஸ்தவன் என்னும் பெயருக்கு அதிக அழுத்தம் கொடுக்கிறது. ஏசாயா **ஜாதிகள் உன் நீதியையும், சகல ராஜாக்கக ளும் உன் மகிமையையும் காண்பார்கள். கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்** என்று தீர்க்க தரிசனம் உரைத்தார் [ ஏசாயா 62:2] முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று [ அப்போஸ்தலர் 11:26] அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை [அப்போஸ்தலர் 4:12]. பவுல் அகிரிப்பாவுக்கு போதித்த போது, அகிரிப்பா பவுலைப் பார்த்து நான் கிறிஸ்தவனாகிற தற்குக் கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்று சொன்னான் [அப்போஸ்தலர் 26:28] கிறிஸ்து எப்படி மகிமைப் படுவார்? ஒருவன் கிறிஸ்துவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன் [I பேதுரு 4:16]. நாம் கிறிஸ்துவின் நாமத்தைக் தரித்துக் கொள்வதன் மூலமாகக் தேவனை நாம் மகிமைப்படுத்த முடியும். யாக்கோபு ஆசிரியர் இதை நல்ல நாமம் என்றழைக்கிறார் [யாக்கோபு 2:7]. இந்த பெயரில் கிறிஸ்து பிரியப்படுவார் என்பதை நாமெல்லாரும் ஒத்துக் கொள்வோம் பிரிவினை சபைகளின் பெயர்கள் களைந்தெறியப் பட வேண்டும் [I கொரிந்தியர் 1:12].

கிறிஸ்து இப்பூமிக்கு வந்தால் அவருடைய உபதேசத்தை போதிக்கும் சபையில் தான் கலந்து கொள்வார். நிச்சயமாகவே, எல்லா சபைகளும் கிறிஸ்துவின் உபதேசத்திலிருந்து சில காரியங்களை போதிக்கத்தான் செய்கின்றன. ஆனால், அவர் சில தவறுகளையும் சில உண்மைகளையும் போதிக்கிற சபையில் கலந்து கொள்வாரா? இல்லை அவர் அப்போஸ்தலருடைய போதனையை மற்றவர்கள் பின்பற்றும்படி போதித்தார் [மத்தேயு 16:19;யோவான் 16:13]. அது மாத்திரமல்ல, அப்போஸ்தலருடைய உபதேசம் முழுவதையும் பின்பற்றுபவர்களைத் தான்



அவர் அங்கீகரிக்கிறார் [அப்போஸ்தலர் 2:42;20:26-27]. கிறிஸ்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்று சொல்லி யிருக்கிறார் [மத்தேயு 28:20]. மேலும், கிறிஸ்து பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை என்றும் சொல்லி யிருக்கிறார் [மத்தேயு 7:21] வேதாகமம் முழுமையாக பின்பற்றப்படாத சபைக்கு நிச்சயமாக கிறிஸ்து போகமாட்டார் [I பேதுரு 4:11 அதே போல சபை அங்கத்தினர்கள் தேவ பக்தியுள்ள வாழ்க்கை வாழும் படிக்கு போதிக்கப்படாத சபைக்கும் அவர் செல்லமாட்டார் [தீத்து 2:11,12].

கிறிஸ்து இப்பூமிக்கு வந்தால் ஆவியோடும் உண்மையோடும் தேவனை தொழுது கொள்ளும் சபையில் தான் கலந்து கொள்வார் [யோவான் 4:24]. அவர் தம்முடைய நாமத்தில் கூடுபவர்களோடு கூட இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் [மத்தேயு 18:20]. அதே போல் இசைக்கருவிகள் வாசிக்கப்படும் சபையில் நிச்சயமாக கிறிஸ்து கலந்து கொள்ளமாட்டார். அவர் ஆராதனையில் எல்லோரும் பாடல் பாடத்தான் கட்டளையிட்டார்[ எபேசியர் 5:19]. கிறிஸ்து வேத வாக்கியங்களோடு எதையாவது கூட்டுகிறவர்களையும் அதிலிருந்து எதையாவது குறைக்கிறவர்களையும் அவர் கடிந்து கொள்கிறார் [வெளி22:18,19].

கிறிஸ்து தேவனை ஆராதிப்பதைவிட பொழுது போக்கு அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சபையில் கலந்து கொள்ளமாட்டார் [ யோவான் 4:24 ; கலாத்தியர் 1:10] அவர் வேதாகம மேற்கோள்களால் நிரப்பப்பட்ட பிரசங்கங்கள் எங்கே பிரசங்கிக்கப்படுகிறதோ அங்கே தான் தேவனை ஆராதிப்பார் [II தீமோதேயு 4:2]. இரட்சிப்பின் திட்டம் எந்த சபையில் போதிக்கப்படுகிறதோ அங்கே தான் கிறிஸ்து கலந்து கொள்வார். கிறிஸ்து இப்பூமிக்கு வந்ததன் நோக்கமே ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காகத்தான் [லூக்கா 19:10]. அதனால் தான் அவருடைய சபை இன்றும் இருக்கிறது[மாற்கு 16:15,16]. சத்தியம் மட்டுமே ஒருவரை விடுதலையாக்குகிற படியால் [ யோவான் 8:32] சத்தியத்தை கற்றுக் கொண்டு அதற்கு கீழ்ப்படிகிறவர்களுக்குத்தான் இரட்சிப்புக் கிடைக்கிறது [எபிரெயர் 5:8,9].

கிறிஸ்து விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிப்பு என்று போதிக்கும் சபையில் தேவனை ஆராதிக்கமாட்டார். ஏனென்றால் அவரோ, தேவ ஆவியினால் ஏவப்பட்ட சுவிசேஷகர்களோ அவ்விதமாக போதிக்கவில்லை [ யாக்கோபு 2:24]. அதேபோல் ஞானஸ்நானம் எங்கே பரிகாசம் செய்யப்பட்டு அதன் இரட்சிக்கும் வல்லமை எங்கே மறுக்கப்படுகிறதோ அங்கே நிச்சயமாக கிறிஸ்து தேவனை ஆராதிக்கமாட்டார். ✝

# நான் உம்முடைய ராஜ்யத்தை நேசிக்கிறேன், கர்த்தாவே

## I Love Thy Kingdom, Lord

### Jimmy Young

கர்த்தருடைய ராஜ்யம் அல்லது சபை இவ்வுலகம் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும் படியாக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளுள் ஒன்றாகும். சபையானது தன்மை அடிப்படையில் பூமிக்குரியதல்ல. அதன் தோற்றமும்,பணியும் பரத்திற்குரியதாகும். நாம் சபையில் இருப்பதால் ஆட்டுக்குட்டியானவரின் புத்தகத்தில் நம் பெயர்கள் எழுதப்பட்டு நாம் பரலோகத்தில் குடியுரிமை பெற்றுக் கொள்கிறோம் (வெளிப்படுத்தின விசேஷம் 21:27). சபை என்பது என்ன? அது எதை அடையாளப்படுத்துகிறது. அது எந்த அளவு முக்கியமானது என்பதை நாம் அறிந்து கொள்ளும் போது சபையை நேசிக்காமல் நம்மால் இருக்கவே முடியாது. அப்படியிருந்தால், நாம் இருதயம் இல்லாதவர்களாகத்தான் இருப்போம்.

கொஞ்ச நேரம் எடுத்து வேதாகமத்தை முழுமையாகப் படித்து பாருங்கள். அப்படிச் செய்யும் போது சபையை நாம் உண்மையாக நேசிக்கவும், இன்னும் கூடுதலாக சபையின் மதிப்பை நாம் உணரவும் முடியும்.

**கர்த்தாவே நான் உம்முடைய ராஜ்யத்தை நேசிக்கிறேன்.**

ராஜ்யம் அல்லது சபை மீதான அன்பு தேவன் நமக்கு செய்திருக்கிற காரியங்களை நாம் உணர்ந்து பார்க்கும் போது எளிதாக வருகிறது. ஒருவரை தேவனிடத்தில் நன்றியுள்ளவராக்கி நான் சபையை நேசிக்கிறேன் என்று சொல்வதற்கு மூன்று உண்மைகள் காரணமாகின்றன 1. நான் தேவ சாயலில் உண்டாக்கப்பட்டுள்ளேன் (ஆதியாகமம் 1:26,27). 2. எனக்கு சுயமாக தெரிந்து கொள்ளும் உரிமை உண்டு 3. நான் என்னவாக ஆக்கப்பட்டிருக்கிறேன். நான் தேவனுடைய பிள்ளையாக மாறுவதற்கான அதிகாரத்தை தேவன் எனக்கு தந்தார் (யோவான் 1:12).

**கர்த்தாவே நான் உம்முடைய ராஜ்யத்தை நேசிக்கிறேன்.**

நன்றி நிறைந்த இருதயத்திற்கு சபைக்கான அன்பை வெளிப்படுத்துவதற்கு எந்த சிரமமும் இருக்காது. பொதுவாக, நாம் பார்க்கும் போது அன்பு என்பது இருதயத்திலிருந்து ஊற்றெடுத்து வருகின்ற ஒன்றாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருமுறை உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்று சொன்னார் (மத்தேயு 6:21). சிலருக்கு அன்பைப்

பற்றி சரியான புரிதல் இல்லை. அன்பு சில காரியங்களை எதிர்பார்க்கிறது என்பதைப் பற்றிய தெளிவான அறிவு நமக்கிருக்க வேண்டும். அன்பு எவைகளையெல்லாம் எதிர்பார்க்கிறது என்பதை கொஞ்ச நேரம் எடுத்து நாம் ஆராய்வோம்.

- ✎ உங்கள் இருதயத்தை தேவனுக்கு அர்ப்பணியுங்கள் [I சாமுவேல் 16:7 ; நீதிமொழிகள் 4:23]
- ✎ ராஜ்யத்திற்கு முதலிடம் கொடுங்கள் [மத்தேயு 6:33]
- ✎ தேவ பக்தியுள்ள வாழ்க்கை மூலமாக அதன் நற்பெயரை பாதுகாத்துக் கொள்ளுங்கள் [தீத்து 2:11,12 ; I தீமோத்தேயு4:12]
- ✎ அதன் சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படியுங்கள் [மத்தேயு 7:21; யோவான் 14:15]
- ✎ அதற்கு ஆதரவாகப் பேசுங்கள் [யூதா 3]
- ✎ அதன் நோக்கத்தை நிறைவேற்றுங்கள் [மத்தேயு 28:18-20]
- ✎ அதன் ராஜாவுக்கு உண்மையுள்ளவர்களாயிருங்கள் [வெளி2:10]

**கர்த்தாவே நான் உம்முடைய ராஜ்யத்தை நேசிக்கிறேன்.**

நாம் கர்த்தருடைய ராஜ்யத்தை நேசிப்பதற்கு அந்த ராஜ்யம் நம்முடையதல்ல, அது அவருடையது என்பதை அறிந்து கொள்வது அவசியமாகிறது. நிச்சயமாகவே, கர்த்தருடைய காரியங்கள் சம்மந்தமாக எல்லாவற்றையும் நாம் நேசிக்கிறோம். அவருடைய ராஜ்யம் அவருடைய ஜனங்களாலானது [ யோவான் 3:3-5]. அவருடைய ராஜ்யத்தில் அவர் ராஜாவாகவும், கர்த்தராகவும் இருக்கிறார் [லூக்கா 19:38 ; I தீமோத்தேயு 6:15]

**கர்த்தாவே நான் உம்முடைய ராஜ்யத்தை நேசிக்கிறேன்.**

இது பரலோக ராஜ்யமாகும் மத்தேயு 4:17 ; கொலோ 1:13] சபை நியமிக்கப்பட்டது [எபேசியர் 3:10,11]சபை வாக்குத்தத்தம் செய்யப்பட்டது [ ஆதியாகமம் 3:15] சபை தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது [ஏசாயா 2:2-4 ; தானியேல் 2:44]. சபை யோவான் ஸ்நானனால்

ஆயத்தமாக்கப்பட்டது ( மத்தேயு 3:12). சபை கிறிஸ்துவால் வாங்கப்பட்டது ( அப்போஸ்தலர் 20:28). சபை பரிசுத்த ஆவியானவரால் பூரணமாக்கப்பட்டது ( அப்போஸ்தலர் 2) கடைசியாக, சபையானது அப்போஸ்தலர்களால் அவர்களுடைய பிரசங்கங்களில் போதிக்கப்பட்டது.

கடைசியாக, ராஜ்ஜியம் அப்போஸ்தலருடைய பிரசங்கத்தால் மேம்படுத்தப்பட்டது. இது கீழ்க்காணும் காரியங்களில் காணப்படுகிறது.

- ✎ இரட்சிப்பின் திட்டம்
- ✎ ஆளுகை அமைப்பு
- ✎ பெயர்
- ✎ ஊழியம்
- ✎ நம்பிக்கை

மேலும், ராஜ்யம் அதன் தெய்வீகத் தன்மையாலும், நீடித்திருக்கும் தன்மையாலும் ( எபிரெயர் 12:28); தெய்வீகப் பிரமாணத்தால் ஆளப்படுவதாலும் நம்மால் உயர்வாக பார்க்கப்படுகிறது. சபை மிகப் பெரிய ஊழியத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. (மத்தேயு 28:18–20). சபை ஒரு போதும் அதன் தலையை, இரட்சகரை மாற்றுவதில்லை ( அப்போஸ்தலர் 2:36; எபிரெயர் 13:8). பரலோகம் தான் நாம் சேருமிடமாக இருக்கிறது.

**கர்த்தாவே நான் உம்முடைய ராஜ்யத்தை நேசிக்கிறேன்.**

இயேசு கிறிஸ்து மெய்யாகவே நம் ஆண்டவராயிருக்கிறார் (அப்போஸ்தலர் 2:36). நான் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்ததினால் இயேசு கிறிஸ்துவை கர்த்தராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். வாழ்க்கையின் எல்லா பிரச்சனைகளுக்கும் இது தீர்வாயிருக்கிறது.

சகோதரரே, இது கர்த்தாவே நான் உம்முடைய ராஜ்யத்தை நேசிக்கிறேன் என்று சொல்வது போதுமானதல்ல. நாம் உண்மையாகவே அதை நேசிக்க வேண்டும். ராஜ்யத்தின் ராஜாவுக்கும், அதன் ஊழியத்திற்கும் உண்மையாயிருப்பதன் மூலமாக நேசத்தை நிரூபிக்க வேண்டும். அன்பு எப்போதுமே நீண்டகால செயல்பாடுகளினால் நிரூபிக்கப்படுகிறது (யோவான் 14:5,21,23,24). ✝

# ஒரு மணவாட்டி தன் மணவாளனை மறக்கும் போது...

## When a Bride Forgets Her Husband...

Glenn Colley

**Kim** மற்றும் **Krickitt** தம்பதியினருக்கு திருமணமாகி பத்து மாதங்கள் ஆனது. அவர்கள் ஓரிடத்திற்கு பயணித்துக் கொண்டிருந்த போது பயங்கரமான விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் மனைவியாகிய **Krickitt** க்கு மிக மோசமான காயம் ஏற்பட்டது. ஆனால், அவள் தன் மனபலத்தாலும், கணவன் **Kim** ன் உதவியாலும் படிப்படியாக இயல்பு நிலைக்கு திரும்பினாள். இருந்த போதிலும், அங்கே ஒரு பெரிய தடை இருந்தது. விபத்தின் போது அவளுக்கு தலையில் ஏற்பட்ட கடுமையான காயம், அவளுடைய நினைவை இழக்கச் செய்துவிட்டது. அவளுக்கு தன் கணவனைக் குறித்து எந்த நினைவும் இல்லை. அவள் தன் கணவனை தினமும் பார்த்தாலும் கூட எந்த உணர்வும் அவளுக்கு ஏற்படவில்லை. தன் மனைவிக்கு மீண்டும் நினைவைக் கொண்டு வர எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோல்வி அடைந்து தளர்ந்து போய், திருமணத்திற்கு முன்பு தன் மனைவியின் மனதில் இடம் பிடிக்க எடுத்த முயற்சிகள மீண்டும் முயற்சிக்க விரும்பினார். எனவே, தன் மனைவியை வெளியே அழைத்துக் கொண்டு போய் பல இடங்களை சுற்றிக்காட்டி அவளை மகிழ்வித்த போது இப்படி பலமுறை செய்த போது, முழுமையாக இல்லாவிட்டாலும் கூட ஓரளவு அவளடைய நினைவு திரும்பியது அவர்கள் இருவரும் புதிதாக திருமணம் ஆனது போல் உணர்ந்தார்கள்.

புதிய ஏற்பாட்டில் பலமுறை கிறிஸ்துவுடனான ஒரு கிறிஸ்தவனின் உறவு , கணவன் மனைவி இடையேயான திருமணத்துடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது. எபேசியர் 5 :21–27 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள உறவை கணவனுக்கும், மனைவிக்கும் உள்ளஉறவாக ஒப்பிட்டுப் பேசியிருந்தார்.

### தேவ பயத்தில் ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்: அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற் கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் (எபேசியர் 5:22–27).

II கொரிந்தியர் 11:2ல் பவுல், நான் உங்களைக் கற்புள்ள கன்னி கையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புகொடுக்க நியமித்த படியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன் என்று எழுதுகிறார். அடுத்ததாக, ஆவிக்குரிய விபசாரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பது பாவமான இந்த உலகம் தான். விபசாரரே விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால், உலகத்துக்கு சிநேகிதனா யிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் (யாக்கோபு 4:4).

மத்தேயு 22 ஆம் அதிகாரத்தில் கிறிஸ்தவர்கள் ராஜாவினுடைய குமாரனின் விவாகத்தில் விருந்தாளிகளாக ஒப்பிடப்பட்டிருக்கி றார்கள். இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய் பேசிச் சொன்னது என்னவென்றால். பரலோக ராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப் பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழி யக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள், அந்த ஊழியக்காரர் புறப்பட்டு வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக் கொண்டு வந்தார்கள். கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது (மத்தேயு 22:1–3,10)

மத்தேயு 25 ஆம் அதிகாரத்தில் கிறிஸ்தவர்கள் மணவாளனை சந்திக்க புறப்பட்டுச் சென்ற பத்துக் கன்னிகைகளோடு ஒப்பிடப்படுகி றார். மணவாளன் வரும் போது சிலர் ஆயத்தமாக இருந்தார்கள். சிலர் ஆயத்தமாக இல்லை. அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளை பிடித்துக் கொண்டு மணவாளனுக்கு எதிர் கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர் களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர் புத்தியில்லாதவர் களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை

பிடித்துக் கொள்வது என்பது கிறிஸ்தவர்களாயிருப்பதை அடையாளப் படுத்துகிறது. இங்கே எண்ணெய் என்பது நற்கிரியைகளுடனும், விசுவாசத்துடனும் கிறிஸ்துவுக்கு உண்மையாக வாழ்வதை அடையாளப் படுத்துகிறது. இப்போது நாம் மறுபடியும் **Kim** மற்றும் **Kricktt** தம்பதியினருடைய சம்பவத்திற்கு வருவோம். இங்கே **Kricktt** விபத்தின் விளைவாக தன் கணவனை மறந்து போகிறாள். கணவன் மறுபடியும் மனைவியை தன்வசப்படுத்த பல முயற்சிகளை எடுக்கிறார். கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை தன் மணவாளனாகிய கிறிஸ்துவை மறக்கும் போது நம் கர்த்தர் சபை தம்மிடம் திரும்புவதற்கு பல முயற்சிகளை எடுத்துரைத்தார். கிறிஸ்துவால் பாவ மன்னிப்பின் கரம் நீட்டப்படுகிறது. தம்மிடம் திரும்பி வருபவர்களை மணவாளன் மனமாற அணைத்துக்கொள்கிறார்.

ஆனால், மணவாட்டியாகிய சபை மணவாளனாகிய கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து சென்றால் எப்படியிருக்கும்? ஒரு வேளை, மணவாட்டியாகிய சபை கிறிஸ்துவுடனான இனியத்திருமண உறவை முறித்துக் கொண்டால் எப்படியிருக்கும்? அப்போது மணவாளன் திரும்பி வரவேமாட்டார், ஏனென்றால், மணவாளனால் மணவாட்டியை ஒன்றுமே செய்ய முடியாது (எபிரெயர் 6:47).

கிறிஸ்துவைப் விடடுப் பிரிந்து சென்ற ஆவிக்குரிய மணவாட்டியாக நீங்கள் இருக்கீறீர்களா? நீங்கள் முன்பு அவருடைய சரீரத்தின் உண்மையுள்ள அங்கமாகயிருந்து. சரியான வாழ்க்கையிலிருந்து இப்போது விழுந்து விட்டீர்களா? அதன் பின்பு நம்பிக்கை உண்டா இல்லையா என்பதை தீர்மானித்து நீங்களே சில கேள்விகளை கேட்டுக் கொள்ளுங்கள்: தேவனுடைய வீட்டில் மற்ற கிறிஸ்தவர்களுடைய இனிமையான உறவு எப்படி? பரலோகத்தில் நித்தியத்தைக் கழிப்பது குறித்து கனவு காணும் உரிமையைப் பற்றி எப்படி இக்கேள்விக்களுக்கான பதில் நல்லதென்றால், இந்தக் காரியங்கள் உங்களுக்குப் பிரியமாக இருந்தால் கிறிஸ்துவினிடத்தில் மறுபடியும் திரும்பி வருவதற்கான முயற்சிகளை துரிதமாக எடுங்கள். உங்கள் பாவங்களுக்கான மன்னிப்புக்காக ஜெபியுங்கள். அருகில் உள்ள கர்த்தருடைய சபைக்கு விரைந்து சென்று நீங்கள் மனந்திரும்பிவிட்டீர்கள் மீட்கப்பட விரும்புகிறீர்கள் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். நீங்கள் ஒரு காலத்தில் அவருடைய மணவாட்டியாகிய சபையில் அங்கம் வகித்தீர்கள். நீங்கள் மறுபடியும் அவரிடத்தில் திரும்ப வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

✝




## அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் மூலமாக தேடுதல் வேட்டை

## Scavenger Hunt Through Acts

**Rebecca Rushmore**

❋ சபை ஸ்தாபிக்கப்பட்ட நாளில் எத்தனை யூதர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்?

❋ யூத அதிகாரிகள் இயேசுவைக் குறித்து பிரசங்கிக்கக்கூடாது என்று கட்டளையிட்டபிறகு பேதுரு, யோவான் மற்றும் மீதமுள்ள அப்போஸ்தலர்கள் எதற்காக ஜெபித்தார்கள்?

❋ தேவன் ஏன் அனனியாவையும், சப்பீராளையும் அடித்தார்?

❋ புழுப்புழுத்து இறந்தது யார்?

❋ பவுலும் பர்னபாவும் எந்தப் பட்டணத்திலிருந்து தங்கள் சுவிசேஷ பயணங்களை, தொடங்கினார்கள்?

❋ பவுல் எந்தப் பட்டணத்தில் அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருந்த பலபீடத்தைக் கண்டார்?

❋ எபேசு பட்டணத்திலிருந்து எத்தனைபேர் தவறாக யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள்?

❋ பவுலின் மனமாற்றச் சம்பவங்களை எந்தெந்த அதிகாரங்களில் ஒருவர் வாசிக்க முடியும்?

❋ தீர்க்கதரிசனம் சொல்லுகிற ஏழு குமாரத்திகளை உடைய சுவிசேசகனுடைய பெயர் என்ன?

❋ இப்புத்தகத்தில் ஐந்து பேரின் மனமாற்ற சம்பவம் விவரமாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

**சாட்சியங்கள்**

## நம்மால் மறுக்க முடியாத கண்ணுக்குத் தெரியாத ஆதாரங்கள்

## Invisible Evidences We Cannot Deny

Betty Burton Choate

கிறிஸ்தவர்கள் மீது தொடர்ச்சியாக வைக்கப்படும் குற்றச்சாட்டு என்னவென்றால், **நீங்கள் குருட்டு விசுவாசத்தால் வாழ்கிறீர்கள்** என்பதாகும். நம் விசுவாசம் குருட்டுத்தனமானதா, அது வெறுமனே நம்பிக்கையை மட்டும் ஆதாரமாகக் கொண்டுள்ளதா? இல்லை, நம் ஒவ்வொரு எதிர்பார்ப்பும் தேவனுடைய வார்த்தை மீது கட்டப்பட்டிருக் கிறது. நம் ஒவ்வொருவருக்குள்ளும் நம் ஆத்துமா, நித்தியம் மற்றும் நம் தேவனைப்பற்றிய மறுக்கமுடியாத ஆதாரங்கள் புதைந்து கிடக் கின்றன. மேலும், சிலர் ஒருபடி மேலே சென்று **நீங்கள் சொல்கிற காரியங்களெல்லாம் கண்ணுக்குத் தெரியாதவைகள். உங்களால் அவைகளை நிரூபிக்க முடியாது, ஒருவரும் ஒரு போதும் கடவுளைக் கண்டதில்லை, நீங்கள் உங்கள் ஆத்துமாவைப் பார்க்க முடியாது, சாவில்லாமைக்கு ஆதாரமாக மரித்தவர்களிடமிருந்து யாரும் உயிரோடு ஒரு போதும் எழுந்து வந்ததில்லையே** என்பன போன்ற கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்கள்.

**நான் ஆதாரத்தை உங்களுக்குக் காட்டுகிறேன்.**

மனித இனம் கடந்த ஆறாயிரம் ஆண்டுகளாக இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. பாபேல் கோபுரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு உலக முழுவதும் எண்ணற்ற இனக்குழுக்கள் சிதறி வாழ்கின்றன. இன்று உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் எழுநூறுகோடிக்கும் மேலான மக்கள் மத்தியில் எல்லா வகையான மத நம்பிக்கைகளும் மூட நம்பிக்கைகளும், புராணங்களும், கலாச்சாரங்களும் காணப்படு கின்றன. மனித இனம் பல்வேறுபட்ட விதங்களில் வேறுபட்டும், மாறு பட்டும் கிடக்கின்றது.

ஆனால், இதைக்குறித்து சற்று சிந்தியுங்கள்: ஆதியாகமம் 1:1 **ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்று அறிவிக்கிறது. ஆதியாகமம் 1:26, நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக** என்று அறிவிக்கிறது. மனிதர்கள் எப்படி தேவ சாயலில் உண்டாக்கப் பட்டார்கள்? சரீரத்திலா? இல்லை, ஏனென்றால், தேவன் ஆவியாயிருக்கிறார்.

சிருஷ்டிப்பின் விவரம் **தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவத்துவானான்** என்று சொல்கிறது [ஆதியாகமம் 2:7]. ஆத்துமா ஒரு கற்பனைப் பொருள் அல்ல. அது உண்மையாகவே மனிதர்களுக்குள் இருக்கிறது என்பது நமக்கு எப்படித் தெரியும்? இவ்வுலகில் எல்லாக் காலகட்டத்திலும் வரலாற்றிலும் வாழ்ந்த மனிதர்களை கவனியுங்கள். உலகமுழுவதும் புதைக்கப்பட்ட சரீரம் வாழ்க்கையின் முடிவல்ல என்பது எல்லோருடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது. அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்புகளில் மரித்தவர்களோடு புதைக்கப்பட்ட புதை பொருள்கள், ஆத்துமாக்கள் கண்ணுக்கு தெரியாத ஏதோ ஒரு இடத்தில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்னும் நம்பிக்கைக்கு சாட்சி பகிர்கின்றன.

ஆத்துமாவை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை என்பது உண்மையாக இருந்தாலும் கூட, தேவன் அதை நம் உணர்வில் அழியாமையின் ஓர் உறுதியாக வைத்திருக்கிறார் என்பது உண்மையாக இருந்திராவிட்டால் இத்தகைய உலகளாவிய நம்பிக்கை காலகாலமாக நிலைத்திருக்குமா?

மறுபடியும், மனித இனத்தைப் பாருங்கள். மனிதர்கள் எப்போதுமே கடவுள் வழிபாடு உடையவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். நம் சிருஷ்டிப்பின் தேவனைப்பற்றிய அறிவு மனித இனத்துக்கு தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது. மனித இனத்தால் நம் தேவன் ஆராதிக்கப்பட்டு வந்த நிலையில், அறியாமையும், கட்டுக்கதைகளும் மெய் இறை உணர்வை அகற்றியபோது, பொய்யான கடவுள்கள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அக்கடவுள்கள் களிமண்ணினாலே உருவாக்கப்பட்டார்கள், கற்களாலே செதுக்கப்பட்டார்கள்.

ஏன் அப்படி? கடவுளை ஒருபோதும் கண்டதில்லையே. மனித இனம் ஏன் காணாத ஒரு கடவுளை நம்பவும், வணங்கவும் நிர்பந்திக்கப்பட்டது? நிச்சயமாகவே, ஒவ்வொரு தனிமனிதனுடைய ஆத்துமாவிலும் ஒரு வெற்றிடமிருந்து அதன் சிருஷ்டிகரால் ஏற்றுக் கொள்ளப்படுவதால் நிரப்பப்பட காத்துக் கொண்டிருக்கிறது. வழிபாட்டுக்கான இந்த உலகளாவிய வரலாற்றுப் பூர்வமான நிர்பந்தத்திற்கு வேறு எந்த விளக்கமும் இல்லை.

எல்லா மனிதர்களுக்கும் பொதுவானது வேறெது? எது சரி, எது தவறு என்பதைப் பற்றிய அறிவு. சில வேளைகளில் காரியங்களை தாறு

மாறாகும் தீமையின் செல்வாக்கு ஒரு பக்கம் இருந்தாலும் கூட, கொலை செய்வது, திருடுவது, பொய் சொல்வது, ஒழுக்கக் கேடாக வாழ்வது போன்றவைகள் தவறென்று உலகளாவிய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மக்கள் ஒருவரிலொருவர் அன்பையும் இரக்கத்தையும், தயவையும், மன்னிப்பையும், தியாகத்தையும் வெளிப் படுத்தும்போது அது எல்லோராலும் நல்லதாக மெச்சப்படுகிறது. பொதுவாக, மனிதர்கள் ஏன் தீமையை குற்றப்படுத்தி ஒருவரொருக் கொருவர் நன்மை செய்யும் பழக்கத்தை ஊக்கப்படுத்தி அதை மேம் படுத்துகிறார்கள். ஆதியாகமம் 1:26க்கு திரும்பிச் செல்லுங்கள். அங்கே தேவன் தாம் உண்டாக்கும் மனிதன் தம்முடைய சாயலில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். மனித இனத்துக்கான அற நெறிகள், ஒழுக்க நெறிகள் மனித ஆத்துமாவுக்குள் உட்பொதியப் பட்டிருக்கிறது. நம் ஒவ்வொரு ஆத்துமாவின் மீதும் தேவனுடைய அளவுகோல் பதிக்கப்பட்டுள்ளது.

ஆதியிலே ஆதாம் உருவாக்கப்பட்டபோது பூரணமாக உருவாக்கப் பட்டான். தேவனோடு பேசும்படியாகவும், நடக்கும்படியாகவும் ஆசீர்வ திக்கப்பட்டிருந்தான். அங்கே மரணமோ, வியாதியோ இல்லா திருந்தது. ஆதாமிலும், ஏவாளிலும் அவர்களைச் சுற்றிலும் உலகமுழு வதிலும் எல்லாம் பூரணமாயிருந்தது. ஆதாம் மற்றும் ஏவாளுடைய ஒவ் வொரு எண்ணமும் அவர்கள் யாருடைய சாயலில் உருவாக்கப்பட்டார் களோ அவருடைய எண்ணத்திற்கு இசைவாகவேயிருந்தது. ஆனால், இப்போது சவால் என்னவென்றால், நாம் தேவ சாயலில் உருவாக்கப் பட்டிருந்தால் மனிதஇனம் ஏன் பாவத்தில் சீரழிகிறது.

இதற்கான பதில் மறுக்கமுடியாத காணமுடியாத, ஒரு நபரை உள்ளடக்கியதாக இருக்கிறது. அந்த நபர் தள்ளப்பட்ட சாத்தான்தான். எசேக்கியேல் 28:12 13 வசனங்களில் அவன் விசித்திரமாய்ச் செய்யப் பட்ட முத்திரை மோதிரம். தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன் என்று நாம் பார்க்கிறோம். ஆனால், அவன் தன்னை தேவனுக்கு மேலாக உயர்த்தினபடியால் வானத்திலிருந்து தள்ளப் பட்டான் (ஏசாயா 14:13 14). பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான் என்றும் நாம் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம். (1பேதுரு 5:8).

சரி, சாத்தான் இவ்வுலகில் இருக்கிறானா? யாரும் அவனைப் பார்த்ததில்லையே. ஏனென்றால், அவனும் நம் கண்களால் பார்க்க முடி யாத ஆவியாகத்தான் இருக்கிறான். ஆனால், அவன் இருக்கிறான் என்பதை நாம் அறிவோம். ஏனென்றால், நம்மைச் சுற்றிலும் தீமையும், சீரழிவும் நிறைந்து காணப்படுகிறது.

பிசாசுக்கு தெரிந்து கொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டது போல் மனிதனுக்கும் தேவனுக்கு கீழ்ப்படியவும், கீழ்ப்படியாமலிருக்கும் சுதந் தரம் கொடுக்கப்பட்டது. பிசாசு கீழ்ப்படியாமையை தெரிந்து கொண் டான். அதன் விளைவாக இவ்வுலகம் சீரழிந்து மனித இனம் சோதனைக்கும், பாவத்திற்கும் இரையானது. இதன் விளைவு நன்மைக்கும், தீமைக்கும் இடையேயான யுத்தம் – அதாவது தேவனுக்கும், பிசாசுக்கும் இடையேயான யுத்தம். மக்கள் தங்கள் மனச் சாட்சியையும், நாட்டுச் சட்டத்தையும் மீறும்போது தங்கள் ஆத்துமாக்க ளில் தேவனால் பதியவைக்கப்பட்டிருக்கிற ஒழுக்க நெறிகளை கிறுக்கிப் போடுகிறார்கள்.

இந்த யுத்தத்தில் ஜெபிக்கப்போவது யார்? இறுதியில் தேவன் தான் ஜெயிப்பார். ஆனால், அதற்கிடையில் சாத்தானின் தீவிரத் தாக்கு தலை தாக்குபிடிக்க முடியாத பல ஆத்துமாக்கள் அவனிடம் சரண டைந்து தேவசாயலை தரித்துக் கொள்வதில் பெலவீனமடைந்து விடு வார்கள். அதிலும் குறிப்பாக, அவிசுவாசிகளிடத்தில் இத்தீய சக்திகள் அதிகமாக ஆதிக்கம் செலுத்தும்.

ஆனால், நாம் பிசாசை எதிர்த்து தொடர்ந்து தேவசாயலில் இருந்து விலகாமலிருந்தால் நாம்தான் ஜெயிப்போம். ✝



# சபைக்குப் போவதற்கான நேரம் இது

## Time To Go To Church

### Steve Higginbotham



**சபைக்குப் போவதற்கான சமயம் இது.** இவ்வார்த்தைகள் நம் காதுகளில் எப்போதும் எதிரொலித்து கொண்டிருக்கும். இவ்வார்த்தைகளை நாம் பல முறை ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளில் நம் பெற்றோர்களாலோ அல்லது வீட்டில் கணவன்மார்கள் அல்லது மனைவிமார்களாலோ கேட்டிருப்போம்.

மல்கியா தீர்க்கதரிசியின் கூற்றுப்படி அவருடைய நாட்களில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு களைப்பாய் இருந்தது (மல்கியா1:13). ஆனால், எல்லோருக்கும் அப்படியிருந்ததில்லை. கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் என்று தாவீது சொன்னார் (சங்கீதம் 122:1).

1982 ல், நான் அமெரிக்க ஐக்கிய தேசத்திலுள்ள ஒரு சபையில் பிரசங்க பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தேன். அச்சபையிலிருந்த ஒரு மூத்த விசுவாசியின் வீட்டிற்கே சென்று அவருக்கு ஆடைகளை உடுத்து, அவரை புறப்பட வைத்து சபைக்கு அனுப்புவது என் கடமையாயிருந்தது. அந்த வயதானவர் கடுமையான மூட்டுவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அந்த விசுவாசிக்கு ஆடைகளை உடுத்துவித்து காலணிகளைப் போட்டுவிட்டு அவரை ஆயத்தப் படுத்துவது எனக்கு அசௌகரியமாகத்தான் இருந்தது. அந்நேரத்தில் என் மனதில் ஓடிக்கொண்டிருந்த காரியம் என்னவென்றால் யாராவது ஆராதனையை தவிர்த்துவிட்டு வீட்டில் இருப்பதற்கான சாக்குபோக்குகளைச் சொல்கிறதாக இருந்தால் அது இந்த மனிதராகத்தான் இருக்க வேண்டும். நிச்சயமாக இச்சூழ்நிலை தேவனுக்குப் புரியும். ஆனால், இந்த வயதானவர் எவ்வித சாக்குபோக்கையும் சொல்லவில்லை. அவர்

ஆராதனையை தவிர்த்துவிட்டு வீட்டில் இருக்க ஒருபோதும் விரும்பியதில்லை. அவர் எப்போதும் சபைக்குப் போகவே விரும்பினார். அதற்காக அவர் அதிக விலை கொடுக்க வேண்டியதாயிருந்தது.

அந்த முதியவரை ஆராதனைக்கு ஆயத்தப்படுத்தும் அந்த நாட்களில் தான் நான் ஒரு முக்கியமான உண்மையை கற்றுக் கொண்டேன். சபை கூடிவருதலுக்கும், சபைக்கட்டிடத்திலிருந்து ஒருவர் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் என்பதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. சபை கூடிவருதல் என்பது தேவனுக்கும் ஒருவருடைய இருதயத்திற்கும் உள்ள தூரத்தைப் பொறுத்துதான் தீர்மானிக்கப்படுகிறது. சரியான தீர்மானம் இல்லாத இடத்தில் சாக்குபோக்குகளுக்கு பந்தமே இருக்காது.

**சபைக்கு போவதற்கான சமயம் இது** என்னும் வார்த்தைகளை கேட்கும் போது சோர்வாக இருக்கிறீர்களா அல்லது ஆராதனைக்காக நன்றியுள்ளவர்களாக இருக்கிறீர்களா? சிந்தித்துப் பாருங்கள். ✝

## தேவனுடைய பண்புகள்

தேவனுடைய நீயாயத்தீர்ப்பு நீதியுள்ளது. தேவன் அவனவனுடைய நீதிக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் (ரோமர்2:6).

ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்றசமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபிரேயர் 4:16).

நாம் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடும்போது தேவன் நம் தேவைகளை சந்திப்பார் (மத்தேயு 6:33).

ஆராதனை

# வாழ்க்கையின் சாராம்சம் கொடுத்தலே

# The Essence of Living is giving

*Stephen D. Eckstein Jr*

**மே**ற்சொல்லப்பட்ட தலைப்பு நம்மை ஆச்சரியப்படுத்தலாம். ஆனால், அதன் ஆதாரம் அலாதியானது. தேவன் தாமே, தம்மைப் பற்றிய இந்தச் சத்தியத்தை மூன்று விதங்களில் வெளிப்படுத்தி இருக்கிறார். அவை, 1. கடந்தகால ஈவுகள் 2. நிகழ்கால ஈவுகள் 3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஈவுகள்.

**கடந்த கால ஈவு**

வேதாகமம் முழுவதும், தேவனுடைய வாக்குத்தத்தங்களினாலும், அதன் நிறைவேறுதல்களினாலும் நிறைந்து காணப்படுகிறது. தேவன் ஆதிப் பெற்றோருக்கும், அவர்களுடைய சந்ததியாருக்கும் ஜீவனையும், அதற்கான ஆதாரத்தையும் கொடுத்தார். நோவாவுக்கு பேழையைக் கட்டுவதற்கான மாதிரியையும் அதற்கான திறனையும் கொடுத்தார். மேலும், அவர் நோவாவுக்கும், அவனுக்குப் பின்வரும் சந்ததிக்காகவும் வானவில்லை உடன்படிக்கையாக உண்டாக்கினார். இதினிமித்தம் நிகழ்காலத்தில் வாழும் நாமும் நன்மை பெற்றிருக்கிறோம் கடந்த காலத்தில் வாழ்ந்தவர்களைப் போலவே. ஆகையால், உலகம் உள்ளவரைக்கும் இந்த கடந்த கால ஈவினால் நாம் நன்மை பெறுகிறோம். தேவன் இஸ்ரவேலர்களுக்கு எரிகோவைத் தருவதாக வாக்குத்தத்தம் பண்ணினார். அதை அவர்களுக்கு நாற்பது வருடங்களுக்குப் பிறகு யோசுவாவின் மூலமாக கொடுத்தார்.

மேலும், தேவனுடைய மாபெரும் ஈவுகளில் மகத்தான ஈவு மேசியாவைப் பற்றியதுதான். அவருடைய வருகை பற்றி பரிசுத்தப் பதிவுகளில் பல்வேறுபட்ட காலகட்டங்களில், பரிசுத்த தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. அவர் வாக்குத்தத்தம் செய்தபடியே காலம் நிறைவேறினபோது, இவ்வுலகத்திற்கு வந்து மனித இனத்தை இரட்சிப்பினால் அலங்கரித்தார். ஆம், அவருடைய போதனையை தங்களுக்குள் அனுமதித்து, மாற்றத்தைக் கண்ட எல்லோருடைய வாழ்க்கையையும் அவர் வளப்படுத்தியிருக்கிறார். அதிலும், பிரதானமாக வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்ற ஏற்றமிகு எண்ணத்தை அவரைப் பின்பற்றுகிறவர்களுடைய வாழ்க்கையில் ஏற்படுத்தியிருப்பது இன்னும் அலாதியான இன்பமாயிருக்கிறது என்றால் அது மிகையல்ல!

**நிகழ்கால ஈவு**

நம்முடைய நாட்களில் நாம் எண்ணிப்பார்க்க முடியாத ஆசீர் வாதங்களைத் தேவன் நமக்குத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டி ருக்கிறார். தேவன், நம்முடைய பாவங்களைக் கழுவிச் சுத்திகரிக்கும் வல்லமையை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

தேவன், தம்மை நோக்கி உண்மையான விசுவாசத்தோடு வேண்டுதல் செய்கிறவர்களுக்குத் தொடர்ந்து பலன் அளித்துக் கொண்டுதான் இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 8:32-ல், **தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?** என்று வினவுகிறார். இக்கேள்விக்கான பதில், ஆம் என்பதாகும். ஏனென்றால், தேவன் பரலோகத்தின் அரும்பெரும் விலையேறப் பெற்ற பொக்கிஷமாகிய இயேசு கிறிஸ்துவையே நமக்காகத் தந்திருக்கும் போது, அவருடைய நித்திய அன்பினால் மற்ற எல்லா வற்றையும் நமக்குத் தருவது என்பது அவருக்கு இலேசான காரியமாகும்.

**வருங்கால ஈவு**

தேவன் எல்லாக் காலங்களிலும் பொய்யுரையாதவராகத்தான் இருக்கிறார். ஆகவே, அவர் பொய் பேசமாட்டார். **அந்தப்படி தேவனும் வாக்குத்தத்தம் பண்ணைப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்கிறவர் களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரி பூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகுபடிக்கு எவ்வள வேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்** (எபி.6:17,18). இதினிமித்தம், தேவன் வருங்காலத்தில் நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கும் வாக்குத்தத்தங்களை நம்மால் முழுமையாக நம்ப முடியும் என்பது நிச்சயம்.

தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய வருகையின்போது, தம்முடைய பிள்ளைகளுக்குப் பரலோகத்தில் நித்திய ஜீவனை அளிக்க வல்லமையும், ஜீவனுமுள்ளவராயிருக் கிறார் (Iயோவான் 3:1-3). மேலும், அவர் நமக்கு கிறிஸ்துவினுடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பான ஆவிக்குரிய சரீரத்தைத் தருவார் (பிலி.3:20,21). வெளிப்படுத்தின விசேஷத்தில் வெளிப்படுத்தப் பட்டுள்ள வாக்குத்தத்தங்களை ஜெயங்கொள்ளு

கிறவர்களுக்கு நிச்சயம் கொடுப்பார். மீட்கப்பட்டவர்கள் தம்மோடு இருப்பதற்கான பரிபூரண ஆசீர்வாதத்தின் ஐக்கியத்தையும் கொடுப்பார். இன்னுமாக, அவர் பரலோகத்தில் நாம் எப்பொழுதும் அவரைத் துதிக்கும்படியான சிலாக்கியத்தையும் கொடுப்பார். என்னே! ஓர் அனுகூலமான ஈவு!

### பயன்பாடு

பிரியமானவர்களே! தேவன் நமக்காகக் கொடுத்தார். இன்றும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இனிமேலும் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தமும் செய்திருக்கிறார்.

**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந் துண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலு மில்லை** (யாக்கோபு 1:7). நாமும் அவருடைய பிள்ளைகளாக இருக்கிறபடியால் கொடுக்கிறவர்களாக இருப்போம்.

மேலும், நாம் மற்றவர்களுக்கு உயிர்ப்பிக்கும் உற்சாகமான வார்த் தைகளை அவர்களின் ஆத்தும மகிழ்ச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யும்பொழுது நாம் உண்மையா கவே அவர்கள் மீது அக்கறை காட்டுகிறோம் என்பது அவர்களுக்குப் புலப்படும். இன்னும் அவர்களோடு நெருக்கமாக, வண்ண வண்ண வாழ்த்து அட்டைகளையும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் வேதாகமத்தையும் வாங்கிப் பரிசளிப்பதின் மூலமாகவும் நம் மகிழ்ச்சியை அவர்களிடத்தில் வெளிப்படுத்தலாம். காரணம் நம்மிடம் உள்ள பணம் நம்முடையதல்ல. மாறாக, அது தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டதாகும். அதின் மூலமாக நாம் மற்றவர்களை மகிழ்விக்கும் போது, உற்சாகம் தானாக வந்து வல்லமையின் வார்த்தைகளைக் கேட்டு ஆன்மீக வாழ்வில் வளம்பெறும்படியான ஆசீர்வாதம் அவர்களுக்குக் கிடைக்கும். **இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்** (I நாளா.29:14).

மேலும், உங்கள் பெலனையும், ஆற்றலையும் தேவனுக்குக் கொடுங்கள். அதாவது, சரீரப் பிரகாரமாக, உணர்வுப்பூர்வமாக, ஆவிக்குரிய பிரகாரமாக, பொருளாதார ரீதியாகக் கொடுங்கள். இவையெல்லாவற்றிலும் முதன்மையாக உங்கள் இருதயத்தில் தேவனுக்கு முதலிடம் கொடுங்கள். ஏனெனில், அவர் நமக்குக் கொடுக்கிறார் என்பதை நினைவில் நிறுத்தினவர்களாய் அவருக்காக கொடுப்போம்! ஆத்தும அறுவடை செய்வோம்! ✝

# ஆராதனையை விளையாட்டாகவும், விளையாட்டை ஆராதனையாகவும் மாற்றுதல்

Turning Worship Into Sport andSports Into Worship.

Patrick Morrison

**ஆ**ராதனை என்பது தேவனுடைய சமூகத்தில் வந்து அவரை துதிக்கவும், போற்றவும் நமக்கு கிடைத்திருக்கும் மாபெரும் பாக்கியமும், சிலாக்கியமுமாயிருக்கிறது. தேவனை ஆராதிப்பதற்கான ஆசை ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையையும் நிரப்ப வேண்டும் (சங்கீதம் 122:1). தேவன் நமக்கு இதுகாறும் செய்த நன்மை களுக்காகவும், தொடர்ச்சியாக செய்யப்போகிற நன்மைகளுக்காகவும் நன்றி நிறைந்த இருதயத்தோடு அவரை நாம் போற்றித் துதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், தேவனுடைய சொந்த ஜனங்கள் ஆராதனையை சோர்வாக, அலுப்பாக உணருகிறார்கள் (மல்கியா 1:12,13). சிலர் சர்வ வல்லவருடைய ஆராதனையில் தங்களை துடிப்புடன் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக ஆராதனையில் ஒரு பார்வையாளராக கலந்து கொள்வதிலே திருப்தி கொள்கின்றனர். அவர்கள் ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்போதும் (1தெசலோனிக் கேயர் 5:17) தேவனை நோக்கிப் பாடல்கள் பாடப்படும் போது(எபிரெயர் 2:12;13:15), தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படும் போது (11தீமோத்தேயு 4:2), கர்த்தருடைய பந்தியில் கர்த்தருடைய மரணம் நினைவு கூரப்படும் போதும் (1கொரிந்தியர் 11:23-26) நம் மனதில் நியமித்த காணிக்கையை உற்சாகமாகத் தேவனுக்குக் கொடுக்கும்போம் (11கொரிந்தியர் 9:7) **வெறுமனே** உட்கார்ந்திருக்கிறார்கள்.

பலர் ஆராதனையையும், சபையையும் தங்களுக்கு விருப்பமான கால்பந்து போட்டியைப் போல் பார்க்கிறார்கள். இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், சிலர் தங்களுடைய அபிமான கால்பந்து அணி நன்றாக விளையாடும்போது தங்களை முழுமையாக அந்த விளையாட்டுக்குள் ஈடுபடுத்தி பரபரப்பாகவும், பரவசத்துடனும் இருப்பார்கள். இந்த பார்வையாளர்கள் தங்களை அந்த கால்பந்து அணியின் அங்கமாகவே கருதுவார்கள். ஆனால், இவர்களில் பலர் விளையாட்டில் செலுத்தும் ஆர்வத்தில் ஒரு சதவீதத்தைக் கூட ஆராதனையில் செலுத்துவதில்லை என்பது மிகவும் வேதனையான விஷயமாகும்.

ஆராதனையில் வெறுமனே அமர்ந்திருக்கும் பார்வையாளர்கள் ஆராதனைக்காக ஆயத்தமாவதில் நேரத்தையோ ஆற்றலையோ செலவு செய்வதில்லை. இவர்கள் தங்கள் வாயினால் தேவனிடத்தில் சேருகிறார்கள், தங்கள் உதடுகளில் தேவனை கனம்பண்ணு கிறார்கள். ஆனால், இவர்கள் இருதயமோ தேவனிடமிருந்து தூரமாய் விலகியிருக்கிறது [மத்தேயு 15:8]. இவர்கள் தேவனை ஆராதிக்க எந்த முதலீடும் செய்யாதிருப்பதினால் சபையில் தாங்கள் விரும்பியபடி காரியங்கள் நடக்காதபோது முணுமுணுக்கவும், முறுமுறுக்கவும், செய்கிறார்கள். ஆராதனையில் இருந்து எங்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை என்று சொல்கிறவர்கள் பெரும்பாலும் ஆராதனையில் தேவனுக்கென்று எதையுமே செய்யாதவர்கள் தான். இன்றைய நாட்களில் பலருக்கு ஆராதனை ஒரு வேடிக்கைப் பொருளாகிவிட்டது.

வேதனை என்னவெனில், சிலர் விளையாட்டை ஆராதனையாக மாற்றிவிட்டனர். என்னிடம் வந்து சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சில விளையாட்டு அணிகளுக்கு எதையோ கொடுப்பதாக வாக்கு கொடுத்திருக்கிறார்கள். எனவே, அதை நிறைவேற்றும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பெற்றோர்களே நீங்கள் சுவிசேஷதிற்குக் கீழ்ப்படிந்தபோது கர்த்தரி டத்தில் பெரிய வாக்கைக் கொடுத்திருக்கிறீர்களே [1தீமோத்தேயு 6:12]. நம் பிள்ளைகளுக்கு ஒரு வேலையை அரைகுறையாகச் செய்யாமல் அதை விடா முயற்சியுடன் செய்து முடிக்கவேண்டுமென்ற பொ றுப்புகளைக் கற்றுக் கொடுப்பது நல்லதுதான்.

ஆனால், அதே நேரத்தில் பிள்ளைகளுக்கு வாழ்க்கையின் கடினமான வேலைகளை எப்படி எதிர்கொள்வதைப் பற்றியும் வாழ்க்கையில் சரியானவைகளைச் செய்வது எப்போதும் எளிதானதல்ல என்பது பற்றியும் கற்றுக் கொடுப்பது அவசியமானதாகும் [ரோமர் 12:12], பெற்றோர் என்னும் நிலையில் எல்லாவற்றுக்கும் மேலாக கர்த் தரை தெரிந்துகொள்ளவில்லையென்றால் நம் பிள்ளைகள் வளரும் போது அவர்களுடைய துக்கத்திற்கும், ஆவிக்குரிய தோல்விக்கும் நாமே வழிவகுத்து விடுவோம். [யோவான் 24:15;1சாமுவேல் 3:13].

கர்த்தருடைய சபையில் ஒரு மூப்பர் சொன்ன வார்த்தை எனக்கு இப்போதும் நினைவிருக்கிறது. அவர் உலகக்கோப்பை கால்பந்து போட்டியை காணும் வாய்ப்பு வாழ்நாளில் ஒருமுறை கிடைப்பதால் அதைக் காண்பதற்காக ஆராதனையை நான் தவறவிட்டால் தேவன் என்னிடம் கணக்கு கேட்கமாட்டார் என்று சொன்னார். நாம் அநித்திய மான காரியங்களிலிருந்து நம் கண்களை விலக்கி நித்தியமானவைகள் மீது நம் கண்களை பதிக்க வேண்டும்.

(11கொரி 4:18). பொதுவான விதி என்னவென்றால், பிள்ளைகள் வளர்ந்து வேலைக்காக வீட்டைவிட்டு வெளியேறும்போது பெற்றோர் தாங்கள் வாழ்வின் இறுதிக்காலகட்டத்தில் வாழ்வதால் ஆவிக்குரிய காரியங்களில் அதிக ஆவலுள்ளவர்களாகி விடுகிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் ஆவிக்குரிய காரியங் களிலும் தங்கள் கவனத்தை திருப்ப முயற்சிக்கிறார்கள். ஆனால், இந்த முயற்சியை ஆரம்பத்திலேயே எடுக்கத் தவறியதால் தங்கள் பிள்ளைகள் உலக வாழ்க்கையில் விழுந்ததைத்தான் அவர்களால் கா ணமுடியும். அவர்கள் ஆராதனை அல்லது வேத பாட வகுப்பைத் தெரிந்தெடுப்பதை விட வேலை, சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களையே தெரிந்தெடுக்கிறார்கள். அப்போதுதான், பெற்றோர் எங்கே கோட்டை விட்டோம் என்று திரும்பிப்பார்க்கிறார்கள். இந்த பெற்றோர் தங்கள் பிள்ளைகள் ஆராதனைக்குப் பதிலாக கால் பந்தையும், வேதபாட வகுப்புக்கு பதிலாக அடிபந்தாட்டத்தையும் தெரிந்தெடுத்ததன் விளைவு தான் இது. உங்கள் பிள்ளைகள் பந்து விளையாட்டை அனுபவித்து விளையாடட்டும். ஆனால், அவர்கள் கிறிஸ்தவத்தை விளையாட்டாக எடுக்காதபடி அவர்களுக்கு போதிக்க வேண்டும். அவர்கள் கிறிஸ்தவத்தை பந்தாட்டமாகவும், கிறிஸ்த வத்தை விளையாட்டாகவும் எடுக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. ✝

## தேவனின் சிறப்பம்சம்

- *தேவன் எப்போதும் நம்முடைய கால அட்டவணையின் படி காரியங்களைச் செய்யாமல் அவருடைய திட்டத்தின் படி செய்கிறார்*
- *தேவனுடைய நியாயத்தீர்ப்பு நீதியுள்ளது. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் ( ரோமர் 2:6 )*
- *ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரமுடியும் ( எபிரெயர் 4:16 )*

# நீங்கள் எந்த அளவினால் அளக்கீறீர்கள்?

*நான் அடைந்ததாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை தான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையைத் தொடர்கிறேன். சகோதரரே அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம். எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ?*



*அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு ஒரே சிந்தையாயிருப்போமாக. சகோதரரே நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரிகளாக நோக்குங்கள். ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். (பிலிப்பியர் 3:12-18). நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (பிலிப்பியர் 4:6).*

### வாழ்வதற்கான உபதேசம்

# இயேசுவைப் பிரசங்கியுங்கள்

## *Preach Jesus*

## Kevin. L. Moore

**நா**ம் இயேசு கிறிஸ்துவினுடைய பிரதான கட்டளையை நிறைவேற்றி நம் அயலகத்தாருக்கும், உலகமுழுவதிற்கும் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள விரும்பும்போது எத்தகைய செய்தியை நாம் அறிவிக்க வேண்டும்? பல சந்தர்ப்பங்களில் ''இயேசுவை மட்டும் பிரசங்கியுங்கள்'' போன்ற வாக்கியங்களை நான் கேட்டிருக்கிறேன். அதேபோல், சபையை குறித்து பிரசங்கிப்பதை நிறுத்திவிட்டு ஜனங்களுக்கு இயேசுவைப் பற்றி மட்டும் சொல்லுங்கள் போன்ற வாக்கியங்களையும் கேட்டிருக்கிறேன்.

சபை வெறுமனே மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒரு மார்க்கப் பிரிவினை அமைப்பாக இருந்தால் இத்தகைய அமைப்பிற்கு ஆதரவாகவோ அல்லது இந்த அமைப்பை மேம்படுத்தவோ நான் நிச்சயமாக விரும்பமாட்டேன். ஆனால், சபையைப்பற்றி வேதாகமம் சொல்கிறவைகளை நான் வாசித்து சபையைக் குறித்து மற்றவர்களுக்கு போதிக்கும் போது, நான் ஒன்றை முற்றிலும் வித்தியாசமாகக் காண்கிறேன். புதிய ஏற்பாட்டு சபை கிறிஸ்துவின் சரீரமாகவும், இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாகவும் இருக்கிறது. கிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினால் சம்பாதித்த சபையை விட்டுவிட்டு இயேசுவைப் பற்றி மட்டும் நாம் எப்படி பிரசங்கிக்க முடியும் [அப்போஸ்தர் 20:28]. இந்த சரீரத்திற்கு கிறிஸ்துவே தலையாகவும், இரட்சகராகவும் இருக்கிறார் [எபேசியர் 5:23].

பிலிப்பு கிறிஸ்துவை சமாரியர்களுக்குப் பிரசங்கித்தபோது [அப்போஸ்தலர் 8:5] அதில் தேவனுடைய ராஜ்யம், கிறிஸ்துவின் அதிகாரம் மற்றும் ஞானஸ்நானம் போன்றவைகள் உள்ளடக்கம் [வசனங்கள் 12 13]. பின்பு பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு இயேசுவைப் பிரசங்கித்தபோது இவருடைய போதனை கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதன் மூலமாக சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதை மந்திரிக்குப் புரியவைத்தது [வசனங்கள் 36-39]. பவுல் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவை கொரிந்தியர்களுக்குப் பிரசங்கித்தார் [1 கொரிந்தியர் 1:23;2:2]. ஆனால், நிச்சயமாக இதில் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெறுவது உள்ளடக்கம் [அப்போஸ்தலர் 18:8; 1கொரிந்தியர் 12:13]. வேதாகம அர்த்தர்த்தில் பார்க்கும்போது இயேசுவைப்பற்றி போதிப்பதென்பது இயேசுவைப் பற்றிய

தகவல்களைப் பரிமாறிக்கொள்வது மட்டுமல்ல. தேவனுடைய முழு ஆலோசனையையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் [அப்போஸ்தலர் 20:27]. இது வெறுமனே சபை உபதேசம் மட்டுமல்ல, கிறிஸ்துவின் உபதேசமாகவும் இருக்கிறது [யோவான் 7:16,17; நாம் இயேசுவைப் பிரசங்கிக்கும்போது சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து சபையில் கர்த்தரால் சேர்க்கப்படும் இக்கூட்டத்தைப் பற்றியும் அறிவிக்கத் தவறக்கூடாது [அப்போஸ்தலர் 2:37–48; எபிரெயர் 5:89]. மணவாட்டி இல்லாமல் மணவாளன் எப்படி? [வெளி 21:9]. ராஜ்யம் இல்லாமல் ராஜா எப்படியிருக்க முடியும். [கொலோ 1:13] கட்டிடம் இல்லாமல் அஸ்திபாரத்தின் நோக்கம் என்ன? 1கொரிந்தியர் 3:9–11]. நாம் கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து அவருடைய தலையைப் பிரிக்க முடியுமா? [கொலோ 1:18].

புதிய ஏற்பாட்டு சபை என்பது கிறிஸ்துவின் சரீரமாகவும், இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாகவும் இருக்கிறது. கிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்த சபையை சேர்க்காமல் அவரைப்பற்றி மட்டும் நாம் எப்படி பிரசங்கிக்க முடியும்? [அப்போஸ்தலர் 20:28]. சரீரமாகிய சபைக்கு கிறிஸ்து இரட்சகராகவும், தலையாகவும் இருக்கிறார். [எபேசியர் 5:23].



இயேசுவும் இ அவருடைய சபையும் பிரிக்கமுடியாதவர்களாயிருக்கிறபடியால் ஒன்றை விட்டு விட்டு மற்றொன்றைப் பிரசங்கிப்பதென்பது அரைகுறை பிரசங்கமாக இருப்பது மட்டுமல்லாமல் கர்த்தருடைய காரியங்களில் அது மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தும்.

ஜனங்களை நம்முடைய சபையில் சேரும்படியாகவோ நம்முடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளும்படியாகவோ, போதிப்பது நம்முடைய வேலை அல்ல. ஆனால், நாம் மிகவும் ஜாக்கிரதையாக அவருடைய சபை மற்றும் அதில் உண்மையுள்ள விசுவாசியாக அங்கம் வகிப்பதின் அவசியத்தை போதிக்க வேண்டும் **மத்தேயு [16:18: எபேசியர் 1:22 23 4:4;5:23]. இப்பணி ஜெபத்துடன் ஊக்கமாக செயல்படுத்தப்படும்போது ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள், சபைகள் வளரும். இப்பணிக்கு நாம் உண்மையாயிருக்க தேவன் நமக்கு உதவிசெய்வாராக!** ✝

# தேவையில்லாமல் குடியிருப்பவர்கள்
## Unwanted Occupants
### Dan Wheeler

நெகேமியா புத்தகத்தில் ஒரு சுவாரஸ்யமான சம்பவம் இடம் பெற்றிருக்கிறது. தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிக்க வைக்கப்பட்ட ஆசாரியனாகிய எலியாசிப், தன்னுடைய உறவினர்களில் ஒருவரான தொபியாவுக்கு தேவாலய தட்டுமுட்டு சாமான்களும் பணிமுட்டுகளும் சேகரித்து வைக்கப்பட்டிருந்த இடத்தில், ஒரு பெரிய அறையை ஆயத்தம் பண்ணியிருந்தான். அந்நேரத்தில் நெகேமியா அங்கே இல்லை. அவர் அங்கே இருந்திருந்தால் இப்படி நடக்க அனுமதித்திருக்கமாட்டார். அவர் திரும்பி வந்து இந்த கேலிக்கூத்தான சூழ்நிலையைப் பார்த்து அதிர்ச்சியடைந்து, தொபியாவின் வீட்டுத் தட்டு முட்டுகளை எல்லாம் அந்த அறையிலிருந்து வெளியே எறிந்து விட்டார். பின்பு அவர் அறைவீடுகளை சுத்திகரிக்கச்சொல்லி தேவனுடைய ஆலயப் பணிமுட்டுகளையும் காணிக்கைகளையும் அங்கே திரும்பக் கொண்டு வந்து வைத்தார். (நெகேமியா 13:4–10).

நெகேமியா தொபியாவை வெளியேற்றியது போல தீங்கு நம் மனதை ஆக்கிரமிக்காதபடி அதை வெளியேற்ற வேண்டும். நம் மனதிற்குள் எவைகள் செல்கின்றனவோ அவைகளே நம் தீய எண்ணங்களுக்கு காரணங்களாக சொல்லப்படுகின்றன. தொலைக் காட்சி, திரைப்படங்கள் மற்றும் இணையம் போன்றவைகள் பெரும் குற்றவாளிகளாக கருதப்படுகின்றன. இவைகள் கண்களால் காணும் தகவல் தொடர்பு சாதனங்களாக இருக்கிறபடியால் அவைகள் நம் மனதில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நாம் தேவையில்லாத காரியங்களைக் கொண்டு நம் மனதை நிரப்பவில்லையென்றால் தீய எண்ணங்கள் நம்மை வாட்டி வதைக்காது. அப்படியே, தீய எண்ணங்கள் மனதில் தோன்றினால் நாம் மனந்திரும்பி ஜெபித்து ஆவிக்குரிய காரியங்களில் நம் மனதை நிரப்பி அதிலிருந்து விடுபட வேண்டும். ஒருவருடைய மனசாட்சியை பயிற்றுவிப்பதற்கான சிறந்த வழி அதை நல்லெண்ணங்களால் நிரப்புவதுதான். ஆகவேதான், பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு அப்போஸ்தலனாகிய பவுலின் புத்திமதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ ஒழுக்கமுள்ளவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ,

நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பிலிப்பியர் 4:8).



நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நம் ஜீவியங்களில் தீய காரியங்களுக்குப் பதிலாக நல்ல காரியங்கள் வைக்கப்பட வேண்டும், இல்லையென்றால் அந்த வெற்றிடம் அதிக தீங்குக்கு வாய்ப்பாக மாறிவிடும் என்று சொன்னார்.

அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல், தான் விட்டுவந்த என் வீட்டுக்குத்திரும்பிப் போவேன் என்று சொல்லி அங்கே வந்து அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு திரும்பிப்போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே காட்டிக் கொண்டு வந்து உட்புகுந்து அங்கே குடியிருக்கும்; **அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும்** என்றார் (மத்தேயு 12:43-45).

நெகேமியாவைப் போல் நம் உள்ளான பரிசுத்த ஸ்தலத்தில் ஆக்கிரமிப்புக்காரர்களை நாம் சகித்துக்கொள்ளக் கூடாது. நம் மனது பழைய ஏற்பாட்டுத் தேவாலயத்தில் தேவன் எப்படி காரியங்கள் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தாரோ அதே போல் இருக்க வேண்டும். அப்போதுதான் சமாதானத்தின் தேவன் நம்மோடிருப்பார். ✝

## அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

# யார் சாந்த குணமுள்ளவர்கள்

# Who are the Meek ?

Greely Kirk Patick

**யா**ரோ ஒருவர் மலைப்பிரசங்கத்தில் மனித இனத்தைப்பற்றி நல்லதொரு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். பெரும்பாலான நேரங்களில் நம் வாழ்க்கையின் குணாதிசயங்கள் இயேசு கிறிஸ்து மலைப்பிரங்கத்தில் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு எதிராகவே இருக்கிறது.

மத்தேயு 5:5 சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று சொல்கிறது. நம் சமுதாயத்தில் எத்தனை பேர் சாந்தகுணத்தை ஒரு நற்பண்பாக கருதுகிறார்கள்? சாந்த குணம் என்பது பெலவீனத்தைக் குறிக்காது, அது கட்டுப்பாட்டிற்குள் பெலன் என்று பொருள்படும். William Barclay என்பவர் புதிய ஏற்பாட்டு வார்த்தைகள் என்னும் தலைப்பில் கீழ்கண்டவாறு எழுதுகிறார்

கிரேக்க மொழியில் சாந்தகுணம் அல்லது தாழ்மை Praus என்பது என்றழைக்கப்படுகிறது. இப்பதம் அடக்கப்பட்ட ஒரு மிருகத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. மேலும் இப்பதம் முன்பு அடங்காமல் அல்லது கட்டுபடுத்த முடியாமலிருந்த குதிரை இப்போது கடிவாளத்தினால் கட்டுபடுத்தப்பட்டிருப்பதை குறிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. இங்கேதான் Praus என்னும் வார்த்தையின் பொருளின் இரகசியம் மறைந்திருக்கிறது. Praus என்னும் வார்த்தையில் மென்மை இருக்கிறது. ஆனால், இந்த மென்மைக்குப் பின்னால் எஃகு குவின் வலிமை உள்ளது. எனவே, சாந்தகுணமுள்ள ஒரு நபர் பெலனில்லாத ஒரு கோழை அல்ல, பெலனும், சக்தியும் இருந்தும் அவைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு சாந்த குணத்தை வெளிப்படுத்து கிறவராயிருக்கிறார்

சாந்தகுணமுள்ளவர்களுக்கு வேதாகமம் சில உதாரணங்களை கொடுக்கிறது. உதாரணமாக, மோசேயை எடுத்துக் கொள்ளுங்கள் அவர் ஒரு வலிமை வாய்ந்த நபராக இருந்தாலும் கூட தாழ்மையாக சாந்தமாக இருந்திருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுலும் இப்படிப்பட்டவராகத் தான் இருந்திருக்கிறார். நம் ஆண்டவராகிய

இயேசு கிறிஸ்து எல்லோரையும் விட வலிமைமிக்கவராக யிருந்தும் எல்லோரையும் விட சாந்தமாக இருந்திருக்கிறார். இங்கே நம் ஒவ்வொருவருக்கான கேள்வி என்னவென்றால் நான் சாந்த குணமுள்ளவனாக இருக்கிறேனா? தேவனுடைய கட்டுபாட்டின் கீழ் பெலனுள்ளவனாயிருக்கிறேனா? தேவனுடைய சித்தத்திற்கு என் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்திருக்கிறேனா?

உண்மையான சாந்தகுணம் என்பது தேவனுடைய கட்டுபாட்டின் கீழ் பெலனை பெற்றுக் கொள்வதாகும்.

## எப்படிப்பட்ட ஜனங்கள் தேவனுக்குத் தேவை?

- கொடுக்கும் ஜனங்கள் [பிலி. 4:4-16]
- பணிவும், கீழ்ப்படிதலும், வேலை செய்யும் மனப்பான்மை யுமுள்ள ஜனங்கள் [பிலி. 2:4-8]
- அன்பான ஜனங்கள் [பிலி. 1:9,10]
- நீதியுள்ள ஜனங்கள் [பிலி. 1:11]
- தேறுகிற ஜனங்கள் [பிலி. 3:12-16]
- பரலோகத்தை எதிர்நோக்குகிற ஜனங்கள் [பிலி. 3:20]
- ஒற்றுமையான ஜனங்கள் [பிலி. 1:27, 28]
- பரலோகப் பயண சிந்தையுடைய ஜனங்கள் [பிலி. 1:9,10 ]
- பரிசுத்தமான ஜனங்கள் [பிலி. 4:18]

அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

## என்ன விலை கொடுக்க வேண்டியதிருக்கும்?

## What Does it Cost ?

Cleavence DeLoach Jr

ஒரு கேலிச்சித்திரம் ஒன்று பார்த்தேன். அதில் ஒரு புத்தகக்கடை உரிமையாளர் வாடிக்கையாளரிடம் சுலபமான கிறிஸ்தவம் என்ற பெயரில் எங்களிடம் எந்தப் புத்தகமும் இல்லை, அப்படி ஏதாவது புத்தகம் இருந்தால் அது தான் அதிக விற்பனையாகும் புத்தகமாயிருக்கும் என்று போடப்பட்டிருந்தது. உண்மையாகவே, கிறிஸ்தவராயிருப்பதற்கான எளிதான வழி ஒன்றும் இல்லை, இல்லவே இல்லை.

தேவனாகிய கர்த்தர் பழைய ஏற்பாட்டு ஜனங்களுக்கு பலி செலுத்துவதின் நோக்கத்தை போதித்திருக்கிறார். ஆபேல் விசுவாசத்தினாலே பலி செலுத்தினபடியினாலே தேவன் அதை ஏற்றுக்கொண்டார் (எபிரெயர் 11:4) விசுவாசத்தினாலே பலிசெலுத்துவது என்பதன் உட்பொருள் (ஆதியாகமம் 4:4) ல் தேவதாசனாகிய மோசேயால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது, அதாவது, ஆபேல் சிறந்தவற்றை பலியாகச் செலுத்தினான் என்று நாம் பார்க்கிறோம்

தன் குமாரனாகிய ஈசாக்கை பலியாகச் செலுத்தின போது ஆபிரகாம் தேவனுக்குச் சிறந்ததைக் கொடுக்க முடியும் என்பதை நிரூபத்திருக்கிறார் (அதியாகமம் 22). ஆபிரகாம் தன்னை ஒட்டு மொத்தமாக அர்ப்பணிப்பான் என்பதை தேவன் அறிந்திருந்தார்.

சங்கீதக்காரனாகிய தாவீது பலி கொடுத்தல் என்றால் என்ன என்பதை நன்றாக அறிந்திருந்தார். தாவீது இஸ்ரவேலைத் தொகையிடுவதில் தன்னிச்சையாகச் செயல்பட்டு பாவம் செய்தபடியால் தேவன் அவரை சிட்சித்தார். மேலும், தேவன் தாவீதுக்கு முன்பாக மூன்று தண்டனைகளை முன்வைத்து அவைகளில் ஒன்றைத் தெரிந்தெடுக்கும்படி கட்டளையிட்டார். தாவீதின் தெரிந்து கொள்ளுதலின்படி கொள்ளை நோய் தண்டனையாக ஜனங்களிடத்தில் அனுப்பட்டது. ஓர்னான் தாவீதுக்கு தகனபலிக்குத் தேவையான மாடுகளையும் விறகுக்குப் போரடிக்கிற உருளைகளையும், போஜனபலிக்குக் கோதுமையையும் கொடுக்க

முன்வந்தார். அது முற்றிலும் ஓர் இலவசமான பலி! ஆனால், அது முரண்படுகிறது! ஒரு பலி எப்படி இலவசமானதாகவும் சுலபமானதாகவும் இருக்க முடியும்? அதனால், தான் தாவீது ஓர்ணானைப் பார்த்து: அப்படியல்ல நான் உன்னுடையதை இலவசமாக வாங்கி கர்த்தருக்கு சர்வாங்க தகனத்தைப் பலியிடமால் அதை பெறும் விலைக்கு வாங்குவேன் என்று சொல்லி தாவீது அந்த நிலத்திற்கு அறுநூறு சேக்கல் நிறை பொன்னை ஓர்னானுக்குக் கொடுத்தான் [I நாளாகமம் 21: 24]

நம் தேவனுக்கு மீதமானவைகளை கொடுக்கிறோமா? ஒன்றுக்கும் உதவாதவைகளைக் கொடுக்கிறோமா? வெறுமனே அடையாளத்திற்காக நாம் கொடுக்கிறோமா? பலியின் உணர்வு புதிய ஏற்பாட்டிலும் தொடர்ந்து வருகிறது. இயேசு கிறிஸ்து தம்முடைய சிறந்ததாகிய ஜீவனையே கொடுத்தார் [எபேசியர் : 5-23] இயேசு கிறிஸ்து தம்முடைய சீவுர்களிடம் தங்களைத்தாமே வெறுத்து சிலுவையை எடுத்துக் கொண்டு தம்மைப் பின்பற்றும்படி போதித்தார் [மத்தேயு 16:24]

அப்போஸ்தலனாகிய பவுல், ரோமக் கிறிஸ்தவர்களிடம் தங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்மென்று வேண்டிகொண்டார். [ரோமர் 12:1] சூழ்நிலைக்கேற்ப தங்களை மாற்றிக் கொள்ளுகிற, வளைந்து கொடுக்கும் மார்க்கப் போதனைகளை கொண்டிருக்கும் இந்நாட்களில் பலிசெலுத்தும் உணர்வு கேள்விக்குறியாகிவட்டது. கிறிஸ்துவை சேவிப்பதின் மையமாக பலி செலுத்துதல் இருக்கிறது. இதைக் குறித்து யோசித்துப்பாருங்கள்.

---

**வேதாகமம்**

- ✓ இது மனிதனுக்கு தேவனுடைய கடிதமாயிருக்கிறது.
- ✓ இது நித்திய ஜீவன் சம்மந்தமான தகவல்களின் ஆதாரமாயிருக்கிறது
- ✓ இது நம் அன்றாட வாழ்வின் வழிகாட்டியாயிருக்கிறது
- ✓ இது பக்தி சம்மந்தமான காரியங்களில் இறுதி வார்த்தையாயிருக்கிறது.

செயலில் கிறிஸ்தவம்

# திறந்த வாசல்கள்

## Open Doors

J.C. Choate

**வே**த வாக்கியங்கள் பலமுறை திறந்த வாசல்கள் குறித்துப் பேசுகிறது. பவுல் பெரும்பாலும் அவைகளைத் தான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஏற்படுத்தப்பட்ட வாய்ப்புகளாக விவரிக்கிறார். முதலாம் சுவிசேஷப் பயணத்தில் புறஜாதிகளுக்கு விசுவாசக் கதவுகள் திறக்கப் பட்டது குறித்து சொல்லப்பட்டிருக்கிறது [அப்போஸ்தலர் 14:27]. பவுல் எபேசு பட்டணத்திலிருந்த போது இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள் என்று சொன்னார் [Iகொரி16:9].

மற்றொரு சந்தர்ப்பத்தில் பவுல் கொரிந்து சகோதரர்களுக்கு எழுதும்போது, **மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி துரோவா பட்டணத்தில் வந்தபோது கர்த்தராலே எனக்குக்கதவு திறக்கப்பட்டிருக்கையில், நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே என் ஆவிக்கு அமைதியில்லாதிருந்தது.** ஆதலால், நான் அவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டு மக்கெதோனியா நாட்டுக்குப் புறப்பட்டுப் போனேன் [11 கொரிந்தியர் 2:12 13]. இங்கே, அப்போஸ்தலனாகிய பவுல் மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து நின்று நீர் மகெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிச்செய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதை இங்கே குறிப்பிடுகிறார்.

பவுல் லீதியாளுக்கும், அவள் வீட்டாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அதேபோல், சிறைச்சாலைக்காரனுக்கும் அவன் வீட்டாருக்கும் பிரசங்கித்தார். அவர்களுடைய கீழ்ப்படிதலினாலே சபையானது உலகின் அந்தப்பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டது [அப்போஸ்தலர் 16:16–34].

பவுல் கொலேசே பட்டணத்து சகோதரர்களுக்கு இவ்விதமாக எழுதுகிறார். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். கூடிய ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச வேண்டிய பிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு திருவசனம் சொல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள் [கொலோ 4:2–4].

பல சந்தர்ப்பங்களில் சுவிசேஷம் பிரசங்கிப்பதற்கு கதவுகள் திறக்கப்பட்டாலும், சில சந்தர்ப்பங்களில் கதவுகள் அடைக்கப் படுகின்றன. ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலான அரபு தேசங்கள் சீனா, வட கொரியா போன்ற நாடுகளில் சுவிசேஷம் அறிவிப்பதற்கு கதவுகள் அடைக்கப்பட்டிருக்கின்றன. 1960 களில் சுவிசேஷத்தை அறிவிக்க இந்தியாவுக்கான கதவுகள் அடைக்கப்பட்டதாக எண்ணி பாகிஸ்தானுக்குச் சென்று, அங்கே சபையை ஸ்தாபிக்க நிர்பந்திக்கப் பட்டோம். பின்பு கனடா நாட்டு சகோதரர்கள் இந்தியாவில் ஊழியம் செய்ய அனுமதிக்கப்பட்டதை அறிந்தோம். ஏனென்றால், கனடா காமென்வெல்த் நாடுகளில் அங்கமாயிருந்தது. காலச் சுழற்சியின் போது சட்டங்களில் மாற்றங்கள் ஏற்பட்டதால் நானும் வேறு சிலரும் இந்தியாவில் ஊழியம் செய்ய அனுமதிக்கப்பட்டோம். அதேபோல் முன்பெல்லாம் ஒருநாள் தங்க மட்டுமே விசா வழங்கிக் கொண்டிருந்த பர்மா இப்போதெல்லாம் ஒரு மாத விசா வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த தேசத்தின் சட்டங்களில் ஏற்பட்ட மாற்றம், நாம் கதவுகள் திறக்கப் பட வேண்டுமென்று எதிர்பார்த்தால் அவருடைய பணி செய்யப்பட தேவனால் வழியை உண்டுபண்ண முடியும் எனும் உண்மையை உறுதிப்படுத்துகிறது.

இன்று நான் குறிப்பிட்ட பெரும்பாலான நாடுகளில் கிறிஸ்துவின் சபைகள் இருக்கின்றன. அங்கே ஊழியங்கள் பெருகிக் கொண்டிருக் கின்றன. ஊழியத்திற்கான சவாலான இச்சூழ்நிலையில் சபைகள் மற் றும் குடும்பங்களின் விடாமுயற்சிக்காக அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய உலகில் கோடிக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். இத்தகைய சூழலில் கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்வதென்பது கூடாத காரியமாகும். எனவே, தேவன் கிறிஸ்தவர்கள் பயன்படுத்த புதிய சிறந்த கருவிகளைக் கொடுக்கிறார். கடந்த காலத்தைப் போலவே இப் போதும் நாம் வானொலி, தொலைக்காட்சி மற்றும் இலக்கியம் மூல மாக பெருகிவரும் மக்கள் தொகைக்கு சுவிசேஷத்தை அறிவிக்க முடியும். இன்னும் கூடுதலாக நாம் DVD, CD மற்றும் இணையதளத் தின் மூலமாக சுவிசேஷத்தைப் பரப்ப முடியும். தபால்துறை மூலமாக அதிக புத்தகங்கள் கைப்பிரதிகள் மற்றும் பாடங்களை நாம் ஆவிக்குரிய காரியங்களில் தாகமுள்ளவர்களுக்கு அனுப்பிக் கொடுக்க முடியும். இன்றைய நாட்களில் பல சபைகள் தங்கள் ஆராதனையை இணைய தளத்தின் மூலமாக நேரடியாக ஒளிபரப்புகிறார்கள். மேலும், தங்கள் முந் தைய பிரசங்கங்களை உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளும்படி வாய்ப்புகளை ஏற்படுத்துகிறார்கள்.

தகவல் தொடர்பு சாதனங்களின் அசுர வளர்ச்சி நம் வாழ்நாளிலேயே சுவிசேஷத்தை ஒவ்வொரு தேசத்துக்கும், இனத்துக்கும் எடுத்துச் செல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தும். இனிமேல் நாம் யாரும் சுவி சேஷத்திற்கு கதவு அடைக்கப்பட்டிருக்கிறது, எங்களால் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்குப் போக முடியாது என்று வீட்டில் இருந்து கொண்டு சாக்குபோக்கு சொல்ல முடியாது. இங்கே, உண்மை என்ன வென்றால் ஒருவர் வீட்டிலிருந்து வேலை செய்தாலும் சரி அல்லது உலகத்தின் எதாவது ஒரு பகுதிக்கு நேரில் சென்று சத்தியத்தை அறி வித்தாலும் சரி உலகெங்கும் கதவுகள் திறந்தேயிருக்கின்றன. சுவிசேஷம் எல்லா மனித இனத்துக்கும், வாழும் எல்லா ஆத்துமாவுக் குந்தான். நம் பொறுப்பு தேவன் நமக்கு தந்தருளியிருக்கின்ற கருவி களை எடுத்து திறந்திருக்கிற வாசல்களில் பயன்படுத்துவதாயி ருக்கிறது. உலகம் காத்துக் கொண்டிருக்கிறது, நாம் யாருக்காக காத்துக் கொண்டிருக்கிறோம்?

✝

## எங்கெங்கே கிறிஸ்தவம் வெளிப்படுத்தப்பட வேண்டும்?

1. வீட்டில்
2. தொழிலில்
3. சமுதாயத்தில்
4. ஆதரவற்றோரிடத்தில்
5. தேவனிடத்தில்

அன்பினாலும், தன்னலமற்ற தன்மையாலும்

நேர்மையினாலும், கடும் உழைப்பினாலும்.

நல்லொழுக்கத்தினாலும், பணிவினாலும்

பொறுமையினாலும், உதவியினாலும்.

பயபக்தியினாலும், கீழ்ப்படிதலினாலும்

வெளிப்படுத்த வேண்டும்.

செயலில் கிறிஸ்தவம்

# இலக்கை நோக்கித் தொடருதல்

## Press Toward the Goal

Wayne Barrier



**கி**றிஸ்து இயேசுவுக்குள் **தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (பிலி. 3:14)** என்று அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதினார். பவுல் அதற்கு முன்பாக, பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடுவதாகச் சொல்லுகிறார். இவ்வார்த்தைகள் பவுலால் எழுதப்பட்ட அதே காலகட்டத்தில் தான் அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வந்தது (கொலோ. 1:23) என்று கொலோசெ பட்டணத்து மக்களுக்கு எழுதினார். அதாவது, பவுலின் சுவிசேஷப் பணி சுவிசேஷத்தை யூதரல்லாத உலகத்திற்கும் எடுத்துச் செல்வதாகத் தான் இருந்தது. இப்போது, அப்பணி செய்து முடித்தாகி விட்டது. அப்படியென்றால், பவுல் ஓர் அவசரமான வேலையைச்செய்ய, தான் அழுத்தத்தில் இருப்பது போல் ஏன் பேசினார்? அவர் தன் கடந்த கால வெற்றியைக் குறித்துப் பேசியிருக்க முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. ஏனென்றால், சுவிசேஷத்தைக் கேட்ட எல்லோருமே அதற்குக் கீழ்ப்படியவில்லை. ஆகையால், பவுல் அங்கே, இன்னும் அதிகப்படியான காரியங்களைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது!

அதேபோல் தான், இன்றும் சுவிசேஷத்திற்காக அதிகப்படியான காரியங்கள் செய்யப்பட வேண்டியதாயிருக்கிறது. இதில் வேதனை என்னவென்றால், நியாயத்தீர்ப்பில் தேவனைச் சந்திக்க ஆயத்தமில்லாத எண்ணற்ற மக்கள் மரித்துப்போகிறார்கள் என்பதுதான். இதிலிருந்து நாம் முன்னேறிச் செல்லும் ஊக்கமான காரியத்தை எப்படிப் பெற்றுக் கொள்ள முடியும்? அது எப்படியென்று பவுல் தேவ வசனங்கள் மூலமாக நமக்குப் போதிக்கிறார். நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக

நோக்குங்கள் [பிலி . 3:17] என்று சொல்லியிருக்கிறார். அதன் பின்பு, அவர் முன்னோக்கி நடந்து, ஊக்கத்திற்கு ஆதாரமாக காணப்படும் பல காரியங்களைக் குறித்து கீழ்க்கண்டவாறு விவாதிக்கிறார். அதை சுருக்கமாகக் காண்போம்.

- **நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. இதினிமித்தம் பரலோகத்தின் குடிமக்கள் இங்கு தேவனுடைய ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளுகிறார்கள் [பிலிப்பியர் 3:20].**

- **நம்முடைய அற்பமான சரீரம் மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படும். அந்த ஆசீர்வாதத்தை நாம் எதிர்நோக்க முடியும் [பிலி.3:21].**

- **நாம் எல்லாவற்றையும் குறித்து, நம் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துவதால் கவலையில்லாமல் இருக்கிறோம். அவருடைய பதில் நமக்கு எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தைத் தரும் [பிலி. 4:6,7].**

- **கிறிஸ்துவில் நாம் பெலப்பட முடியும் [4:13]**

- **உண்மையுள்ளவைகளை, ஒழுக்கமுள்ளவைகளை, நீதியுள்ளவைகளை, கற்புள்ளவைகளை, அன்புள்ளவைகளை, நற்கீர்த்தியுள்ளவைகளை நாம் சிந்தித்து, அவைகளின் வாயிலாக ஊக்கத்தையும், பெலனையும், சத்துவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் [பிலி. 4:8].**

இன்று உலகெங்கிலும், சுவிசேஷத்தைப் பரப்ப நாம் தளராமல் முன்னோக்கிச் செல்ல வேண்டும். இப்பணி அவசியமும், அவசரமுமாயிருக்கிறது. ஆகவேதான், பவுல் சுவிசேஷப் பணியில் தன்னுடைய மாதிரியைப் பின்பற்றும்படி மன்றாடுகிறார். நம் தேவன், பரலோகத்தில் கை வேலையல்லாத ஒரு வீட்டையும், அங்கே நாம் வசிப்பதற்கான குடியுரிமையையும் தரப்போகிறார். ஆகவே, நம்மைப்போல, மற்றவர்களும் இந்த மேலான வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக நாம் முன்னோக்கிச் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.

# எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றம்

## Conversion of Ethiopian Treasurer

**அ**வன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்: அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்: மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.

மந்திரி பிலிப்பை நோக்கி : தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

அப்பொழுது, பிலிப்பு பேசத் தொடங்கி இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில் (வனாந்தரத்தில் ) தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது, மந்திரி இதோ தண்ணீர் இருக்கிறதே! நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன? என்றான். (பிலிப்பு எத்தியோப்பிய மந்ததிரியிடம் இயேசுவை குறித்து பிரசங்கித்த போது, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட வேண்டிய அவசியத்தை விளக்கி யிருக்கிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இல்லை யென்றால் மேலே குறிப்பிடபட்டிருக்கும் கேள்வி எதற்காக கேட்கப்பட்டிருக்க வேண்டும்)

அதற்குப் பிலிப்பு, நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை யென்றான்.

அதற்கு மந்திரி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்றான்

அங்கே, மந்திரி இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் பிலிப்பு இவனுக்கு நானஸ்நானங் கொடுத்தான். இவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். அதன் பிறகு மந்திரி பிலிப்பைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். ✝

வசன ஆராய்ச்சி

## I கொரிந்தியர் 4:1-13


**1.** இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக் கொள்ளக்கடவன். 2. மேலும் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம். 3. ஆயினும் நான் உங்களாலேயாவது, மனுஷருடைய நியாய நாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகுவும் அற்பகாரியமாயிருக்கிறது. நானும் என்னைக் குறித்துத் தீர்ப்பு சொல்லுகிறதில்லை 4. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும், அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. 5. ஆதலால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதென்றைக் குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார். அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும். 6. சகோதரரே எழு, தப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டமென்று நீங்கள் எங்களாலே கற்றுக் கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும் நான் உங்கள் நிமித்தம் என்னையும், அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து இவைகளை எழுதினேன்.

7. அன்றியும், உன்னை விசேஷித்தவனாக்கும் படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? 8. இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே; நீங்களே ஆளுகிறவர்களானால் நீங்கள், நலமாயிருக்கும்; அப்பொழுது உங்களுடனே கூட நாங்களும் ஆளுவோமே. 9. எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார். நாங்கள் உலகத்துக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம். 10. நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் புத்திசாலிகள், நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள்; நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர். 11. இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். 12. எங்கள் கைகளினாலே வேலை செய்து பாடுபடுகிறோம்; வையப்பட்டு ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு சகிக்கிறோம். 13. தூஷிக்கப்பட்டு வேண்டிக் கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவுமானோம்.

- எல்லா கிறிஸ்தவர்களும் தங்களை எப்படிப்பட்டவர்களாக எண்ணி கொள்ளவேண்டுமொன்று பவுல் சொல்கிறார்? [4:1]
- நாம் எதற்கு உக்கிராணக்காரர்களென்று பவுல் சொல்கிறார்?[4:1]
- எது ஓர் உக்கிராணக்காரனுக்கு அவசியமாயிருக்கிறது?[4:2]
- ஓர் உக்கிராணக்காரன் யாரைப் பிரியப்படுத்தவேண்டும் ?[4:4,5]
- நாமெல்லாரும் எப்பொது நியாயம் விசாரிக்கப்படுவோம் ?[4:5]
- யார் நம்மை நியாயம் விசாரிப்பார் ?[4:4]
- நியாய விசாரிப்பின் நாளிலே என்ன வெளிபடுத்தப்படும் ?[4:5]
- நம்முடைய புகழ்ச்சி எங்கேயிருந்து வரும் ?[4:5]
- நாம் எதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று பவுல் சொல்கிறார்?[4:6]
- யாரைக் கிறிஸ்தவர்கள் திருஷ்டாந்தமாகப் பார்க்க வேண்டும்? [4:6]
- நாம் ஏன் மேன்மை பாராட்டக்கூடாதென்று பவுல் சொல்கிறார்? [4:7].
- பவுல் தானும் அப்போஸ்தலர்களும் இவ்வுலகத்துக்கும், மனுசருக்கும் எப்படி ஆனதாகச் சொல்கிறார்?[4:9]
- நாங்கள் கிறிஸ்துவின் நிமித்தம் .......... நீங்கள் கிறிஸ்துவில் ........ நாங்கள் .......... நீங்கள் ........... [4:10]
- பவுல்இந்நாள் வரைக்கும் பல பாடுகளைப்பட்டதாக பட்டியலிடுகிறார். உண்மையான பெலன் எங்கேயிருந்து வருகிறது? [4:1113].

**குறிப்பு:** இந்த வசனப்பகுதியில் பவுல் கொரிந்தியர்களை அவர்களுடைய பெருமைக்காக கடிந்து கொள்கிறார். 1–5 வசனங்களில் தாங்கள் யாருடைய ஊழிக்காரர் என்பதை கொரிந்தியருக்கு நினைப்பூட்டுகிறார். இப்படி எல்லோரும் தேவனுடைய ஊழியக்காரராக இருக்கிறபடியால் ஒருவரைக்குறித்து மற்றொருவர் தீர்ப்பு சொல்லாதீர்கள் என்று அவர் சொல்கிறார். மேலும், பவுல் மற்றொருவருடைய ஊழியக்காரரை அல்லது வேலைக்காரரை தீர்ப்பு செய்வதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை என்று சொல்கிறார். கடைசி நாளில் தேவனே நம் எல்லோருக்கும் தீர்ப்பு செய்வார் என்பதை பவுல் இவ்வசனப்பகுதியில் தெளிவுபடுத்தியிருக்கிறார். ✝

## சத்திய வழி




- ❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி (ஊழியர்)**
- ❖ ரேடியோ : ஞாயிறு - வெள்ளி 5.30 p.m.
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்



- ❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜூனன்**
- ❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ❖ ரேடியோ : 31 Meter Band (சனி மாலை 5.30 5.45)
  Srilanka all Asia Service




<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை




- ❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**
- ❖ தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
- ❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- ❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | TV | வெள்ளி | காலை | 7:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |



## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.


**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள்** (Tracts) **வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**


E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382

P.R. **சுவாமி** : 098440 70763

P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420

B. **அர்ஜுனன்** : 994435 58041

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ______________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________




THE VOICE OF TRUTH INTERNATIONAL Volume - 39 சத்தியத்தின் குரல்




# ✯ சத்தியத்தின் குரல் ✯


## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Bonnie Rushmore
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**


# 5 நிமிட வேத பாடம்

## சத்தியம் அல்லது விளைவுகள்

Paula Bates

1. கர்த்தாவே உம்முடைய கண்கள் ........ அல்லவோ நோக்குகின்றது; அவர்களை அடிக்கிறீர், ஆனாலும் அவர்களுக்கு நோகாது; அவர்களை ............, ஆனாலும் புத்தியை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள்; தங்கள் முகங்களை ........... கெட்டியாக்கி, திரும்பமாட்டோம் என்கிறார்கள் ( எரேமியா 5:3).

2. நான் .......... திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம் பண்ணுவேன்; ......., ......நரகம் என்றும்............ கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் ( சகரியா.8:3).

3. இதற்காகவே நான் பிரசங்கியாகவும் ............, ........... விசுவாசத்தையும் .................. விளங்கப்பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்; நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் (1தீமோத்தேயு 2:7).

4. கிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் ................ வந்தவர். ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் ............. வந்தவர். ..........., ......... ஆவியானவரே சாட்சி கொடுக்கிறார் (I யோவான்5:6).

5. தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை ............ இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய .............., .......... தூணும் ஆதாரமுமாயிருக்கிறது ( I தீமோத்தேயு 3:15).

6. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் ............ சோர்ந்துபோகாமல் ............ செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து ............. கீழ்ப்படியாதிருக்கிறவர்களுக்கோ ........................ வரும் ( ரோமர் 2:6-8).

For Further Information, Please Contact :